# யா/நீர்வேலி றோ.க.த.க.பாடசாலை

# நூற்றாண்டு விழாச் சிறப்பு மலர்

## 1905 - 2005



வெளியீடு - 2007

# யா/திருநெல்வேலி
# ஞான. ச. தி. க. பாடசாலை

# நூற்றாண்டு விழாச்
# சிறப்பு மலர்

## 1905 – 2005
(வெளியீடு – 2007)

# யா/நீர்வேலி
# றோ. க. த. க. பாடசாலை

# நூற்றாண்டு விழாச் சிறப்பு மலர்

## 1905 – 2005

## (வெளியீடு – 2007)

# நூல் குறிப்பு


நூல் :- நீர்வேலி யா/ றோ. க. த. க. பாடசாலையின்
நூற்றாண்டு விழாச் சிறப்பு மலர்

தொகுப்பு :- மலர்க் குழு

பதிப்பு :- முதற் பதிப்பு 2007

தாள் :- 70 கிராம், வெள்ளைத் தாள்

எழுத்து :- 12 Pt., பாமினி

பக்கம் :- xxix, 74 பக்கங்கள்

பதிப்பகம் :- ஷாம்பவி பதிப்பகம்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
077 6184425

# யா/நீர்வேலி
# றோ. க. த. க. பாடசாலை

*பாடசாலை மகுட வாசகம்*

## ''கற்க கசடற''

**நோக்கக்கூற்று**

மாணவர் ஆற்றல்களையும், பொருத்தமான கற்றல் வளங்களையும் ஒருங்கிணைத்து உலக சவால்களை எதிர் கொண்டு ஆரம்ப, இடைநிலைக் கல்வியினூடாக சுபிட்சமான எதிர்காலத்திற்கு பிள்ளைகளை இட்டுச்செல்லல்.

**பணிக்கூற்று**

❖ எமது பாடசாலையின் முழு வளர்ச்சிக்கு வேண்டிய வளங்களைப் பாடசாலைச் சமூகத்தினூடாக ஒருங்கிணைத்தல்.

❖ பாடவிதான, இணைப்பாட விதானச் செயற்பாடுகளைத் திட்டமிட்டுத் தொடர்ச்சியான மேற்பார்வையினூடாக மாணவர்களின் ஆற்றல்களை வளர்த்தல்.

❖ பாடசாலை சார்ந்த சங்கங்கள், மன்றங்கள் மற்றும் அமைப்புக்களின் மூலம் பாடசாலையின் வளர்ச்சிக்கு உச்ச பயனைப் பெற்றுக்கொடுத்தல்.

# தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே
வானமளந்த தனைத்து மளந்திடும்
வண் மொழி வாழியவே!

ஏழ் கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசை கொண்டு வாழியவே
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே!

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே
வான மறிந்த தனைத்தும் மறிந்து
வளர் மொழி வாழியவே!

மகாகவி சுப்பிரமணிய பாரதியார்



# பள்ளி வாழ்த்துப் பண்


வாழ்கவே வாழ்கவே
வளம் நிறைந்து வாழ்கவே
பார்புகழும் நற்றமிழர்
பண்பு போற்றும் கலையகம்
ஏர் மிகுந்தோர் உறவில்வளர்
ஒளி நிறைந்த கலையகம்
நீர்வை வளர் றோமன்
கத்தோலிக்க வித்யாலயம்

பல்கும் எழில் கல்விதனை
வளர்த்திட நம்குலமகள்
மல்கு புகழ்கபிரியேல்
படைத்த எங்கள் கலையகம்
சொல் இனிய மழலைகளின்
கல்வி கலை வளரவே
எல்லையற்ற இறைவனருள்
என்றும் பெற்று வாழ்கவே

தெள்ளு தமிழ் ஆங்கிலம் எண்
விளையாட்டு விஞ்ஞானம்
உள்ளமதை நிறைத்திடும் நல்
உபதேசம் ஆன்மீகம்
பல் துறையோடாடலும் பண்
பயன் பலசேர் தொழில்நுட்பம்
அள்ளி அமுதெனவூட்டும்
அன்னையே நீவாழ்கவே

அதிபருடன் ஆசான்கள்
அன்னை பிதா பெரியோரை
துதி செய்வோம் தூய்மைநெறி
துணை யெனவே போற்றிஎன்றும்
அறிவுடனே நல்ஒழுக்கம்
அன்பு பண்பு நிறைந்து மேன்மை
நெறியுடனே நாமும் வாழ
நலம் அருளும் அன்னை நீயே.

இராகம்: அமிர்தவாசனி




**பாடசாலைக் கிடைப்படம்**

(நில அளவைத் திணைக்களம்)

# எங்கள் பாடசாலை முதல்வர்




**திரு. ச. வேலழகன்**

Tr.Primary B.Ed.,S.L.P.S

# மலரின் இதழ்கள்


| | | |
|---|---|---|
| 01. | ஆசியுரைகள் | i - iv |
| 02. | வாழ்த்துரைகள் | v - xxvi |
| 03. | அதிபர் அறிக்கை | xxvii |
| 04. | பாடசாலை வளர்ச்சிப் பாதையிலே | 02 |
| 05. | புத்தகங்கள் மனிதவாழ்வின் நல்ல பொக்கிசங்கள் | 08 |
| 06. | பாடசாலையின் நூற்றாண்டு விழாக்குழு | 10 |
| 07. | பாடசாலைத் தேவைகள் | 11 |
| 08. | பாடசாலை அபிவிருத்திச் சங்கம் | 12 |
| 09. | மாணவர் தலைவர்கள் | 13 |
| 10. | அன்பின் பண்புகள் | 14 |
| 11. | வாசிப்பு மனிதனை முழுமையாக்குகின்றது | 16 |
| 12. | நீர்வையின் சிறப்பு | 18 |
| 13. | சிறுவயதிலே கணணிக் கல்வி | 19 |
| 14. | சொற் புதிர்கள் | 21 |
| 15. | மறதிக்கு | 22 |
| 16. | மாணவர் நன்னடத்தை | 23 |
| 17. | விஞ்ஞானக் கல்வி | 24 |
| 18. | வாசிப்பின் பெருமை | 25 |
| 19. | பெரியோரைப் பேணல் | 26 |
| 20. | இலங்கையின் இசை வளர்ச்சி | 27 |
| 21. | முதியோர் பெருமை | 29 |
| 22. | நீர் வீழ்ச்சி | 31 |
| 23. | தமிழின் சிறப்பு | 35 |
| 24. | விஞ்ஞான விளக்கம் | 37 |
| 25. | ஐந்து | 39 |
| 26. | கேடில் விழுச் செல்வம் | 41 |
| 27. | பொது அறிவு | 43 |
| 28. | குருவி | 45 |
| 29. | விஞ்ஞான வளர்ச்சி | 46 |
| 30. | எமது கிராமம் | 48 |
| 31. | சமூக அசைவில் விளையாட்டின் பங்கு | 51 |
| 32. | ஸ்ரீல ஸ்ரீ ஆறுமுகநாவலர் | 53 |
| 33. | சுவாமி விபுலானந்தர் | 57 |
| 34. | அன்னையின் அன்பு | 58 |
| 35. | பத்திரிகை | 61 |
| 36. | The Importance of English | 63 |
| 37. | இன்பம் எங்கே | 65 |
| 38. | புலமைப் பரீட்சையில் | 67 |
| 39. | பாடசாலைக்கு உதவியோர் | 67 |
| 40. | வெற்றியீட்டியோர் | 71 |

# ஆசிச் செய்தி



"அன்னயாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"

பலவளங்களும் நிறைந்த நீர்வைக் கிராமத்தின் வடபால் கல்விச்சுடரொளி வீசும் றோ. க. த.க. பாடசாலை கடந்த நூற்றாண்டுகளாகச் செய்து வரும் கல்விப்பணி கிராமத்திற்கே பெருமை தருவதாகும்.

கடந்த நூற்றாண்டு காலத்தில் நூற்றுக்கணக்கான மாணவச் செல்வங்களைக் கல்வியில் வளர்த்தெடுத்த இப்பாடசாலை ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலே றோமன் கத்தோலிக்க திருச்சபையினரால் ஆரம்பிக்கப்பட்டதாகும்.

ஆரம்பத்தில் ஆண்டு 5 வரை மட்டும் இருந்த சிறு பாடசாலை இன்று ஆண்டு 9 வரை வகுப்புக்கள் கொண்ட மாடிக்கட்டிடத்துடன் நீர்வேலி குறுக்கு வீதியிற் சிறந்த கல்விக்கூடமாக ஒளிவீசித் திகழ்கின்றது.

இன்றைய நூண்றாண்டு விழா அதிபராகக் கடமையாற்றும் பெருமைக்குரிய அதிபர் திரு. ச. வேலழகன் அவர்களது முயற்சியாலும், பாடசாலை அபிவிருத்திச்சங்கம், பெற்றோர், ஆசிரியர், மாணவர், நலன்விரும்பிகள் ஆகியோரின் ஒத்துழைப்பு, ஊக்கத்தினாலும் நூற்றாண்டு விழா கொண்டாடப்படும். இவ்வேளையில் எதிர்காலத்தில் பலவளங்களுடனும் பல்கலைகளையும் வளர்த்து நற்பணியாற்ற எம்மனநிறைவான வாழ்த்துக்களையும் ஆசிகளையும் மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*வாழ்க! வளர்க! நற்பணியால் உயர்க!*

சிவஸ்ரீ. கு. தியாகராஜக் குருக்கள்
(மணி ஐயா)

செல்லக் கதிர்காம கோவில்
நீர்வேலி.



# ஆசியுரை

**"எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும்"**

நூற்றாண்டு விழாக்காணும் றோ. க. த. க. பாடசாலை நீர்வேலியில் பல்துறை அறிஞர்களை உருவாக்கிய பெருமைக்கு உரியதாகும். குறிப்பாக நீர்வேலி வடக்கு, சிறுப்பிட்டி மக்களை கல்வியில் சிறந்த பிரஜைகள ஆக்கிய மூலவேர் மேற்படி பாடசாலையாகும். ஒருபாடசாலை ஆசான் அமர்ந்து கருணை புரியும் ஆலயம் என்று கூறலாம். நூறு ஆண்டுகள் என்பது ஒரு நிறைவான காலமாகும். இக்காலம் வரை கல்வித்தொண்டில் சிறந்து விளங்கிய ஸ்தாபனம் மேலும் மேலும் சிறப்படைந்து சமூகத்திற்கு உதவ வேண்டும் என இறைவனை வேண்டுகின்றேன். மேலும் இக்காலத்தில் இப்பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் பெருமைக்குரியவர்கள். அவர்கள் நல்வாழ்வும் நற்பயனும் பெற வாழ்த்துகிறேன். இப்பாடசாலையை உருவாக்கிய நல்ன்விரும்பிகளை இந்நேரம் நினைவு கூருவது பொருத்தமானது. மேலும் பல்லாண்டு பல்லாண்டு வாழ்ந்து சிறப்படைய வேண்டும் என்று ஆசி கூறுகின்றேன்.

*"வளர்க கல்வி வாழ்க பாடசாலை"*

**சிவஸ்ரீ சா. சோமதேவக் குருக்கள்**

**அரசகேசரி பிள்ளையார் தேவஸ்தானம்**
**நீர்வேலி.**

# ஆசியுரை




நீர்வேலி றோமன் கத்தோலிக்க பாடசாலை ஆரம்பித்து அதன் வளர்ச்சியில் ஒரு நூற்றாண்டை நிறைவு செய்துள்ளது. இக்காலத்தில் கலாசாலை அதிபர், ஆசிரியர் குழாம், மாணவமாணவிகள் விழாவெடுத்துக் கொண்டாடுகிறார்கள். இது ஒரு மகிழ்வான நிகழ்வாகும்.

இப்பாடசாலை ஆரம்பித்த காலத்தில் நீர்வேலி சங்கரபண்டிதர் திண்ணைப் பள்ளிக்கூடத்தைத் தவிர வேறு எந்தக் கல்விச் சாலையும் கிடையாது. இப்பாடசாலையை ஆரம்பித்த ஒரு நோக்கம் அக்கால சிறுவர் சிறுமியருக்கு ஆரம்பகல்வியை தன்னும் ஊட்டவேண்டும். என்கின்ற நன்நோக்கமாகும். இதற்கு இக்கிராம மக்கள் நன்றியறிதலுள்ளவர்களாக இருக்க வேண்டும். கால ஓட்டத்தில் சமுக சமய சூழ்நிலைக்கேற்ப கலாசாலை வளர்ச்சியடைந்து வருகின்றது. குறுகிய நிலப்பரப்புக்குள் அமைந்துள்ள பாடசாலையில் நெருக்கடியைப் பொருட்படுத்தாமல் அதிபரும் ஆசிரியர்களும் விளையாட்டுப் போட்டிகள், பொங்கல் விழா, புகுமுக மாணவர்கள் கால்கோள்விழா முதலிய பலவிழாக்களை சிறப்பாக நடத்துகிறார்கள் அது பாராட்டுக்குரிய விஷயமாகும். இன்னும் இப்பாடசாலை அதிபரும், பா. முன்னேற்றச் சங்கமும், பெற்றோர்களும் இணைந்து பாடசாலை வளர்ச்சிக்காக ஆகவேண்டியவற்றை முன்னெடுத்து கல்லூரி அந்தஸ்துக்கு கொண்டுவர எல்லாம் வல்ல விநாயகர் திருவருள் கிடைக்க வாழ்த்துகிறோம்.

இப்படிக்கு
**சிவஸ்ரீ ஆ. சந்திரசேகரக் குருக்கள்**

நீர்வேலி,
வாய்க்கால் தரவை
பிள்ளையார் தேவஸ்தானம்.



# ஆசிச்செய்தி

இலங்கைத் தீவின் மகுடமாகத் திகழும் யாழ் மண்ணில் இயற்கை எழில் கொஞ்சும் நீர்வேலிக் கிராமத்தின் சிறப்பை எடுத்தியம்பும் நீர்வேலி றோ. க. பாடசாலை, நூறு ஆண்டுகள் நற்பணியாற்றி, விழாக்காணும் இனிய வேளையிலே, நூற்றாண்டு விழா சிறப்பு மலருக்கு வாழ்த்துக் கூறுவதில் உள்ளம் பூரிக்கின்றது.

யாழ் கத்தோலிக்கத் திருச்சபை வரலாற்றைப் புரட்டிப் பார்க்கின்ற போது ஆரம்ப காலந்தொட்டு நற்செய்திப் பணிபுரியப் பயன்படுத்தப்பட்ட ஊடகங்களில் ஒன்றாக கத்தோலிக்கத் தேவாலயங்களுக்கு அருகாமையில் பாடசாலைகள் நிறுவப்பட்டது. நீர்வேலிப்பங்கில் 42 வருடங்கள் இறைபணி புரிந்த சுவாமி ஞானப்பிரகாசர் 1905இல், தனது அயராத முயற்சியால் பரலோக அன்னை ஆலயப் பங்குமக்களின் நன்மை கருதி நீர்வேலி றோ. க. பாடசாலை நிறுவப்பட்டது. முதல் தலைமையாசிரியராக கதிரவேல் உபாத்தியார் நியமிக்கப்பட்டார். காலப்போக்கில் அனைத்து மதமாணவர்களும் உள்வாங்கப்பட்டு, பாடசாலை பல வழிகளிலும் வளர்ச்சியடைய ஆரம்பித்தது. 1987, 1995 காலப்பகுதிகளில் சேதமடைந்த இப்பாடசாலை மீண்டும் திருத்தியமைக்கப்பட்டு துரித வளர்ச்சியை நோக்கிப் பயணிக்கிறது.

எமது எதிர்காலத் தூண்களாகிய பிள்ளைச் செல்வங்களை கல்வியறிவிலும், ஆன்மீக அறிவிலும், ஒழுக்கத்திலும் சிறந்தோங்க இப்பாடசாலை வழிசமைத்தது. இந்தவகையில் நீர்வேலி றோ.க.பாடசாலை நீர்வேலிக் கிராமத்திற்கு தாராள நன்மைகளை ஆற்றியுள்ளது என்ற வாக்கு பொய்யாகாது. செல்வங்களில் சிறந்த செல்வம் கல்விச் செல்வம் என அறிஞர்கள் போற்றுவர். இச்செல்வத்தை இறைசெய்தியோடு கலந்து ஊட்டிய பெருமை இப்பாடசலைக்கு உரியது.

நூற்றாண்டு விழா மகிழ்வில் திளைத்திருக்கும் நாம் இப்பாடசாலையை நிறுவிய நிறுவுனரையும், இப்பாடசாலையின் வளர்ச்சிக்காக தம்மை அர்ப்பணித்த அனைத்து நல்லுள்ளங்களையும் நினைத்துக்கொள்வோம். நூற்றாண்டு விழாக்காணும் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள் அனைவரையும் உளமார வாழ்த்தி, இப்பாடசாலையானது தனது மகத்தான பணியில் சிறந்து விளங்கி பெருமை சேர்க்க வாழ்த்தி நிற்கிறேன்.

அருட்திரு எஸ். செபநேசரட்ணம்
பங்குத் தந்தை

உரும்பிராய்.



# பாராட்டி மகிழ்கின்றோம்

ஒரு குழந்தையின் வளர்ச்சியில் பாடசாலையில் மட்டும்பெறும் கல்வி ஒரு பகுதி செல்வாக்கினையே செலுத்துகின்றது. இதனால்தான் ஜோர்ஜ் சந்தானாய (George Shantanaya) என்பார் "தன் கல்விக்கு பள்ளிக்கூடத்தை மட்டுமே நம்பியிருக்கும் குழந்தை முழுமையான கல்வியறிவு பெறாத குழந்தையாகத்தான் உருவெடுக்கும்" என் கூறி நின்றார்.


ஒரு பிள்ளையின் முழுமையான கற்றலுக்கு மூன்று அத்திபாரங்கள் தேவைப்படுகின்றன என்றார் கோத்ரால் என்ற அறிஞர் நிறையப் பார்க்க வேண்டும் நிறையப் படிக்க வேண்டும் நிறைய கஸ்டங்களை அனுபவிக்க வேண்டும். என்பவையே அந்த அத்திபாரங்கள் என அவர் விளக்கி நின்றார். ஆம் அது உண்மைதான்.

எமது தேசத்தில் தற்பொழுது சமூக பொருளாதார கலாச்சார மாற்றங்கள் மிக விரைவாக நிகழ்ந்து வருகின்றன. இவ்வாறான மாற்றங்களுக்கு ஏற்ப எமது மாணவர் சமூகம் தம்மை இயைவு படுத்திக் கொள்ள வேண்டிய பொறுப்பு அவர்களுக்கு இருப்பதைப் போலவே எமது இதுவரைகால வளர்ச்சிப்படிகளையும் நாம் பட்ட கஸ்டங்கள் இழப்புக்களையும் நாம் மறக்காது இருப்பதோடு எமது எதிர்கால சந்ததிக்கும் அவற்றை ஆவணமாக வரலாற்று ஆவணமாக கையளிக்க வேண்டிய பொறுப்பும் எங்களைச்சேர்ந்ததே. இங்கே அப்பொறுப்பு இந்த நூற்றாண்டு விழா மலரின் ஊடாக ஓரளவு நிறைவேற்றப்பட்டிருக்கின்றது என்பது மகிழ்ச்சி தரும் விடயமாக உள்ளது.

சஞ்சிகை ஒன்றின் வெளியீடு என்பது இலகுவான ஒரு விடயமல்ல என்பதனை நான் நன்கு அறிவேன் ஒவ்வொரு வெற்றிக்கும் பின்னால் வெற்றிகிடைக்காத பல வருட உழைப்பு மறைந்து கிடக்கின்றது என்றார் பொப் பிரௌவ்ன் என்ற பெரியார். அந்த வகையில் பலரது தியாகங்களும் இழப்புக்களுமே இந்த மலராக உருவெடுத்து நிற்கிறது-சாதனையாக எழுந்துநிற்கின்றது. இங்கே சுவாமி விவேகானந்தரது கூற்று ஒன்றைக் குறிப்பிடுவது பொருத்தமானதாக இருக்கும் என கருதுகின்றேன். "மாபெரும் தியாகங்கள் மூலமே மாபெரும் சாதனைகளை சாதிக்க முடியும்" என்றார் சுவாமி விவேகானந்தர். அந்த வகையில் இங்கே இந்த நூற்றாண்டு மலரின் பிறப்பிற்காக தம்மை அர்ப்பணித்த அனைத்து நல் இதயங்களையும் பாராட்டி நிற்கின்றேன் வாழ்த்தி நிற்கின்றேன் அதனூடாக நானும் மகிழ்ந்து நிற்கின்றேன்.

நன்றி!

அன்புடன்
திரு. ஜீ. ஜீ. கஜேந்திரகுமார் பொன்னம்பலம்



# வலிகிழக்கு பிரதேச செயலர்
# உயர்திரு சி. ஏ. மோகன்ராஸ் அவர்கள்
# வழங்கிய வாழ்த்துச் செய்தி

யா/ நீர்வேலி றோ. க. த. க. பாடசாலை நூறாண்டுகள் கல்விப்பணியாற்றி நூற்றாண்டு விழாக் கொண்டாடுவதையும், சிறப்புமலர் வெளியிடுவதையும் பெரிதும் மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றேன்.


குறித்த மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன். 1905ம் ஆண்டு கத்தோலிக்க மதபிரசாரத்தை மையமாகக் கொண்டு சுவாமி ஞானப்பிரகாசம் அவர்களால் ஒரு அதிபரினதும், ஆசிரியர் ஒருவரினதும் சேவையோடு ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை இன்று பன்னிரண்டு ஆசிரியர்களினதும் சேவையுடன் ஆண்டு 9 வரை மாணவர்களுக்கு கல்விப் பணியாற்றிவருவது பாராட்டுக்குரியதே.

பௌதிகவளம் குறைந்த நிலையிலும், காலத்துக்குக்காலம் ஏற்பட்ட இடிபாடுகளையும், இடர்பாடுகளையும் தாங்கி கல்விப்புணியாற்றிய, ஆற்றிக் கொண்டிருக்கின்ற அதிபர், ஆசிரியர்களின் பணி போற்றப்பட வேண்டியதே.

2005ம் ஆண்டு நிகழவேண்டிய நூற்றாண்டுவிழாவையும், மலர் வெளியீட்டையும் நாட்டின் அசாதாரண நிலைமைகாரணமாகப் பிற்போட்டு இவ்வாண்டு நிகழ்த்துகின்ற அதிபர், ஆசிரியர்கள், அபிவிருத்திச்சங்கம், பழைய மாணவர் சங்கம் என்பனவற்றைப் பாராட்டுவதோடு, பாடசாலை மேன்மேலும் வளர்ச்சியடைந்து கல்விமான்களையும், நற்பிரசைகளையும் உருவாக்க வேண்டுமென இறையருளைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

சி. ஏ. மோகன்றாஸ்
பிரதேச செயலாளர்
கோப்பாய்.

# வாழ்த்துச் செய்தி



2005ம் ஆண்டில் நூற்றாண்டை நிறைவு செய்து தனது கல்விச் சேவையால் உயர்ந்து நிற்கும் யா/ நீர்வேலி றோ. க. த. க. பாடசாலையின் நூற்றாண்டு விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். 1905ம் ஆண்டு கிறிஸ்தவ மதத்தினரால் ஒரு ஆசிரியருடன் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை பல ஆண்டுகள் போர்ச்சூழலால் பாதிக்கப்பட்டு இன்று ஆண்டு 9 வரை 12 ஆசிரியர்களுடன் குறைந்தளவு பௌதீக வளத்துடனும் மிகவும் துடிப்புடன் செயற்பட்டுக் கொண்டிருப்பதற்கு காரணமான அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர் சங்கத்தினர் போன்றோர் பாராட்டுக்குரியவர்கள்.

இப்பாடசாலையானது அறிவியல் கல்வியுடன் ஆன்மீகக் கல்வியையும் சேர்த்து வழங்கக்கூடிய வகையில் பல பிரசித்தி பெற்ற ஆலயங்களின் சூழலில் அமைந்திருப்பது கிடைத்தற்கரிய தொன்றாகும்.

அமைதி, பொறுமை, திறமை கொண்ட அதிபர் திரு. எஸ். வேலழகன் அவர்களுடைய காலத்தில் இந்நூற்றாண்டு மலர் வெளியிடப்படுவது இப்பாடசாலையின் எதிர்கால வளர்ச்சிக்கு கட்டியம் கூறுவதுபோன்றுள்ளது.

மிகவும் இக்கட்டான காலகட்டத்திலும் சாதனை புரியவிளையும் இப்பாடசாலை சோதனைகளைக் கடந்து சாதனை புரிந்து கல்விமான்களையும் நற்பிரசைகளையும் உருவாக்க வேண்டுமென்று இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

திரு. த. நடராசா
வலி கிழக்கு பிரதேச சபை,
செயலாளர்.

புத்தூர்.
06.06.2007

# வாழ்த்துச் செய்தி



மக்களது வாழ்வு ஈடேற்றம் காண்பதற்கு இறை ஆலயங்கள் எவ்வளவு அவசியமோ அந்த அளவிற்கு அறிவாலயங்களும் அவசியமானவையாகும். அந்த வகையிலே இங்கு கல்விப் பணிபுரிந்து அறிவையும், அறத்தையும் வளர்க்கும் யா/ நீர்வேலி றோ. க. த. பாடசாலை இன்று நூற்றாண்டு விழா எடுத்து பெருமை கொள்கிறது.

இப்பாடசாலையினது வளர்ச்சியில் மிகுந்த அக்கறை காட்டிவரும் அதிபர்கள், ஆசிரியர்கள், அன்பர்கள் போற்றப்பட வேண்டியவர்கள்.


இவ்வறிவாலயமானது சகல வளங்களும் பெற்று நிறைந்த கல்விச் செல்வத்தை வழங்கி நூற்றாண்டு நிறைவு கைங்கரியத்தை நல்ல முறையில் நிறைவு செய்ய இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

நன்றி

திருமதி. அஞ்சலிதேவி சாந்தசீலன்

உதவிப்பிரதேச செயலர்,
கோப்பாய்.
(2005)

# கோப்பாய்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் அவர்களின் வாழ்த்துச் செய்தி



யா/ நீர்வேலி றோ. க. த. க. பாடசாலை தனது நூற்றாண்டு நிறைவு விழா எடுப்பதனையும் அதற்கான அதற்கான மலரினை வெளியிடுவதனையும் கண்டு பேருவகையடைகின்றேன்.

றோமன் கத்தோலிக்க மதவளர்ச்சியின் பேறாக உருவாக்கப்பட்ட இப்பாடசாலை சிறியதொரு கொட்டகையில் ஆரம்பித்து இன்று நிலைத்து நிற்கும் கட்டடத்தொகுதியைக் கொண்ட ஒரு பாடசாலையாக வளர்ச்சியடைந்து வந்துள்ளது. மேலும் இப்பாடசாலை பல்வேறு மாணவர்களை புலமைப்பரிசில் பரீட்சைகளிலும் சித்திபெறவைத்து கலாச்சார விழுமியங்களையும் பேணிவந்துள்ளது.

மேலும் இப்பாடசாலைக்கு பழையமாணவர்கள், பெற்றோர் நலன்விரும்பிகள் வழங்கும் உதவிகளால் மேலும் சிறப்படைந்து வருகிறது.

மேன்மேலும் இப்பாடசாலை வளர்ச்சி பெற்று பயனுறுதிமிக்க நற்பிரசைகளை உருவாக்கி உயர்ச்சி பெறவேண்டுமென இந்நூற்றாண்டு விழாவில் வாழ்த்துகின்றேன்.

நன்றி!

திரு. இ. சிவஞானசுந்தரம்

கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
கோப்பாய்.



# வாழ்த்துச் செய்தி

"வயிற்றுக்குச் சோறிட வேண்டும் - இங்கு
வாழும் மனிதருக்கு கெல்லாம்
பயிற்றிப் பல கல்வி தந்து இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்"

என்று முழங்கிச் சென்றான் புரட்சிக் கவிஞன் பாரதி, இந்த வகையில் நமது தேசத்தின் எதிர்காலச் சிற்பிகளை உருவாக்குகின்ற கலைப் பயிற்சிக்கூடமாக விளங்குகின்ற பாடசாலைகள் காலநீரோட்டத்தின் போக்குகளுக்கு ஏற்ப மனித வளத்தினைச் செழுமைப்படுத்தி முழுமைப்படுத்துகின்ற பணியினை செவ்வனே நிறைவேற்றிக் கொள்ளுதல் அவசியமாகும். மனிதரிடம் மறைந்துள்ள அறிவு, ஆற்றல், மனப்பாங்கு என்பனவற்றை வெளிக்கொணரச் செய்தல் என்ற கல்வி இலக்குக்கு ஏற்ப பாடசாலைகள் மாணவர்களின் தனியாள் வேறுபாடுகளுக்கு முக்கியத்துவமளித்து அவர்களின் ஆற்றல்கள் வெளிக்கொணரப்படுவதற்கு வழியமைத்துக் கொள்ளும் முயற்சிகளில் ஈடுபடுகின்றன.

இந்த வகையில் நீர்வேலி றோமன்கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை கடந்த ஒரு நூற்றாண்டு காலமாக சமூகத்துக்கு பெருந்தொண்டாற்றி வருகின்றது. பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தில் றோமன்கத்தோலிக்க சமயத்தை பரப்பும் நோக்கோடு ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை காலப்போக்கில் சைவசமய மாணவர்களை தன்னகத்தே உள்ளெடுத்து வளரலாயிற்று. இன்று சைவசமய மாணவர்களையே பெரும்பான்மையாகக் கொண்டு கல்விப்பணி ஆற்றிவருகின்றது.

நீர்வேலிக்கிராமத்தில் அமைந்துள்ள பாடசாலைகளில் சனச்செறிவு மிகுந்த சூழலில் அமைந்துள்ள பாடசாலை இதுவேயாகும். தரம் ஒன்று முதல் தரம் ஒன்பது வரை வகுப்புக்களைக் கொண்டுள்ள இப்பாடசாலை தரம் பத்து வகுப்புக்கு எமது அத்தியார் இந்துக்கல்லூரிக்கு மாணாக்கர்களை வழங்கிக் கொண்டிருக்கின்றது. இவர்கள் கல்வியுடன் ஒழுக்கமும் நிரம்பிய மாணவர்களாக எமது கல்லூரியில் கால் பதிப்பதிலிருந்து றோ.க.த.க. பாடசாலையின் ஒழுக்க விழுமியத்தை எம்மால் உணரமுடிகிறது.

இந்த வகையில் கடந்த 100 ஆண்டுகளாக பல்லாயிரக்கணக்கான புத்திஜீவிகளை - ஒழுக்க சீலர்களை உருவாக்கிய பெருமை நீர்வேலி றோ.க.த.க. பாடசாலைக்கு உண்டு. இன்று பாடசாலையின் மைந்தர்கள் பலர் தாய் நாட்டிலும் உலகின் பல்வேறு நாடுகளிலும் பரந்து வாழ்கின்றனர். அவர்களின் சேவைகளால் நீர்வேலிக் கிராமம் வளம் பெற்றுவருகின்றது. அதிக வளங்களற்ற கிராமப்புறப் பாடசாலைகளில் மலர் வெளியீடு என்பது ஒரு வரலாற்றுச் சாதனை ஆகும். கடந்தகால வரலாறுகளையும் நிகழ்கால செயற்பாடுகளையும் எதிர்கால சந்ததியினருக்குக் கையளிக்கும் இப்பாடசாலையின் வரலாற்று ஆவணம் இம்மலராகும். இந்த வகையில் இம்மலர் ஆக்கத்திற்கு வழிவகுத்த அதிபர், ஆசிரியர், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர், பழைய மாணவர் சங்கத்தினர் அனைவருக்கும் நீர்வேலியின் மூலாதாரப் பாடசாலை என்ற வகையில் அத்தியார் இந்துக் கல்லூரியின் நல்வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு. இ. குணநாதன்**
(அதிபர்)

யா/அத்தியார் இந்துக் கல்லூரி
நீர்வேலி.



# வாழ்த்துச் செய்தி

யா/ நீர்வேலி றோ. க. த. க. பாடசாலை தனது நூற்றாண்டு நிறைவு விழாவினைக் கொண்டாடு வதனையிட்டு மலரவிருக்கும் சிறப்பு மலருக்கு பாராட்டுரை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

ஒரு பாடசாலை நூற்றாண்டு விழா காண்பதென்பது அதன் நீண்ட பாரம்பரியத்தையும் நெடிதுயர்ந்த வளர்ச்சியையும் எடுத்துக் காட்டுவதாகும். பழமையும் பெருமையும் வாய்ந்த இப்பாடசாலை நீர்வேலி வாழ் மக்களுக்கு கல்வி வளர்ச்சியில் தன்னிகரற்ற பணியாற்றி வருகின்றமை போற்றுதற்குரியதாகும்.

எமது பாடசாலையாகிய யா/ நீர்வேலி சி. சி. த. க. பாடசாலையின் சகோதர அணியக் குடும்பப் பாடசாலையாக விளங்கும் யா/ றோ. க. த. க. பாடசாலை வளர்த்தெடுத்த வாரிசுகள் நாட்டின் பல பாகங்களிலும் உலகநாடுகளிலும் பரந்து நிமிர்ந்து நிற்கின்றார்கள் என்று கூறிக் கொள்வதில் பெருமிதமடைகின்றேன், மனமகிழ்வுறுகின்றேன்.

இன்றைய யா/ நீர்வேலி றோ.க.த.க. பாடசாலையை அணிசெய்கின்றவர் திரு. ச. வேலழகன் அதிபர் அவர்கள். நல்ல முகாமை உடையவர். தனது அறிவு, திறன், மனப்பாங்கு, ஆற்றல் முயற்சியால் தன்னையும் வளர்த்து தான் சார்ந்த பாடசாலையையும் வளர்த்து வருகின்றார். இன்றைய முன்னணிப் பாடசாலைகளில் யா/ நீர்வேலி றோ.க.த.க. பாடசாலையும் ஒன்றாகும் அதன் நூற்றாண்டு விழாவிற்கு நீர்வேலி அணியப் பாடசாலைகளில் ஒன்றான யா/ நீர்வேலி சி. சி. த. க. பாடசாலையின் அதிபர் என்ற நிலையில் - நீர்வேலி கிராமத்தவன் என்ற நிலையில் வாழ்ந்து வழங்குவதில் அகமகிழ்வெய்துகின்றேன்.

இப்பாடசாலையின் நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடுவதில் அதிபர், ஆசிரியர்கள், பழையமாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் முன்னின்று உழைப்பது இப்பாடசாலையின் வளர்ச்சியில் அவர்கள் எவ்வளவு அக்கறையுடையவர்களாக இருக்கின்றார்கள் என்பதை அறியத்தருகின்றது. இந்த நிகழ்வை நிறைவு கூறக்கிடைத்த வாய்ப்பு எமக்கெல்லாம் பெரும் பேறாகும்.


இப்பாடசாலையில் பணியாற்றிய, பணியாற்றும் அதிபர், ஆசிரியர்களையும், பழைய மாணவர்களையும், மாணவர்களையும் வாழ்த்துவதுடன் அவர்களின் பணி தொடர்ந்து இப்பாடசாலையை மேன்மையடையச் செய்ய வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

வாழ்க வளர்க என் வாழ்த்துகின்றேன்.

யா/நீர்வேலி சி. சி. த. க. பாடசாலை
நீர்வேலி.

செ. செல்வநாயகம்
[அதிபர்]
S.L.P.S.2-1

# வாழ்த்துச் செய்தி



"உயர்ந்து ஓங்குக"

யா/ நீர்வேலி றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையானது தனது வளர்ச்சிப் பாதையில் நூறு ஆண்டுகளைக் கடந்து நூற்றாண்டு விழாவினைச் சிறப்பாகக் கொண்டாடும் இத்தருணத்தில் வெளியாகும் சிறப்புமலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

நீர்வேலிக் கிராமத்தில் அமைந்துள்ள பாடசாலைகளில் காலத்தால் முந்தியதாக விளங்கும் இப்பாடசாலை கிறிஸ்தவ மிசனறிமாரினால் ஆரம்பிக்கப்பட்டு படிப்படியாக வளர்ச்சியடைந்து இந்த நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகின்றது. இந்தவகையில் இப்பாடசாலையானது இப்பிரதேச மக்களின் கல்வி வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் பெரும்பங்காற்றியுள்ளது. பல புத்திஜீவிகளையும், அறிஞர்களையும், நற்பிரஜைகளையும் உருவாக்கித் தந்துள்ளது.

இப்பாடசாலை மாணவர்கள் கல்விச்செயற்பாடுகளிலும், இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் சிறந்து விளங்குகிறார்கள். பாடசாலையின் வளர்ச்சிக்கு பெற்றோரும் பழையமாணவர்களும் தாராளமாக உதவிசெய்து வருகின்றார்கள். இந்த வகையில் இப்பாடசாலையின் வளர்ச்சிக்கும் உறுதுணையாக நின்ற அதிபர்கள், ஆசிரியர்கள் பாடசாலைச்சமூகம் ஆகியோர்கள் போற்றப்படவேண்டியவர்கள்.

கடந்தகால நாட்டுச் சூழ்நிலை காரணமாக மிகமோசமாக பாதிக்கப்பட்ட இப்பாடசாலையானது தற்போது திருத்தியமைக்கப்பட்டு தனது முன்னைய கம்பீரத்துடன் நிலைத்து நின்று கல்விப் பணியாற்றுகின்றது. வருங்காலங்களிலும் மேன்மேலும் சிறப்பாக வளர்ச்சியடைந்து இந்நீர்வேலிக் கிராமத்திற்கு அரும்பணியாற்ற வேண்டும் எனமனமார வாழ்த்துகின்றேன்.

திரு க. இ. இராசசேகரம்
[அதிபர்]
( S.L.P.S.2.1 )

**யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்
நீர்வேலி.**



# வாழ்த்துச் செய்தி


நீர்வேலி றோ.க.த.க.பாடசாலை நிறுவப்பட்டு நூற்றாண்டு விழா மலர் வெளியிடும் இச்சந்தர்ப்பத்தில் அம்மலருக்கு வாழ்த்துச்செய்தி ஒன்றை வழங்குவதில் அகமகிழ்வடைகின்றேன். வித்து ஒன்று சந்தனக் காடாக வளம் பெற்றது போலக் கிறிஸ்தவ மிசனரிமார்களின் கல்விச்சேவைக்கு இலங்கைத்தேசியம் என்றும் கடப்பாடுடையது. அந்தவகையில் இப்பாடசாலையும் நூற்றாண்டுகளினூடு வளர்ந்துவிட்ட ஒரு விருட்சமான சாட்சியாகும்.

நீர்வேலி மக்களின் ஆரம்பக் கல்விக்கு அத்திபாரமாக விளங்கும் பாடசாலைகளில் இப்பாடசாலையும் ஒன்றாகும். மேலும் அக்கிராமத்தில் பல சிறந்த கல்விமான்களை உருவாக்கிய பெருமையும் இப்பாடசாலைக்குரியதாகும். இந்த வகையில் இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு கடந்த 100 ஆண்டுகளாக நேர்மையுடனும், அர்ப்பணிப்புடனும் சேவையாற்றிய அதிபர்கள், ஆசிரியர்கள், மற்றும் பாடசாலை சமூகத்தினர் அனைவரையும் மனமாரப் பாராட்டி வாழ்த்துவதோடு இப்பாடசாலை மேன்மேலும் கல்விப்பணிபுரிந்து இம்மண்ணில் உயர்ந்து நிற்க வேண்டும். என்று எல்லாம் வல்ல நீர்வை காமாட்சி அம்பாளை இறைஞ்சி வாழ்த்துகின்றேன்.

நன்றி.

**திரு. சீ. சிவநேசன்**
**[அதிபர்]**

**யா/ கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்**
**நீர்வேலி**



# வாழ்த்துச் செய்தி

யா/ நீர்வேலி றோ. க. த. க. பாடசாலை அன்னை 100வது ஆண்டு விழாவை கொண்டாடுவதையிட்டு அயல்பாடசாலை அதிபராகிய நான் பேருவகை அடைகின்றேன். இம் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்க சந்தர்ப்பம் கிடைத்ததைப் பெரும் பாக்கியமாக கருதுகின்றேன்.


யா/ நீர்வேலி றோ. க. த. க. பாடசாலை மகிழ்ச்சிகரமான மனிதவள சூழலைக் கொண்டது. இதை நான் அனுபவரீதியாக கண்டிருக்கின்றேன். இங்கு கல்வி கற்கும் மாணவர்கள் பண்பானவர்களாகவும் ஆசிரிய பெருந்தகைகளை மதிக்கின்றவர்களாகவும் காணப்படுகின்றனர். பாடசாலை வரலாற்றில் 100 ஆண்டுகள் என்பது பாடசாலையின் பழைமையும் புதுமையும் எடுத்தியம்புகின்றது எனலாம். இப்பாடசாலை சமூகத்தினரை மனநிறைவோடு நான் வாழ்த்துவதோடு மாணவச் செல்வங்களின் அறிவுப் பசிக்கு அருவிருந்தளிக்கும் பாடசாலை அன்னையையும் வாழ்த்துவதில் பெருமையடைகின்றேன்.

இப்பாடசாலை அன்னை மேன்மேலும் பல சிறப்புக்களை பெற்று கல்விப் பணியாற்றி இவ்வையகத்தில் நற்பிரஜைகளை உருவாக்கி நானிலம் போற்ற நற்புகழோடு தழைத்தோங்குக! என மனநிறைவோடு தலைவணங்கி வாழ்த்துகிறேன்.

நன்றி!

திரு. க. சின்னராசன்
[அதிபர்]

யா/ அச்செழு மெ. மி. த. க. பாடசாலை
நீர்வேலி.



# வாழ்த்துரை

நீர்வேலி றோமன் கதலிக தமிழ் கலவன் பாடசாலையின் நூற்றாண்டு விழா சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.


நீர்வேலி கிராமத்திலே நீண்டநாள் தவப்பயனால் தகவல் தொழில் நுட்பத்திறனையும் கற்பிக்கக் கூடிய வளர்ச்சியில் இன்று நூற்றாண்டு விழாவைக் கொண்டாட விளைகின்ற நீர்வேலி யா/ றோ. க. த. க பாடசாலையின் பெருமைகளைச் சொல்ல வார்த்தைகள் இல்லை.

அன்றிலிருந்து இன்றுவரை பல அறிஞர்களையும் கவிஞர்களையும் மகான்களையும் ஏன்? விளையாட்டு வீரர்களையும் சளைக்காமல் பிரசவித்துக் கொண்டிருக்கும் கைங்கரியத்தைத் தொடர்ந்து செய்தது. மேலும் அப்பணிகள் தொடர வேண்டும் என்றும் அதன் பெருமைகள் உலகறிய வேண்டும் என்ற உன்னத நோக்கோடும் இன்றுள்ள அதிபரின் பேராவினாலும் கடமை உணர்வாலும் முதன் முறையாக வரலாறு கூறப்போகின்ற நூற்றாண்டுவிழா சிறப்பு மலர் வெளிவரப்போகின்றதை நினைத்து யாரும் பெருமைப்படாமல் இருக்க முடியாது.

இப்பாடசாலையின் வளர்ச்சிக்குத் தோள்கொடுத்துக் கொண்டிருக்கின்ற அதிபர் ஆசிரியர்கள் மாணவர்கள் பாடசாலைச்சமூகம் அனைவரையும் மனதார பாராட்டுவதோடு நூற்றாண்டு விழாக் காணும் இப்பாடசாலை மேன்மேலும் பலசாதனைகளைப் படைக்க வேண்டுமென்று இறைஆசி வேண்டி சிறுப்பிட்டி இ. த. க. பாடசாலைச் சமூகத்தின் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்வடைகிறேன்.

அதிபர்,<br>
இ. தேவராசா<br>
யா/ சிறுப்பிட்டி இ. த. க. பாடசாலை<br>
நீர்வேலி.

# வாழ்த்துரை



நூற்றாண்டு நிறைவெய்தும் பாடசாலைக்கு வாழ்த்துரை வழங்குவதையிட்டு அகமகிழ்வடைகிறேன்.

இற்றைக்கு நூறுவருடங்களுக்கு முன் நீர்வேலிச் சமூகத்தின் கல்வி வளர்ச்சிக்கென கிறீஸ்தவர்களால் அமைக்கப்பட்ட இப்பாடசாலை பல தடைகளைத் தாண்டி இன்றும் சமூகத்தின் கலங்கரை விளக்காகத் திகழ்கின்றது.

ஒலைக் கொட்டகை யொன்றில் ஆரம்பிக்கப்பட்ட இக்கல்விச்சாலை இன்று மாடிக் கட்டடமாக உயர்ந்து தனது சேவையை வழங்கி வருகிறது.


இங்கு கல்விகற்ற பலர்வெவ்வேறு நாடுகளிலும் பல்வேறு பதவிகளிலும். பலகலைக் கழகங்களிலும் இருப்பது இக்கல்விச் சாலையின் சிறந்த கல்விப்பணிக்கு உதாரணமாகவுள்ளது.

யா/ நீர்வேலி றோமன் கத்தோலிக்கத் தமிழ்க்கலவன் பாடசாலை மென்மேலும் வளர்ந்து சமூகத்திற்கு கல்விப்பணியாற்ற உளமார வாழ்த்துகிறேன்.

*திரு. ச. நவரத்தினராசவேல்*
*அதிபர்*

*யா/சிறுப்பிட்டி அ. த. க. பாடசாலை*
*நீர்வேலி*

# வாழ்த்துரை



நூற்றாண்டு விழாக்காணும் கல்விச்சாலை யொன்றுக்கு வாழ்த்துரை வழங்க கிடைத்த இத்தருணத்தை நினைத்து நான் அக மகிழ்வடைகிறேன்.

நீர்வேலி வடக்கில் அமைந்துள்ள இப்பாடசாலை 1905ஆம் ஆண்டு ஆரம்பித்து பல அதிபர்கள், ஆசிரியர்கள் பணியில் இன்று வளர்ந்து வயது நூறை அடைந்துள்ளது. இவ்வளர்ச்சி பாடசாலை சார்ந்த சமூகத்தின் பேறாகும்.

மேலும் சொற்ப வளங்களைக் கொண்டு வளர்த்த கல்வி மாணவர்களை பல்வேறு துறையிலும், பல்வேறு நாடுகளிலும் வியாபிக்க வைத்த பெருமையையும் இப்பாடசாலை கொண்டுள்ளது.


வருடந்தோறும் பலமாணவர்களை உயர்தர பாடசாலைகட்கு அனுப்பும் பணியைச் சீரியதாக புரியும் இப்பாடசாலை மென்மேலும் வளர உளமார வாழ்த்துகிறேன்.

நன்றி!

**திரு. இ. சபாநாயகம்**
**அதிபர்**
**யா/ நீர்வேலி இ. த. க. பாடசாலை**

**2005**
**நீர்வேலி.**

# வாழ்த்துச் செய்தி



எனது பிரிவில் அமைந்துள்ள றோ.க.த.க. பாடசாலை நூற்றாண்டு விழாக் காண்பதையிட்டு மகிழ்ச்சியடைவதோடு, மேலும் இவ்விழாவையொட்டி வெளியிடப்படும் சிறப்புமலருக்கு வாழ்த்துச் செய்தி எழுதுவதில் பெருமிதமடைகின்றேன்.

"கேட்டில் விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றயவை"

என்பதைக் கருத்திற் கொண்டு பணியாற்றிவரும் கல்விநிலையங்கள் பாராட்டப்பட வேண்டியவையே.

அந்த வகையில் 1905ம் ஆண்டு பல இடர்களுக்கு மத்தியில் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை பல நெருக்கடிகளையும் தாண்டி இடம் பற்றாக்குறை, தளபாடம் பற்றாக்குறை, விளையாட்டு மைதானம் இல்லாதகுறை போன்ற கஷ்டங்களுக்கு மத்தியிலும் சேவையாற்றி வருவது பெருமைக்குரியதே.

மாணவர்களின் வாழ்க்கைக்கு ஆணிவேராக அமைந்த கல்வியை கசடறக் கற்று, நாட்டில் நல்ல பிரஜைகளையும் வருங்காலத் தலைவர்களையும் ஆக்க சேவையாற்றி வரும் இப்பாடசாலையில் கத்தோவலிக்க மாணவர்களும், பெருமளவில் சைவமாணவர்களும் கல்வி கற்று வருவது மகிழ்ச்சிக்குரியதே.

காலத்துக்குக் காலம் சிறந்த அதிபர், ஆசிரியர்களின் சேவையினால் வளர்ச்சியடைந்து வரும் இப்பாடசாலையின் பணிகளைப் பாராட்டுவதோடு, தொடர்ந்து நற்பணியாற்றி, நற்பிரஜைகளை உருவாக்க வேண்டுமெனவும் வளர்ச்சிப்பாதையில் ஏறுநடை போட்டுவளர வேண்டுமெனவும், இறையருளை பிரார்த்தித்து வாழ்த்தி அமைகின்றேன்.

இப்படிக்கு
திரு. எஸ். அல்பிரட்

J/269, கிராம அலுவலர்
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

# சிறுப்பிட்டி கிழக்கு J/271



# உயர்திரு க. ஸ்ரீஸ்கந்தராசா அவர்கள் வழங்கிய வாழ்த்துச்செய்தி


யா/ நீர்வேலி றோ. க. த. க. பாடசாலை எமது அயற்கிராமத்தில் அமைந்து நூற்றாண்டுகள் கல்விப்பணியாற்றிவருவது பெருமைக்குரியதே.

கத்தோலிக்க மதவளர்ச்சியை மையமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை இன்று இந்து மத வளர்ச்சிக்கும் உறுதுணையாகச் செயற்பட்டுவருவது பாராட்டப்பட வேண்டியதே.

தொடர்ந்து கல்விப்பணியாற்றும் இப்பாடசாலைக்கு காலத்துக்குக் காலம் அதிபர்கள் ஆசிரியர்கள் மாணவர்களின் கல்விவளர்ச்சிக்கு உறுதுணையாக செயற்பட்டதைச் சமூகம் என்றும் மறக்கமாட்டாது.

பாடசாலை மேன்மேலும் வளர்ந்து நாட்டிற்குக் கல்விமான்களையும், புத்தி ஜீவிகளையும் உருவாக்க வேண்டுமென இறையருளைப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

**திரு. க. ஸ்ரீஸ்கந்தராசா**
**கிராம அலுவலர்**



# சிறுப்பிட்டி மேற்கு கிராம அலுவலர் J/272 உயர் திரு. எஸ். உதயகுமார் அவர்கள் வழங்கும் வாழ்த்துச் செய்தி

"தொட்டனைத் ஊறும் மணர்க்கேணி மாந்தர்க்கு
கற்றணைத்தூறும் அறிவு"

மேற்படி வள்ளுவர் வாக்கிற்கமைய அறிவுச் செல்வம் வழங்கி வரும் கல்விநிலையங்களின் சேவை பாராட்டப்பட வேண்டியனவே,

அந்தவகையில் கடந்த நூறுவருடங்களாகக் கலவிப்பணியாற்றி இன்று நூற்றாண்டு விழாக்காணும் யா/ நீர்வேலி றோ. க. த. பாடசாலையின் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்திவழங்கும் சந்தர்ப்பம் கிடைத்தது எனக்கு கிடைத்த ஒருபேறேயாகும்.

மேற்படி பாடசாலை காலத்துக்குக்காலம் பல இடர்பாடுகளைச் சந்தித்தாலும் தனது தளராத பணியினால் சிறந்து நிற்பது பெருமைக்குரியதே.

இவ்விழாச்சிறப்புற அமையச் செயற்படும் அதிபர், ஆசிரியர்கள், அபிவிருத்திச்சங்கம், பழைய மாணவர் சங்கம் என்பனவற்றின் செயற்பாடுகளை வாழ்த்துவதோடு, பாடசாலை மேன்மேலும் வளர்ந்து கல்விப்பணியாற்ற இறையருளைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

எஸ். உதயகுமார்
கிராம அலுவலர்



# வாழ்த்துரை

நூற்றாண்டு விழாக்காணும் நீர்வேலி றோ. க. த. க. பாடசாலையின் சிறப்பு மலருக்கு வாழ்த்துச்செய்தி எழுதும்பேறு கிடைத்ததையிட்டு பெருமகிழ் வடைகின்றேன்.

நீர்வேலி வடக்கில் றோமன் கத்தோலிக்க மதவளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு 1905ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை நூறாண்டு காலம் கல்விப்பணியாற்றி நாட்டில் நற்பிரஜைகளை உருவாக்கிய பெரும் களிப்பினால் நூற்றாண்டு விழா கொண்டாடுவதும், அதனை நினைவூட்டும் வகையில் சிறப்புமலர் ஒன்று வெளியிடுவதன் மூலம் பாடசாலை சரித்திரத்தை ஆவணப்படுத்துவதும் நல்லபணியாகும். இப்பணியைச் சிறப்புறச் செய்பவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்களே.

ஆரம்பத்தில் குறைந்தளவு மாணவர்களுடனும், ஆசிரியர்களுடனும் சிறிய கொட்டிலில் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை காலத்துக்குக் காலம் சிறந்த அதிபர்கள், ஆசிரியர்களை தன்னகத்தே கொண்டு, தேவைக்கேற்ப கட்டட வசதிகளையும் அமைத்துக் கொண்டு கத்தோலிக்கமும், இந்துமதமும், தமிழும் செழிக்கத் தொண்டாற்றி வருவது சிறப்பிற்குரியது.

இப்பாடசாலையில் ஆரம்பக்கல்வியைக் கற்றவர்கள் நாட்டில் நற்பிரஜைகளாகவும், புத்திஜீவிகளாகவும், அரசாங்க உயர்பதவி வகிப்பவர்களாகவும் விளங்குவது குறிப்பிடத்தக்கது.

இப்பாடசாலையின் வளர்ச்சி கல்விப்பணியின் சிறப்பையும் அவசியத்தையும் பறைசாற்றி நிற்கின்றது. தொடர்ந்து கல்விப்பணியாற்றி, நற்பிரஜைகளை உருவாக்கி பல்லாண்டு காலம் பிரகாசித்து விளங்கவேண்டுமென இறையருளை பிரார்த்தித்து அமைகின்றேன்.

**வாழ்த்து**

நீர்வளஞ்சேர் நீர்வை தன்னில் நிலைத்தே நின்று
சீர்பெருகு சிறந்தபணியாற்றி மேலாம் - பேர்பெருக
பெருமைபல சேர்த்தே நாட்டில் பொலிவுடனே
திருநிறைந்து வாழ்க சிறந்து.

**திரு. த. பரராசசிங்கம்**
**செயலாளர்**
**[பா. அ. சங்கம்]**

**'மிதிலா'**
**நீர்வேலி வடக்கு,**
**நீர்வேலி.**

# பழையமாணவர் சங்கம் வாழ்த்துகின்றது

யா/ நீர்வேலி றோ. க. த. க. பாடசாலை நூற்றாண்டு விழாக் காண்பதையிட்டு பழைய மாணவர்தளாகிய நாம் பெருமையடைவதோடு, வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

இப்பாடசாலை கடந்த நூறு வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டு இன்று வரை பல அதிபர்கள், ஆசிரியர்களின் அயராமுயற்சியினால் நன்மாணாக்கர்களை உருவாக்கி இன்று அவர்கள் நன்நிலையில் வாழ்வது பாடசாலை அன்னைக்கு பெருமை சேர்க்கும் நிகழ்வேயாகும்.

எமக்கு கல்விதந்த பாடசாலை அன்னை எமக்குஆரம்பக் கல்வியைப்புகட்டி வாழ்க்கைக்கு நல்ல அத்திவாரமிட்டுள்ளது என்றால் மிகையாகாது.

எமது வாழ்வுக்கு வழிகாட்டிய பாடசாலை அன்னை இன்று நூற்றாண்டு விழாக் காண்பதையிட்டு நாம் பெரிதும் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றோம்.

எமக்கு கல்விபுகட்டிய அதிபர், ஆசிரியர்களையும் பாடசாலை அன்னையையும் சிரம்தாழ்த்தி, கரம் கூப்பி வணங்கி நிற்பதோடு பாடசாலை அன்னை மேலும் பல்லாண்டு காலம் சிறப்புடன் கல்விப் பணியாற்றி நன்மாணாக்கர்களையும், புத்தி ஜீவிகளையும், தலைவர்களையும் உருவாக்க வேண்டுமென இறையருளைத் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

**யா/நீர்வேலி றோ. க. த. பாடசாலை, பழைய மாணவர் சங்கம்**
**நீர்வேலி.**

# வாழ்த்துச் செய்தி

சமூகத்திற்குப் பொருத்தப்பாடுடைய பிரஜைகளை உருவாக்கும் சீரிய பணியை ஆற்றுவன பாடசாலைகளே. இந்த வகையில் நீர்வேலிக் கிராமத்தில் நூறு ஆண்டுகள் கல்விப்பணி ஆற்றி இன்றும் தன் பணியை தொடர்ந்து வரும் நீர்வேலி றோமன் கத்தோலிக் தமிழ்கலவன் பாடசாலையின் நூற்றாண்டு விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் நீர்வேலி நற்பணி மன்றத்தினராகிய நாம் பேருவகை அடைகின்றோம்.

பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தில் மிசனரி மார்களால் வடபகுதியில் கத்தோலிக்க மதத்தை பரப்பும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட இன்று சைவசமய மாணவர்களையேபெருமளவு தன்னகத்தே கொண்டு கல்விப்பணி ஆற்றிவருகின்றது. இப்பாடசாலையில் கல்வி கற்ற பல மாணவர்கள் இன்று உலகின் பல நாடுகளிலும் பரந்து வாழ்கின்றனர். இந்த வகையில் சுவிஸ் நாட்டிலும் றோமன் கத்தோலிக்க பாடசாலையின் மைந்தர்கள் பலர் வாழ்கின்றனர். நூற்றாண்டு விழாக்காணும் எம் கல்விக்கூடத்தை மனமார வாழ்த்துகின்றோம்.

நூற்றாண்டு விழா சிறக்க அர்ப்பணிப்போடு செயற்படும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பழைய மாணவர் சங்கத்தினர் மற்றும் நலன் விரும்பிகள் ஆகியோரை சுவிஸ் நற்பணி மன்றம் பாராட்டுகின்றது. இப்பாடசாலை எதிர்காலத்தில் தன் பணிகளை வினைத்திறனுடன் முன்னெடுத்து சமூகம் போற்றும் விளைதிறன்களை உருவாக்க வேண்டுமென இறைவனைப் பிரார்த்தித்து நூற்றாண்டு விழா மலர் சிறப்புடன் மலர வாழ்த்துகின்றோம்.

**நீர்வேலி நற்பணி மன்றம்**
**சுவிஸ்**

# மலர்க்குழுவின் மனதிலிருந்து.....

இப்பாடசாலை 1905ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 2005 ஆண்டிலே நூறு வயதை எட்டிய போது அதைவிழாவெடுத்துச் சிறப்பிக்க ஆர்வப்பட்டவர் பலர். ஆயினும் விழாவெடுக்க முனைந்தபோதெல்லாம் எதிர் கொண்ட இடர்களை முறியடிக்க பாடசாலையினால் முடியாது போனது கவலைக்குரியதே. 2005ஆம் ஆண்டில் இம்மலரை அச்சுக்கு கொடுக்கும் வகையில் ஆக்கங்கள் சேகரிக்கப்பட்டது. ஆயினும் பொருளாதார வசதி, நாட்டின் அசாதாரண நிலை என்பன அவ்வாண்டில் மலர் வெளியிடவோ, நூற்றாண்டுவிழாவைக் கொண்டாடவோ தடையாயிருந்தது.

எனினும் இந்த ஆண்டில் எமது பாடசாலை ஆசிரியர்களும், பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் விடாமுயற்சி எடுத்து இந்நிகழ்வை ஒப்பேற்றும் நிலைக்கு கொண்டுவந்தனர்.

பெற்றோர் நலம் விரும்பிகளும், ஆசிரியர்களும், சுவிஸ் நற்பணி மன்றத்தினரும் கை கொடுத்து இம்மலரை வெளியிடதுணை புரிந்துள்ளனர். அத்துடன் பொருத்தமான ஆலோசனைகளையும் உதவிகளையும் உரியவேளைகளில் வழங்கிவரும் பிரம்மஸ்ரீ கு. தியாகராஜக்குருக்கள் (நீர்வைமணி) அவர்களும் திரு. இ. குணநாதன் (அதிபர், அத்தியார் இந்துக்கல்லூரி) அவர்களும் எமது முயற்சிகட்கும் துணையாகவுள்ளனர்.

இம்மலரின் ஆக்கங்கள் பலவும் 2005 ஆம் ஆண்டு தொகுக்கப்பட்டவை: அநேகமான ஆக்கங்களும் தகவல்களும் அவ்வாண்டுக்குரியவை. இம்மலரினை வாசிப்பவர்கள் இவ்விடயங்களை கவனத்தில் கொள்ள வேண்டுகின்றோம்.

இம்மலரில் பாடசாலை வளர்ச்சிக்குப் பணியாற்றிய அதிபர், ஆசிரியர்களின் படங்கள் முழுமையாகக் கிடைக்காததால் ஒழுங்காகப் பிரசுரிக்க முடியாமைக்கு வருந்துகின்றோம்.

எமது பாடசாலை பலவளங்களும் பெற்று நிறைவான கல்விப் பணியாற்ற எல்லாம் வல்ல இறைவன் பாதம் பணிகிறோம்.

**மலர்க் குழு**



# அதிபர் அறிக்கை

கல்விச் சாலையொன்று நூற்றாண்டு நிறைவை எய்தியிருப்பது அது தன்னகத்தே கொண்டிருக்கும் தொன்மையை எடுத்துக் காட்டுவதாக அமையும். இலங்கைத் தீவின் வடபகுதியில் பசுமைநிறைந்த சூழலாக நீர்வேலிக் கிராமம் மிளிர்கிறது. மக்களிடையே ரோமன் கத்தோலிக்க மதத்தையும் சமமாகக் கல்வியையும் வளர்க்கும் நோக்கில் ரோமன் கத்தோலிக்கப் பாதிரிமார்களினால் இக்கல்விச்சாலை இற்றைக்கு நூறு ஆண்டுகட்கு முன் அமைக்கப்பட்டதாக அறியக்கிடக்கிறது.

நூறுவயதையடைந்துவிட்ட எமது பாடசாலைக்கு விழாவெடுக்க பலர் ஆர்வப்பட்டபோதும் நாட்டில் நிலவும் அசாதாரண நிலையும், வசதியீனங்களும் தடையாக அமைந்திருந்தன.

1905ஆம் ஆண்டு ஆரம்பித்த இப்பாடசாலை 2005ஆம் ஆண்டு நூற்றாண்டு நிறைவையடைந்த போதும் 2007ஆம் ஆண்டாகிய இவ்வருடத்திலேயே விழாவெடுக்க முடிந்தது. பெற்றார் உட்பட பாடசாலைச்சமூகம் முழுமையான ஆதரவு வழங்கியிருப்பின் உரியகாலத்தில் விழாவை நடத்தியிருக்க முடியும். எனினும் காலங்கடந்தாவது இவ்விழா நிறைவேறுவதையிட்டு மனநிறைவடைவோம்.

இந்த நூற்றாண்டு விழாச் சஞ்சிகை 2005ஆம் ஆண்டிலேயே தொகுக்கப்பட்டது. இதில் ஆக்கங்களைத் தந்த பலமாணவர் தற்போது எமது பாடசாலைக்கு பழைய மாணவராகி விட்டனர். ஆசிரியர்களில் திரு. சி. சிவதாசன் இடமாற்றம் பெற்றுள்ளார். அவ்வெற்றிடத்தை புதிய ஆசிரியர் திரு. நா. விஜயகுமார் நிறைவு செய்கிறார்.

எமது பாடசாலையைப் பொறுத்தவரை ஆரம்பத்தில் தலமையாசிரியருடன் ஒரு ஆசிரியரையும் கொண்டதாக ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை தற்போது தரம் ஒன்பது வரை வகுப்புக்களைக் கொண்ட பாடசாலையாக விளங்குகிறது.

இக்கல்விச் சாலையின் நூறு வருட வரலாற்றில் பல அதிபர்கள் பல ஆசிரியர்கள் கடமையாற்றி ஆரம்பக் கல்வியை விருத்தி செய்து அனுப்பும் பிள்ளைகள் இன்று பற்பல உயர் ஸ்தாபனங்களில் இருப்பதை அறியக்கூடியதாகவுள்ளது. எனினும் நகரப் பாடசாலை மோகம் கொண்ட சமூகமும், கல்வி வளங்களை பரவலாக்கம் செய்ய முடியாத கல்விச் சமூகமும் இப்பாடசாலையை வளர்த்துச் செல்வதற்கான தடைகளாக அமைகின்றன.

ஒவ்வொரு பாடசாலை அதிபரும், ஆசிரியர்களும், பேரார்வம் கொண்ட சமூகமும் தமது பாடசாலையை வளர்த்துச் செல்ல ஆர்வப்பட்டாலும் பல்வேறு இடர்கள் அவர்களது ஆர்வத்தை மழுங்கடிப்பதாகவுள்ளது. அவ்வகையில் எமது பாடசாலையும் சமூகத்துக்கு சிறந்த கல்விப்பணியாற்ற முன்வந்தாலும் பல்வேறு இடர்கள் எமக்குத் தடைபோடுவது உண்மை நிலையாகும்.

பௌதீக வளங்களின் போதுமான தன்மை ஒரு பாடசாலையின் திருப்தியான செயற்பாட்டிற்கு முக்கியமாகும். இப்பாடசாலையின் மொத்தக்காணி நான்கு நிலப்பரப்பாகும். இக்காணியை மேலும் விஸ்தரிக்க முடியாத வகையில் பாடசாலை வளவின் வடக்கு மேற்கு எல்லைகள் வீதிகளாகவும், கிழக்குத் தெற்கு எல்லைகள் தனியார் குடியிருப்புக் காணிகளாகவும் உள்ளது. ஒரு பாடசாலை அதுவும் தரம் ஒன்பது வகுப்பைக் கொண்ட பாடசாலை எனின் வகுப்பறைகள், ஆய்வுகூடம், நூலகம், அலுவலகம், களஞ்சியம், ஆசிரியர் ஓய்வு அறை, பிரார்த்தனை அல்லது ஒன்றுகூடல் மண்டபம், செயற்பாட்டறை போன்ற அடிப்படை இடவசதிகள் அமைக்கப்பட வேண்டும் அத்துடன் மலசலகூடம், கிணறு, நீர்த்தாங்கி, விளையாட்டு மைதானம், விளையாட்டு முற்றம் போன்றனவும், கற்றல் கற்பித்தலுடன் தொடர்புபட்ட அத்தியவசிய தேவைகளாகும். இவ்வாறான தேவைகளுக்கு நான்கு பரப்புக் காணி போதுமானதா? இது இப்பாடசாலையின் தேவையினைப் பூர்த்தி செய்வதற்கான என்னபங்கு என்பதைக் கணக்கிடமுடியாது.

மேலும் இப்பாடசாலையின் கட்டடவசதிகள் பூரணப்படுத்தப்படல் அவசியமாகவுள்ள போதும் நீண்ட காலமாக அது சாத்தியமற்றதாகவே உள்ளது. வகுப்பறை, ஆய்வுகூடம், ஒன்றுகூடல் மண்டபம் அமைக்கப்படுவதுடன் உள்ளவகுப்பறைகள் புதிய கல்விச் சீர்திருத்தத்திற்கமைய புனரமைக்கப்பட வேண்டும்.

பாடசாலை வளவுக்கு அண்மையிலாவது ஒரு மைதானம் அமைக்கப்பட வேண்டும். இது பாடசாலைச் சமூகம் சார்ந்த பரோபகாரிகளாலேயே முடியும். பாடசாலையின் செயற்பாடுகளில் கல்வியும், விளையாட்டும் இரு கண்கள் போன்றன என பெரியோர் மேடையில் முழக்கம் செய்வது உண்மையாயின் இப்பாடசாலைக்கு ஒரு கண் தான் உள்ளது. ஏனெனில் 70'x25' அளவில் பல வருடங்களுக்கு முன் அமைக்கப்பட்ட இரு மாடிக்கான அத்திபாரக்கட்டில் தான் இன்று இம் மாணவர்கள் இசையுடன் கூடிய காலை நேர சரீரசுகப் பயிற்சியில் ஈடுபடுகின்றனர். அவ்வேளையில் மாணவர்படும் அவஸ்தையை நேரில் பார்ப்பதற்கே முடியும். காலை நேர உடற்பயிற்சிக்கே இடம் இல்லாத நிலையில் இல்ல மெய்வல்லுனர் போட்டிகள், பெரு விளையாட்டுக்கள், உடற்பயிற்சிப் போட்டிகள் போன்றவற்றிற்கு எவ்வித அடிப்படை வசிதிகளுமில்லை. அத்துடன் வேறு மைதானங்கள் கிட்டத்தட்ட ஒரு மைல் சுற்றாடலிலும் இல்லையெனலாம். ஆகவே விளையாட்டில் ஆர்வம் மிக்கமாணவர் இப்பாடசாலையால் ஏமாற்றப்படுகின்றனர். ஆகவே ஒரு மைதானத்துக்கான காணி வசதியை ஏற்படுத்த பாடசாலை சார்ந்த சமூகம், பரோபகாரிகள் தான் முன்வரவேண்டும்.

நீர்வசதி, மலசலகூடவசதிகள் இப்பாடசாலைக்கு போதுமானவை G.T.Z. யுனிசெவ் நிறுவனங்கள் மேற்படி தேவைகளை பூரணப்படுத்தி தந்துள்ளமை வரப்பிரசாதமாகும். நீர்த்தாங்கி அமைக்கப்பட்டு குழாய் நீர்வசதி செய்யப்பட்டுள்ளது. இப்பாடசாலைக்கான அடிப்படைவசதிகளில் ஒன்றான மின்இணைப்பு வசதியை தனி ஒருவராக வினோ நகைப்பூங்கா உரிமையார் செய்து தந்துள்ளமை பேருதவியாகும்.

அருகிவரும் வாசிப்புத் திறனை விருத்திசெய்யும் நோக்கில் பாடசாலையின் கோரிக்கையை ஏற்று அமரர் அருளம்பலம் அருளானந்த ஸ்ரீ ஞாபகார்த்தமாக நூலகம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான நிதியுதவியை அமரரின் சகோதரர்கள் மனமுவந்து அளித்துள்ளமை பாடசாலைக்குக் கிடைத்த அரும் வசதியாகும். வருடாந்த பரிசில் வழங்கல் விழாவை நடாத்தி மாணவர்கள் ஊக்கப்படுத்தும் முகமாக அமரர் மு. வைத்திலிங்கம் ஞாபகார்த்த பரிசளிப்பு நிதியம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது அத்துடன் மேன்தலை எறியி ஒன்றை சுவிஸ் பழைய மாணவர் வழங்கியுள்ளார். தொண்டர் ஆசிரியர் கடமை புரிந்து தற்போது சுவிஸ் நாட்டில் இருக்கும் திருமதி மாலினி கிறீன்களைச் செய்து வழங்கியுள்ளார்.

இவ்வாறாக எமது பாடசாலையின் தேவையறிந்து உதவிகளைப்புரியும் பரோபகாரிகளின் சமூக உணர்வு சகலருக்கும் வளரல் வேண்டும். அதன் மூலம் தான் எமது பாடசாலையை வளம்மிக்க சிறந்த பாடசாலையாக மாற்றி எதிர்காலத்தை வளமாக்க முடியும். ஒரு பாடசாலையானது சமூகத்தின் முக்கிய நிறுவனமாகும். நற்பிரஜைகளை வழங்கும் பாடசாலையை வளர்ப்பது சமூகத்தின் கடமையாகும். நகரப்புறப் பாடசாலைகள் பிரபலமாக வளர்வதற்கு பெற்றோரும் பழைய மாணவருமே காரணகர்த்தாக்கள். அதேபோல கிராமப்புறப் பாடசாலைகளுக்கும் அவ்விருசாராரும் உதவவேண்டும்.

நூறுவயதைக் கடந்து கல்விப் பணியாற்றி பாடசாலை சார்ந்த சமூகத்துக்கு சிறந்த கலங்கரை விளக்கமாகத் திகழ வேண்டுமென இறைவனாசி வேண்டிநிற்கிறேன்.

**- அதிபர்**

# எமது ஆசிரியர் குழாம் - 2007



**திரு.ச.வேலழகன்**-B.Ed.Tr-Primary.SLPS, **திரு.சி.இராசேந்திரம்**-Tr.Maths.SLTS-1, **திரு.வை.சிவசிதம்பரம்**-B.A (Eng)Tr-English SLTS-2.1,
**திரு.சி.சிவதாசன்**-BA.Dip Tr-Primary SLTS-3.1,**திரு.நா.விஜயகுமார்**-Tr-Commerce.SLTS-3.1,
**திருமதி.ஹே.கணேசலிங்கம்**-Dip in Music.SLTS-2.11,
**திருமதி.வி.சரவணபவானந்தன்**-Tr-Science.SLTS-2.1,**திருமதி.சு.சிவானந்தமூர்த்தி**-Tr-Primary.SLTS-2.11,
**திருமதி.ஜெ.சிவானந்தம்**-BA.Tr-Commerce.SLTS-2.11, **செல்வி.ம.வசந்தா**-Tr-Primary.SLTS-3.1, **செல்வி.ச.கிறிஜா**-Tr-Maths.SLTS-3.1,
**செல்வி.ச.சீவரட்னேஸ்வரி**-Tr-Primary.SLTS-3.1, **செல்வி.ப.தாரணி**-BA. Tr-Maths.SLTS-2.11.



# யா/ நீர்வேலி றோ. க. த். க. பாடசாலை

| | | |
|---|---|---|
| கோட்டம் | :- | கோப்பாய். |
| வலயம் | :- | யாழ்ப்பாணம். |
| முகவரி | :- | நீர்வேலி, யாழ்ப்பாணம். |
| கி. சே. பிரிவு | :- | நீர்வேலி வடக்கு. |
| கி. சே. பிரிவு இல. | :- | J/269 |
| பி. செ. பிரிவு | :- | கோப்பாய். |
| மாவட்டம் | :- | யாழ்ப்பாணம். |
| மாகாணம் | :- | வடக்குக்கிழக்கு |
| மகுடவாசகம் | :- | கற்க கசடற. |
| கொடிநிறம் | :- | பச்சை செம்மஞ்சள். |
| I. D. no. | :- | 1009029. |
| Sensons no. | :- | 09248. |
| A.R.R.no. | :- | 08333. |
| Exam no. Gr. 5 | :- | 11245. |
| Exam no. Gr. 9 | :- | A024. |
| Free Books Code no. | :- | 21/1/3. |

## யா/ நீர்வேலி றோ. க. த. க. பாடசாலை
## நீர்வேலி

யாழ்நகர் ஆசனக்கோயில் திருப்பணியாள் அருட்திரு தியோமர் ஆண்டவர் காலத்தில் திருநெல்வேலி அதிவணக்கத்திற்குரிய சுவாமி ஞானப்பிரகாசர் அவர்களின் இடைவிடா முயற்சியின் பயனாக திரு கபிரியேற்பிள்ளை உபதேசியரால் இப்பாடசாலை 1905ஆம் வருடம் ஆரம்பிக்கப்பட்டது.

ஓலைக்கொட்டகை அமைக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை சில விசமிகளால் எரியூட்டப்பட்டபோதும் ஸ்தாபகரின் விடாமுயற்சியின் பயனாக மீண்டும் நிரந்தரக் கட்டடமாக கட்டப்பட்டு பாடசாலை இயங்க வைக்கப்பட்டது.

### இப்பாடசாலையில் கடமையாற்றியதாக அறியப்பட்ட தலைமை ஆசிரியர்கள்

01. திரு. ஆபிரகாம் யோசேப்பு (கதிரவேலு வாத்தியார்) - நீர்வேலி
02. திரு. எஸ். பிலிப்பு - வசாவிளான்
03. திரு. எஸ். அப்புத்துரை - வசாவிளான்
04. திரு. எஸ். மரியாம்பிள்ளை - கரம்பன்
05. திரு. கே. பிலிப்பு - வசாவிளான்
06. திரு. எஸ். கிறிஸ்தோத்திரம் - அச்சுவேலி
07. திருமதி. சொர்ணம் அந்தோணிப்பிள்ளை - (அழகம்மா) நீர்வேலி
08. பண்டிதர் திரு. செ. துரைசிங்கம் - நீர்வேலி
09. திரு. மு. வைத்திலிங்கம் - கோப்பாய்
10. திரு. த. மயில்வாகனம் - நீர்வேலி
11. திரு. த. இராசா - கோப்பாய்
12. திரு. க. அருமைத்துரை - நீர்வேலி
13. திரு. ச. வேலழகன் - இடைக்காடு

# பாடசாலையின் வளர்ச்சிப்பாதையிலே.....!

# ஒரு கண்ணோட்டம்

## செயலாளரின் பேனாவிலிருந்து.............

இப்பாடசாலையில் பெற்றோர் ஆசிரியர் சங்கம் உதயமானதிலிருந்து நீண்டகாலம் செயலாளர் பதவியை வகித்துச் செயலாற்றியமையாலும், பாடசாலை அபிவிருத்திக்குழு, நூற்றாண்டு விழாக்குழு, மலர்க்குழு என்பவற்றின் செயலாளராகச் செயலாற்றும்பேறு பெற்றமையாலும் இப்படியான ஒரு கண்ணோட்டத்தைச் சமர்ப்பிக்கக் கடமைப்பட்டுள்ளேன். கிடைத்த சந்தர்ப்பத்தையிட்டு மகிழ்ச்சியுடன் எனது பேனாவாயிலாக இதனைச் சமர்ப்பிக்கின்றேன்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கல்விப்பணியால் சிறப்புப் பெற்ற கிராமங்கள் பல உண்டு. அவற்றுள் நீர்வேலியும் ஒன்றாகக் கணிக்கப்படுகின்றது.

இற்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்னர் கல்வியை மையமாகவைத்து சமயத்தைப் பரப்பியகாலம் ஒன்றுள்ளது. அக்காலத்தில் தான் நீர்வேலி வடக்குப்பகுதியில் இப்பாடசாலையை அமைத்து கத்தோலிக்க மதத்தைப் பரப்பும் பணியும் ஆரம்பிக்கப்பட்டது. 1905ம் ஆண்டு அதேநோக்கத்தோடு யாழ்நகர் ஆசனக்கோயில் திருப்பணியாளர் அருட்திரு தியோமர் ஆண்டவர் காலத்தில் திருநெல்வேலி அதிவணக்கத்துக்குரிய சுவாமி ஞானப்பிரகாசர் அவர்களின் முயற்சியினால் திரு எஸ். கபிரியேற்பிள்ளை உப தேசிகரால் இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டதாக அறியக்கிடக்கின்றது.

ஓலைக்கொட்டிலில் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை அக்காலத்திலிருந்த சில விசமிகளால் எரியூட்டப்பட்டது எனவும் ஸ்தாபகரின் விடாமுயற்சியால் மீண்டும் நிரந்தரகட்டடம் ஒன்று அமைக்கப்பட்டு அதிலேயே ஆரம்பிக்கப்பட்டதாகவும் அறியக்கிடக்கின்றது.

40' X20'அளவு கொண்ட கட்டடத்தில் ஆரம்பத்தில் குறைந்தளவு கத்தோலிக்க மாணவர்களே கல்வி பயின்றனர். ஒரு அதிபரினதும், ஆசிரியர் ஒருவரினதும் சேவையுடன் ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலை மக்கள் செறிந்து வாழும் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டதால் தொடர்ந்து வளர்ச்சிப்பாதையில் காலடி எடுத்து வைத்தது எனலாம். காலச்சக்கரம் சுழன்று செல்கையில் மாணவர் தொகை அதிகரிக்க ஆசிரிய வளங்களும், கட்டட வளங்களும், தளபாட தேவைகளும் கூடிக்கொண்டே போயின.

ஆம்பத்தில் தலைமையாசிரியராகவிருந்து பணியாற்றிய திரு. ஆபிரகாம் யோசேப்பு (கதிரவேலு உபாத்தியார், நீர்வேலி), வசாவிளான் திரு. எஸ். பிலிப்பு, வசாவிளான் திரு. எஸ். அப்புத்துரை, கரம்பன் திரு. எஸ். மரியாம்பிள்ளை, ஆகியவர்களின் தலைமையாசிரியப்பணி பாராட்டப்பட வேண்டியதும், நினைவு கூரப்பட வேண்டியதுமாகும்.

இவர்களைத் தொடர்ந்து வசாவிளான் கே. பிலிப்பு, அச்சுவேலி எஸ்.கிறிசோஸ்தம் ஆகியவர்களும் தலைமையாசிரியப் பணியினாலும் இப்பாடசாலை வளர்ச்சி கண்மை குறிப்பிடத்தக்கதே. இவர்களின் சேவைகளையும் நினைவு கூரக்கடமைப்பட்டுள்ளோம்.

ஏற்கனவே அமைக்கப்பட்ட ஒரு கட்டடத்திலும், மரங்களின் கீழும் வகுப்புக்கள் நடைபெற்று வந்த இப்பாடசாலைக்கு வசாவிளான் திரு. கே. பிலிப்பு அவர்கள் தலைமையாசிரியராக இருந்த காலத்தில் 40X20 அளவு கொண்ட புதிய ஓலைக்கொட்டகை ஒன்று அமைக்கப்பட்டது. தலைமை ஆசிரியர் கே. பிலிப்பு அவர்கள் இளைப்பாறியதைத் தொடர்ந்து அச்சுவேலியைச் சேர்ந்த திரு. எஸ். கிறிசோஸ்தம் அவர்கள் தலைமையாசிரியராகப் பதவியேற்று பணியாற்றினார். நான்கு ஆண்டுகள் பணியாற்றி இளைப்பாறிய எஸ். கிறிசோஸ்தம் அவர்களைத் தொடர்ந்து, நீர்வேலி வடக்கைச் சேர்ந்த திருமதி சொர்ணம் அந்தோனிப்பிள்ளை (அழகம்மா) அவர்கள் இப்பாடசாலையின் பதில் தலைமையாசிரியராகப் பணியாற்றலானார்.

இவர் இளைப்பாறியதைத் தொடர்ந்து 1969ல் நீர்வேலி மத்தியைச் சேர்ந்த பண்டிதர் செ. துரைசிங்கம் அவர்கள் தலைமையாசிரியராக இப் பாடசாலைக்கு இடமாற்றம் பெற்று வந்துள்ளார். இவரது பதவிக்காலத்தில் கல்விச் சுற்றறிக்கைக்கமைய தலைமையாசிரியர் பதவி அதிபர் பதவியாக பெயர் மாற்றப்பட்டது அறியக்கிடக்கின்றது. இக்காலகட்டத்தில் கூடுதலான இந்துசமய மாணவர்கள் இங்கு சேர்க்கப்படலாயினர்.இப்பாடசாலையில் ஏற்பட்ட குடிதண்ணீர் பிரச்சனையைப் போக்க முன்னால் அமைந்துள்ள காமாட்சியம்பாள் ஐக்கிய கைத்தொழிற் சங்க நிர்வாகசபையுடன் தொடர்புகொண்டு முகாமையாளர் திரு. க. வல்லிபுரத்தின் அனுசரணையுடன் சங்கத்திலிருந்து குழாய் நீர் விநியோகம் செய்யப்பட்டது. முன்னர் அமைக்கப்பட்ட ஓலைக்கொட்டகையின் கூரை திருத்தியமைக்கப்பட்டு, ஓட்டுக்கூரையாக மாற்றம் செய்யப்பட்டது. மாணவரிடையே சமய பாரம்பரியங்கள் பேணப்பட்டு, கட்டுப்பாடுகள் பேணப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். மாணவர் கல்வி வளர்ச்சிக்காக விசேடமாக மாலைநேர வகுப்புக்கள் நடாத்தப்பட்டமையும், கல்வி ஊக்கமாக்கப்பட்டதும் மறக்க முடியாத செயற்பாடுகளாகும்.

1973ல் பண்டிதர் துரைசிங்கம் இளைப்பாறியமையைத் தொடர்ந்து கோப்பாய் மத்தியைச் சேர்ந்த திரு. மு. வைத்திலிங்கம் அவர்கள் இடமாற்றம் பெற்று அதிபர் பதவியை ஏற்றுக்கொண்டார். இவரது காலப்பகுதியிலும் மாணவர் தொகை அதிகரிக்கத்தொடங்கியது. மாணவர் ஒழுங்கமைப்பு பேணப்படலாயிற்று. இதனால் கட்டடத்தேவைகளும் அதிகரிக்கலாயின. 40X20, 60X20 அளவு கொண்ட இரு புதிய கட்டடங்கள் அமைக்கப்பட்டன. மலசல கூட அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டன. தளபாடத்தேவைகளும் கூடிக்கொண்டே போயின. அவை உடனுக்குடன் சீர்செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. பாடசாலைக்கான சுற்றுமதில் கட்டப்பட்டது. பாடசாலைச் சரித்திரத்திலேயே முதன்முதல் பேற்றோர் ஆசிரியர் சங்கம் அமைக்கப்பட்டது. பெற்றோர்களின்

தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டன. பாடசாலைச் சரித்திரத்திலேயே பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதாக மாணவரிடையே இல்லங்கள் அமைக்கப்பட்டு முதன்முதலாக விளையாட்டுப் போட்டி காமாட்சி அம்பாள் சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் நடாத்தப்பட்டது. மாணவரிடையே கலையுணர்வு புகுத்தப்பட்டு கலைவிழாவும் நடாத்தப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். மாணவரிடையே சீருடை பேணப்பட்டது. இதனால் பாடசாலை வளர்ச்சியின் "பொற்காலம்" எனக் குறிப்பிடலாம். 1985ம் ஆண்டு ஏப்பில் மாதம் இளைப்பாறிய இவர் இன்று நினைவு கூரப்பட வேண்டிவராகவுள்ளார். இவரது நினைவான பரிசளிப்பு நிதியம் ஒன்று உருவாக்கப்பட்டு அந் நிதியத்திலிருந்து வருடாந்தப் பரிசளிப்பு விழா நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. இந்நிதியத்தை ஏற்படுத்திய சுவிஸ் பழைய மாணவர்கள் பாராட்டுக்கும் நன்றிக்கும் உரியவர்களே. 01-05-1968 முதல் 21-09-1969 வரை உதவி ஆசிரியராகப் பணியாற்றி இங்கு ஏற்பட்ட மனக்கசப்பினால் வேறு இடத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டு, பின்னர் 15-07-1970ல் மீண்டும் இப்பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டவரும் முன்னைய அதிபர்களான பண்டிதர் செ. துரைசிங்கம், மு. வைத்திலிங்கம் ஆகியவர்களின் காலப்பகுதியில் உபஅதிபராக கடமையாற்றியவருமான நீர்வேலி வடக்கைச் சேர்ந்த திரு. த. மயில்வாகனம் அவர்கள் 1985 ஏப்பிரல் முதல் 24-04-1990 வரை அதிபராகக் கடமையாற்றும் பேறுபெற்றார்.

இவருடைய காலப்பகுதியிலேயே 42X22 அளவு கொண்ட புதிய இரு மாடிக்கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டது. 1987ல் ஏற்பட்ட வான் தாக்குதலால் முதன் முதலாக அமைக்கப்பட்ட சுண்ணாம்புக் கட்டடமும் புதிதாக அமைக்கப்பட்ட இரு மாடிக்கட்டடமும் சேதமடைந்ததோடு, தளபாடங்களும் சேதமடைந்துள்ளன. ஆவணங்கள் சின்னாபின்னமாக்கப்பட்டன. இவ்வேளையில் வானூர்திகள் வான்பரப்பில் வட்டமிட்டுக் கொண்டிருந்தவேளை தனது உயிரையும் துச்சமென மதித்துக் கடமையுணர்ச்சியுடன் சிதறிக்கிடந்த மாணவர்களின் பிறப்புச்சான்றிதழ் முதலான முக்கிய ஆவணங்களை பேணிப்பாதுகாத்தமை பாராட்டப்படவேண்டிய செயற்பாடுகளாகும். தாக்குதலுக்குள்ளான கட்டட இடிபாடுகளை சீர்செய்து மீண்டும் 50X20, 40X20 அளவுகள் கொண்ட இருமாடிக்கட்டடங்கள் அமைக்கப்பட்டன. பாலர் வகுப்பு முதல் 5ம் வகுப்புவரை போதிக்கப்பட்ட இப்பாடசாலையில் 8ம் ஆண்டுவரை கல்வி புகட்டப்பட்டு வந்தது. மாணவர்களுக்கு குடிதண்ணீர் வசதிக்காக புதிதாக குழாய்க்கிணறு ஒன்று பழைய மாணவன் திரு. செல்லத்துரை நவநீதன் அவர்களின் பண உதவியுடன் அமைக்கப்பட்டு மாணவருக்கு குடிதண்ணீர் வழங்கப்பட்டது. இப்பணிக்கு உதவிய திரு. செல்லத்துரை நவநீதனுக்கு நன்றியும், பாராட்டுதல்களும் கூறக் கடமைப்பட்டுள்ளோம். சுமார் 537 மாணவர்கள் கல்விபயின்ற இவ்வேளையில் போதிய தளபாட வசதிகளும் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். மாணவரிடையே பலவகைப் போட்டிகளும் நடாத்தப்பட்டு அவர்களது திறமைகளைப் பாராட்டி பாடசாலைச் சரித்திரத்திலேயே முதன்முதல் பரிசளிப்பு விழாவும் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். குறித்த அதிபர் த. மயில்வாகனம் அவர்கள் 24-04-1990ல் இளைப்பாறினார்.

இவரது சேவையைத் தொடர்ந்து அக்காலத்தில் உப அதிபராகக் கடமையாற்றிவந்த கோப்பாய் வடக்கைச் சேர்ந்த திரு. பொ. த. இராசா அவர்கள் அதிபராக நியமனம் பெற்றார். இவரது காலத்திலும் பாடசாலை கலைவிழாக்களும், விளையாட்டுப் போட்டிகளும் நடைபெற்று வந்துள்ளன. 1995ல் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலைமைகளாலும், பாரிய இடப்பெயர்ச்சியினாலும் பாடசாலைத் தளபாடங்கள், உபகரணங்கள், ஆவணங்கள் என்பன சேதமடைந்ததோடு பல கட்டட இடிபாடுகளையும் நஷ்டங்களையும் கண்டது. மீளக்குடியமர்வின் போது மாணவர் போதிய தளபாட வசதியின்மையால் நிலத்திலிருந்து படிக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைஏற்பட்டது. எனினும் G. T. Z. நிறுவனத்தின் உதவியால் பெண்களுக்கான மலசலகூடம் ஒன்று அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும் அதிபர் பொ.த. இராசா இங்கிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்றமையால் 05-10-1992ல் உதவி ஆசிரியராக இடமாற்றம் பெற்று வந்தவரும் உப அதிபராகப் பணியாற்றியவருமான நீர்வேலி மேற்கைச் சேர்ந்த க. அருமைத்துரை அவர்கள் 15-05-2001ல் அதிபராக நியமனம் பெற்றுள்ளார். இவரது பதவிக்காலத்தில் பழைய மாணவன் திரு. ச. புவிச்சந்திரன் (வினோ நகைப்பூங்கா) அவர்களின் உதவியுடன் மின் இணைப்புச் செய்யப்பட்டது. இதற்காக பாடசாலைச் சமூகம் குறித்த புவிச்சந்திரனுக்கு நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளது. மேலும் கீழ் வகுப்பு மாணவரின் கல்விவளர்ச்சிக்காக செயற்பாட்டறை ஒன்றும் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். G. T. Z. நிறுவன உதவியால் மேலும் ஒரு மலசல கூடம் ஆண்களின் தேவைக்காக அமைக்கப்பட்டது. 1995ல் இராணுவ நடவடிக்கையின் போது சேதமடைந்த சுற்றுமதில் மற்றும் கட்டடத் திருத்த வேலைகளும் செய்யப்பட்டன. பாடசாலைச் சரித்திரத்திலே சிறப்பான முறையில் ஆசிரிய தினவிழாக் கொண்டாடப்பட்டமையும் மறக்க முடியாததாகும். ஆண்டு 8 வரையிருந்த வகுப்புக்கள் ஆண்டு 9 வரையாக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். திரு. க. அருமைத்துரை தனது இளைப்பாறும் காலமான 07-08-2004ல் இளைப்பாறலானார்.

அவரது சேவையைத் தொடர்ந்து இடைக்காட்டைச் சேர்ந்த திரு. ச.வேலழகன் அவர்கள் அதிபராக இடமாற்றம் பெற்று வந்துள்ளார். இவரது வருகை இப்பாடசாலை வளர்ச்சிக்குப் புத்துயிரூட்டுவதாக அமைந்துள்ள தென்றால் அது மிகையாகாது.

இப்பாடசாலை வளர்ச்சிக்கென பாடசாலை அபிவிருத்திச் சங்கம் வருடாந்தப் பொதுக்கூட்டம் கூட்டி புதிய நிர்வாகசபை தெரிவு செய்யப்பட்டதோடு பாடசாலை அபிவிருத்திக் குழு, பாடசாலை முகாமைத்துவக் குழு, உணவு முகாமைத்துவக் குழு, பழைய மாணவர் சங்கம் என்பனவும் அமைக்கப்பட்டு செயலாற்றி வருகின்றன. வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி 2004ம் ஆண்டு நீர்வேலி பரலோக மாதா ஆலய முன்றலில் அமைந்துள்ள விளையாட்டு மைதானத்திலும் 2005ம் ஆண்டுக்கான விளையாட்டுப் போட்டி ஞானவைரவர் கோவில் வீதியில்அமைந்துள்ள விளையாட்டு மைதானத்திலும் நடாத்தப்பட்டன. இப்பாடசாலைக்கான விளையாட்டு மைதானம் ஒன்று இல்லாதமை பாடசாலை வளர்ச்சிக்குப் பெரிதும் குறையாகவுள்ளது. வருடா வருடம் மாணவர் கால்கோள் விழா சிறப்பாக நடைபெற்றுவருவது குறிப்பிடத்தக்கதாகும்.

இணைப்பாடவிதான செயற்பாட்டுக்காக நூல்நிலையம் ஒன்று காலஞ்சென்ற பழைய மாணவன் அருளானந்தரூபியின் ஞாபகார்த்தமாக அவரது சகோதரர்களின் நிதியுதவியால் அமைக்கப்பட்டு, அவர்களது தந்தை இளைப்பாறிய ஆசிரியர் ந. அருளம்பலம் அவர்களால் 07-10-2005ல் திறந்து வைக்கப்பட்டது. இச்செயற்பாட்டுக்காக அவர்களது குடும்பத்துக்கு பாடசாலைச் சமூகம் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளது.

மேலும் சுவிஸ் நற்பணிமன்றத்தினர் "மேந்தலை எறியி" (Overhead Projector) ஒன்றினைப் பாடசாலை வளர்ச்சியை கருத்திற்கொண்டு செய்து தந்துள்ளார்கள். இதற்கு சுவிஸ் நற்பணிமன்றத்துக்கு பாடசாலைச் சமூகம் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளது.

வருடாந்தப் பரிசளிப்பு விழாவிற்கென முன்நாள் அதிபர் அமரர் மு.வைத்திலிங்கம் ஞாபகார்த்த பரிசளிப்பு நிதியத்தை உருவாக்கப்பட்டுள்ளது. இந்நிதியத்தை உருவாக்கிய சுவிஸ் நாட்டில் வாழும் பழைய மாணவர்கள் என்றென்றும் பாராட்டுக்கும், நன்றியறிதல்களுக்கும் உரியவர்களபாவர்.

இப்பாடசாலையின் பழைய மாணவரும், முன்னாள் தொண்டர் ஆசிரியையுமான நீர்வேலி, காளிகோயிலடியைச் சேர்ந்த நடராசா மகள் மாலினி அவர்கள் தளபாடக் கொள்வனவுக்கென நிதியுதவி புரிந்துள்ளார். அவரையும் இச்சந்தர்ப்பத்தில் நன்றியுடன் பாராட்டுகின்றோம். நூல்நிலைய அபிவிருத்திக்காக அதிஸ்டலாபச் சீட்டிழுப்பு ஒன்று நடாத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கௌரவ. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்கள் 2005ம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்டநிதிலிருந்து பாடசாலைக் கட்டடத் திருத்த வேலைகளுக்கு சுமார் ஒருலட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்து தந்துள்ளார்கள் இதற்காக பாடசாலைச் சமூகம் பாராட்டி நன்றிதெரிவிக்கக்கடமைப்பட்டுள்ளது.

மேலும் இப்பாடசாலைக்கான வர்ணம் தீட்டும் பணியை பழைய மாணவர்களான திருமதி. ஜெயராசா ஜெயவதனி அவர்களும், ஆசிரியை செல்வி கிரிசா சண்முகநாதன் அவர்களும் செய்து தந்துள்ளமை நன்றியுடன் பாராட்டப்பட வேண்டியதே. இன்னும் பாடசாலை வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் காலத்துக்குக் காலம் பண உதவிகளும் மற்றும் உதவிகளும் புரிந்து வரும் பெற்றோர், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் எனப் பலதரப்பட்டவர்களினதும் செயற்பாடுகளையும் பாராட்டி நன்றி தெரிவிக்கின்றோம். 2005ம் ஆண்டு நடைபெற வேண்டிய இந் நூற்றாண்டு விழா நாட்டு நிலமை காரணமாகப் பிற்போடப்பட்டு இன்று நடைபெறுகின்றது.

பாடசாலையில் கடமையாற்றிய அதிபர், ஆசிரியர்களின் விபரப் பட்டியல் இடப்பெயர்ச்சியின்போது தவறிவிட்டதால் முழுமையாகப் பிரசுரிக்க முடியாமைக்கு வருந்துகின்றோம். அதேபோல அவர்களது புகைப்படங்களும் சீராகக் கிடைக்கப் பெறாமையால் பிரசுரிக்க முடியாமைக்கு வருந்துகின்றோம்.

எமது பாடசாலைக்கு போதிய கட்டட வசதிகள் இல்லை, ஆய்வுகூடம் இல்லை, ஒன்று கூடல் மண்டபம்,தளபாட வசதிகள், விளையாட்டு மைதானம் என்பன நீண்டகாலமாக இல்லாதமை பெருங்குறையாகவே உள்ளன. இவை அவசியம் நிறைவு செய்யப்பட வேண்டிய முக்கியமான தேவைகளாகும்.

எமது பாடசாலை கிராமச் சூழலில் மக்கள் செறிந்து வாழும் பகுதியில் அமைந்துள்ளமையால் கிராம வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாததாகும். எனவே பௌதீகவள வசதிகவற்ற நிலையில் உள்ள இப்பாடசாலை வளர்ச்சியைக் கருத்திற் கொண்டு அவற்றை நிறைவு செய்ய பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் எனப் பலதரப்பட்டவர்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென கேட்டுக் கொள்ளுகின்றோம்.

**த. பரராசசிங்கம்**
**செயலாளர்.**



# புத்தகங்கள் மனிதவாழ்வின் நல்ல பொக்கிஷங்கள்

**"நீர்வை மணி"**

"வாசிப்பதனால் மனிதன் பூரணத்துவம் அடைகின்றான்" எனப் பட்டறிவு படைத்த ஆன்றோர் கூறுவார்கள். மனிதனைப் பக்குவப்படுத்தும் உலகசக்திகள் பலவற்றுள்ளும் புத்தகங்கள் தனிச்சிறப்புடையனவாகும். உலகில் பல்வேறு வழிகளின்மூலம் மனிதவாழ்வு மகத்துவம் பெறுகின்றது. எனினும் புத்தகங்களின் பங்குஇந்தவிதத்தில் நோக்கும்போது அற்புதமான சிந்தனைக்குரிய சிறப்புமிகு பணி ஆற்றுவதைக் காணலாம்.

புத்தகங்கள் ஒவ்வொரு மனிதருக்கும், ஒவ்வொரு கால கட்டங்களிலும் விதம் விதமான புத்துணர்ச்சியையும், புதுமைகளையும் படைப்பதற்குத் தூண்டுகோலாக அமைகின்றது.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

எனும் உலகப்பொதுமறையாம் திருக்குறளின் அறிவுரையானது புத்தகங்களைப் படிக்கும் போது எப்படி அதனை மனத்திற் கொள்ள வேண்டும், நடைமுறையில் அணுக வேண்டும் என்பதை மிக அழகாக அறிவுறுத்துவதாக உள்ளது. புத்தகங்கள் நமக்கு நல்ல அறிவூட்டுவனவாகவும், வழிகாட்டுவனவாகவும் வாழ்வின் முன்னேற்றத்திற்கு அருந்துணை புரிவனவாகவும் மட்டுமன்றி நல்லதொரு பொழுது போக்குச் சாதனமாகவும் விளங்குகின்றது. இதனை நன்கு கண்டு உணர்ந்தவர்களே புத்தகங்களுடன் கூடியநேரம் பொழுது போக்குபவர்களைப் புத்தகப் பூச்சிகள் என வர்ணிப்பார்கள்.

விஞ்ஞான, நாகரீக முன்னேற்றத்தினாற் புத்தகம் வாசிப்பது குறைந்து தொலைக்காட்சி, சினிமா, கணனி, இணையத்தளங்கள், செயற்கைக் கோள்கள் போன்றவற்றின் உதவியுடன் விரைவாகவும், தேவைப்படும் போதும் வேண்டிய, வேண்டிய தேவைகளையெல்லாம் பெற்றுக் கொள்ளவும் இலகுவில் தெரிந்து கொள்ளவும் முடிகின்றது.

இந்த நவீன மாற்றத்தினாற் புத்தகங்கள் எழுதுபவர்களும், வெளியீடு செய்பவர்களும் குறைந்து காணப்படினும் தவிர்க்க முடியாத அவசிய சந்தர்ப்பங்களிலெல்லாம் புத்தகங்களே தேவைக்குத் தேடப்படுவனவாகக் காணப்படுவதை நாம் கவனிக்கலாம்.

பண்டைய இதிகாசங்கள், புராணங்கள் மற்றும் பலதுறை சார்ந்த புத்தகங்கள் என்பனவே மனிதரை மனிதனாக வாழவழிகாட்டிகளாக அமைந்தனவாகும். இன்றைய காலகட்டத்திற் பல்வேறு நவீன சாதனங்கள் காணப்பட்டாலும் புத்தகங்களின் தேவை தவிர்க்க முடியாததாகவே காணப்படுகின்றது.

புத்தகங்களின் தேவையும், அவசியமும், அவற்றின் பயனும் இன்றியமையாததனாற்றான் அவற்றை பேணிப்பாதுகாக்கவும், படிக்கவும், படிப்பிக்கவும், ஆய்ந்தறிந்து பயன்படுத்தவுமென நூலகங்கள் உருவாக்கப்பட்டதெனலாம். நூலகங்கள் வீடுகள் தோறும், கிராமங்கள் தோறும், பட்டினங்கள் தோறும் மட்டுமன்றி உலகளாவிய ரீதியிலும் பெரும்நூலகங்களும், நூல் ஆராய்ச்சிகளும் நடாத்தப்பட்டு வருகின்றன.

புத்தகங்களைப் படிக்கப் படிக்கத் தான் மக்களின் அறிவும், பகுத்தறிவும் தரத்தால் உயர்வுறுகின்றது. ஆதலினால் நல்ல கருத்துள்ள பயன்மிக்க புத்தகங்களைத் தேர்ந்தேடுத்துப் படித்தல், படிக்கின்ற புத்தகங்களில் உள்ள கருத்துக்களை. விடயங்களைத் தெளிவாக மனத்தில் இருத்தல், படித்தவற்றை மற்றவர்களுடன் பகிர்ந்து சிந்தித்தல் என்பன புத்தகப்படிப்பினால் பல்துறைப்பட்ட மனப்பக்குவங்களையும், அனுபவங்களையும் பெறும் வாய்ப்பை ஏற்படுத்தும் எனலாம்.

மேலும் நூலகங்களைப் பரவலாக்குவதும், புத்தகக் கண்காட்சிகள், வெளியீட்டு விழாக்கள் நடாத்தலும், அவற்றிற் பங்குபற்றுவதும், புத்தகம் எழுதுபவர்களை ஊக்குவித்தலும் நாமும் வாசிப்புத்திறன் பெற்றுக் கொள்வதுடன், மற்றையவர்க்கும் உதவி செய்தவர்களாகவும் முடிகின்றது.

எனவே எக்காலத்திற்கும், எல்லோருக்கும் பயன்தரக்கூடியதான புத்தகங்களின் தேவையை நாமும் மனத்திருத்தி, மற்றோர்க்கும் ஆர்வத்தை ஏற்படுத்த ஆவன செய்வோம்.

***"கற்றோர்க்குச் சென்ற இடமெலாம் சிறப்புண்டு"***



## நூற்றாண்டு விழாக்குழு

| | |
|---|---|
| தலைவர் | திரு. ச. வேலழகன் |
| செயலாளர் | திரு. த. பரராஜசிங்கம் |
| பொருளாளர் | திரு. சி. இராசேந்திரம் |

திரு. நா. விஜயகுமார்
திரு. க. வன்னியசிங்கம்
திரு. ஐ. சிவராஜா
திரு. வி. ஜெகதீஸ்வரன்
திரு. பொ. நேசராஜா
திரு. செ. சுப்பிரமணியம்
திரு. மா. இராஜகோபால்
திருமதி. சு. சிவானந்தமூர்த்தி
செல்வி. ம. வசந்தா
செல்வி. ப. தாரணி
திருமதி. ஹே. கணேசலிங்கம்
திருமதி. த. நந்தகோபாலன்
திருமதி. ந. அம்பிகைபாகன்
செல்வி. நா ஜெயகௌரி

## நூற்றாண்டுச் சிறப்பு மலர் வெளியீட்டுக்குழு

திரு. ச. வேலழகன்
திரு. த. பரராாஜசிங்கம்
திரு. சி. இராசேந்திரம்
திரு. சி. சிவதாசன்
திரு. ப. தர்மசங்கரன்
திருமதி. ஜெ. சிவானந்தம்
திருமதி. சு. சிவானந்தமூர்த்தி
திருமதி. வி. சரவணபவானந்தன்
செல்வி. ச. சீவரட்ணேஸ்வரி
செல்வி. நா ஜெயகௌரி
செல்வி. ந. வனஜா
செல்வி. க பிரியா

## தளபாடத் தேவை பற்றிய விபரம்

| இல | தளபாடம் | தேவை | உள்ளது | மேலும் தேவை |
|---|---|---|---|---|
| 01 | C- மேசை | 60 | 40 | 20 |
| 02 | C- கதிரை | 120 | 72 | 48 |
| 03 | B- மேசை | 125 | 10 | 115 |
| 04 | B- கதிரை | 125 | 10 | 115 |
| 05 | A- மேசை | 40 | 33 | 07 |
| 06 | A- கதிரை | 40 | 08 | 32 |
| 07 | ஆசிரியர் மேசை | 12 | 06 | 06 |
| 08 | ஆசிரியர் கதிரை | 20 | 09 | 11 |
| 09 | அலுமாரி | 12 | 03 | 09 |
| 10 | கரும்பலகை | 09 | ..... | 09 |
| 11 | வெண்பலகை | 12 | ..... | 09 |
| 12 | அலுவலக மேசை | 01 | ..... | 01 |
| 13 | அலுவலக கதிரை | 04 | ..... | 04 |

## பாடசாலையின் உடனடித் தேவைகள்

01. சிறுவர் பூங்கா அமைத்தல்.
02. வகுப்பறைகட்கும் அலுவலகத்திற்கும் உருக்கு அலுமாரிகள்.
'03. நூலகத் தளபாடங்கள்.
04. ஒலி பெருக்கி அமைப்பு.
05. திறந்த வகுப்பறைகட்கு கம்பி வலை அடித்தல்.
06. திருத்தம் (தரை, கூரை, சுவர்)
07. ரேடியோ (கசற் ரேடியோ)
08. மேல் மாடி மின் விநியோகம்.
09. கட்டடங்களுக்கு வெள்ளை, வர்ணப்பூச்சு.
10. அலுவலக தளபாடங்கள்
11. காணி கொள்வனவு.
12. விளையாட்டு மைதானம் அமைத்தல்.

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

| | | |
|---|---|---|
| தலைவர்:- | திரு. ச. வேலழகன் | அதிபர் |
| செயலாளர்:- | திரு. த. பரராஜசிங்கம் | சமாதான நீதவான் |
| பொருளாளர்:- | திரு. சி. இராசேந்திரம் | ஆசிரியர் |
| உபதலைவர்:- | திருமதி. லூ. இரத்தினசிங்கம் | பெற்றார் |
| உபசெயலாளர்:- | திரு. S. சதீஸ்குமார் | பெற்றார் |
| | திரு. செ. சுப்பிரமணியம் | பெற்றார் |
| அங்கத்தவர்:- | திரு. சி. சிவதாசன் | ஆசிரியர் |
| | திரு. க. செல்வலிங்கம் | பெற்றார் |
| | திரு. க. மயில்வாகனம் | பெற்றார் |
| | திருமதி. ந. அம்பிகைவாசன் | பெற்றார் |
| | திருமதி. த. நந்தகோபாலன் | பெற்றார் |
| | திருமதி. சு. சிவானந்தமூர்த்தி | ஆசிரியர் |
| | செல்வி. ச. சீவரட்ணேஸ்வரி | ஆசிரியர் |
| | திருமதி. வி. சரவணபவானந்தன் | ஆசிரியர் |
| | திருமதி. ஹே. கணேசலிங்கம் | ஆசிரியர் |
| | செல்வி. ம. வசந்தி | ஆசிரியர் |

## பழைய மாணவர்சங்கம்

| | | |
|---|---|---|
| தலைவர்:- | திரு. ச. வேலழகன் | அதிபர் |
| செயலாளர்:- | திரு. ப. பரமேஸ்வரன் | இயக்குனர் I.M.S. நீர்வேலி |
| பொருளாளர்:- | திரு. ப. தர்மசங்கரன் | பிரதேச சபை நீர்வேலி |
| உபதலைவர்:- | திரு. ஆ. ஸ்ரீபன் | பழைய மாணவன் |
| உபசெயலாளர் | செல்வி. க. பிரதீபா | யாழ். பல்கலைக்கழகம் |
| | செல்வி. நா. ஜெயகௌரி | பிரதேச செயலகம் - கோப்பாய் |
| அங்கத்தவர்:- | செல்வி. அ. லீலா | பழைய மாணவி |
| | செல்வி. ப. தாரணி | ஆசிரியை |
| | திரு. ப. கில்மன் | பழைய மாணவன் |
| | திரு. த. கலாரூபன் | ஆசிரியர் |
| | செல்வி. நா. கலைவேணி | பழைய மாணவி |
| | செல்வி. மு. சாளினி | பழைய மாணவி |
| | செல்வி. லோ. உஷாஜனனி | பழைய மாணவி |

## மாணவர் தலைவர்கள் – 2006

இ. மிறேமசுதன்

ம. நிவாஸ்

வி. நிருபன்

த கிபாசகன்

உ. சபேசன்

ர விஜிதரன்

ஜெ. பிரசன்னா

தே. கபிலேஸ்வரன்

ச பிரசங்கா

வி. பானுஜா

ப. மோகனவிழி

ந. தர்சிகா

ச. விமர்சன்

கா. ரஜிதா

## மாணவர் தலைவர்கள் – 2007

தே. கபிலேஸ்வரன்

செ. தினேஸ்

ஈ. பிரகாந்தன்

இ. விமல்ராஜ்

ம. ஜசிதரன்

ஜெ. ஜெயகீர்த்தன்

இ. கஜீபன்

இ. இதயதீபா

கா. ரஜிதா

ஆ. அபர்ணா

யோ. காசினி

ச. கஜேந்தினி

இ. லக்சாயினி

ந. அனுசியா

# அன்பின் பண்புகள்

அன்பு என்ற சொல் மூன்று எழுத்துக்களைக் கொண்டது. மூன்று எழுத்துக்களையும் சேர்த்துச் சொல்லும் போது உண்டாகும் ஒலியின் மென்மையை சற்றுக் கவனித்தால் அந்த ஓசை நயமே அன்பின் தன்மையை வெளிப்படுத்துகின்றது. ஆகவே அன்பு என்பது எமது உள்ளத்தில் தோன்றுகின்ற ஓர் நெகிழ்ச்சியான இன்ப உணர்ச்சி ஆகும். அதற்கு உருவமோ வடிவமோ கிடையாது. அந்த உணர்வு இடத்திற்கு இடம் வேறுபடும். தாய் குழந்தையிடம் செலுத்தும் அன்புக்கு பாசம் என்றும், கணவன் மனைவியிடம் செலுத்தும் அன்புக்கு காதல் என்றும், ஒருவன் நண்பர்களிடம் செலுத்தும் அன்புக்கு நட்பு என்றும் ஒருவன் இறைவனிடம் செலுத்தும் அன்புக்கு பக்தி என்றும் கூறுவர். தமிழ் என்ற சொல்லுக்கு மூன்று எழுத்து அம்மொழியிலுள்ள அன்பு என்ற சொல்லுக்கும் மூன்று எழுத்து அவ் அன்பு சார்ந்த பாசம், காதல், நட்பு, பக்தி, பற்று, பண்பு, நன்றி, அறம் இவைகளுக்கும் மூன்று எழுத்து. அன்பும் சிவமும் ஒன்றே என்பதைக் காட்டும் அன்பு, சிவம் இச் சொற்களும் மூன்று எழுத்துக்களால் ஆனவையே ஆகும்.

அன்பு என்பது ஒரு சிறந்த பண்பு. அன்பு எமது வாழ்க்கைக்கு சிறப்பைத் தரும். அன்பு இல்லா வாழ்க்கை அர்த்தமற்றது. அன்பு இல்லா உடம்பு எலும்பின் மேல் போர்த்த தோல் போன்றதாகும். அன்பிற்கு நீள, அகல, ஆழம் காணமுடியாது. அன்பு எல்லையற்றது. அது பரந்து விரிந்து அள்ள அள்ளக் குறையாத ஜீவ நதி. ஆதலினால் அன்பிற்கு அடைத்து வைக்கும் தாள் எதுவும் உண்டோ என்கிறார் திருவள்ளுவர். இந்த அன்பானது தாயையும் பிள்ளையையும், கணவனையும் மனைவியையும், காதலனையும் காதலியையும் இணைக்கின்றது. அத்தோடு நம்மை ஆண்டவனுடனும் சமூகத்துடனும் பிறஉயிரினங்களுடனும் இணைக்கிறது.

இனி இந்த அன்பை மூன்று வகையாகப் பிரிக்கலாம். பெரியோர்கள் மகான்களிடம் செலுத்தும் அன்பு, உறவினர்கள் நண்பர்களிடம் செலுத்தும் அன்பு, தேவைகளையும் காரியங்களையும் நிறைவு செய்வதற்காக நாம் ஒருவரிடம் செலுத்தும் அன்பு இம்மூன்றும் நிலையான மாறாத அன்பு அல்ல பெரியோர்கள் மகான்கள் நெறிதவறி வாழ்ந்தால் அவர்கள் பால் நாம் வைக்கும் அன்பு நாளடைவில் தேய்ந்து போய்விடும். உறவினர்கள் நண்பர்களிடம் வைக்கும் அன்பு அவர்கள் கோபித்தால் வெறுத்தால் அது போய் விடும். இந்த மூவகை அன்பும் காரணத்தால் ஏற்பட்டவை. காரணம் இல்லாமல் வைக்கும் அன்பே உண்மையான நிலையான அன்பாகும். உதாரணமாக ஒருவர் நம்மிடம் நெருங்கிப் பழகினாலும் சரி, அவரிடம் தெய்வீக குணம் இல்லா விட்டாலும் கூட, அவரிடம் மாறாத அன்பு வைத்தால் அதுவே உண்மையான அன்பு. இந்த அன்பு எங்களிடம் யாருக்காவது இருக்கிறதா என்றால் பெரும்பாலும் இல்லை என்றே கூறலாம். இது காரணம் இல்லாத அன்பு. இந்த அன்பு கடவுள் ஒருவருக்குத்தான் இருக்கிறது.

இனி ஒரு காதலனுக்கும் காதலிக்கும் இடையில் வளரும் அன்பும், நமக்கு பணம், பொருள் தருபவரின் அன்பும் ஒரே தன்மையைக் கொண்டவையே. இந்த அன்பு நாளுக்கு நாள் வளர்ந்து செல்வது நீரானது நாளுக்கு நாள் உறைந்து பனிக்கட்டி ஆகிக்கொண்டு போவது போல

அவர்களுடைய அன்பானது கெட்டி ஆகிக்கொண்டே செல்கிறது. இவ்வகை அன்பு தன்னலத்தை மையமாகக் கொண்டு செல்கிறது. ஆனால் நாம் இறைவனிடம் வைக்கும் அன்போ நீரானது ஆவிஆகிக் கொண்டு தன் உருவமே இல்லாது போவது போன்றதாகும். அதாவது நாம் இறைவனிடம் வைக்கும் அன்பு தன்னலமற்றது. இது மாறாத அன்பு. இம்மாறாத அன்பு வளர்ந்து வளர்ந்து பக்தியாக மாறுகிறது. இப்பக்தியானது நாம் இறைவனை அடைவதற்கு வழிவகுக்கின்றது.

நாம் மனிதப்பிறவி எடுத்ததன் நோக்கம் அன்பு செலுத்துவதுதான் அன்பு செலுத்துவதால் ஏற்படும் ஆனந்தத்திற்கு நிகர் வேறு எதுவும் இல்லை. தனக்கென்று பொருள் சேர்ப்பதிலும், புகழ்சேர்ப்பதிலும் ஒருவருக்கு தற்காலிக இன்பம் கிடைக்கலாம். ஆனாலும் இவற்றில் எமது உள்ளம் நிறைவான ஆனந்தம் அடைவது இல்லை. நாம் பிறரிடம் உண்மையான அன்பு செலுத்தும் போது ஏற்படும் சிரமங்கள், பணச்செலவுகள் எமக்கு துன்பமாகத் தெரிவது இல்லை. காரணம் அன்பினால் ஆன ஆனந்தமும் நிறைவும் இத்துன்பத்துக்கு மேலாகத் தெரிகிறது.

“எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லால் வேறொன்றும் அறியேன் பராபரமே”. என்றார் தாயுமானவர் சுவாமிகள். எல்லா மக்களும் இன்பமாக வாழ்வதே நம் எல்லோரினுடைய இறுதி இலட்சியமாக இருக்க வேண்டும். அப்படியாக இன்பவாழ்வு வாழ்வதற்கு அன்பு வழியாக மக்கள் நடக்க வேண்டும். பகைமை எண்ணத்தை ஒழித்து நட்பு எண்ணம் வளர வேண்டும். அன்பு செலுத்தி வாழ்ந்தால் உடல் உயிரோடு கூடி வாழ்கிறது. அன்பில்லா வாழ்க்கையால் நாம் பிறந்த பயனை அடைய முடியாது. நல்ல அறம் செய்து இன்புற்று வாழவும் முடியாது. “அறம் செய்ய விரும்பு” என்று ஔவை பிராட்டி கூறுகிறார். ஆனால் அன்பில்ல உயிரை அறம் வருத்தும் என்று வள்ளுவர் கூறுகிறார். ஒருவனிடம் அன்பில்லாக் காரணத்தால் அறத்தைக் கண்டு அஞ்சுகிறான். ஆகவே அன்புதான் மக்களுக்கு ஜீவ நாடியாக விளக்குகிறது. ஆகையால் ஆறறிவு படைத்த மக்களாகிய நாம் எல்லோரிடத்திலும் அன்பாயிருத்தலே சிந்த பண்பும் அறிவுடைமையும் ஆகும்.

*திரு. சி. இராசேந்திரம்*
*ஆசிரியர்*

# வாசிப்பு மனிதனை முழுமையானவன் ஆக்குகின்றது

"தேடல் உள்ள உயிர்களுக்கே
வாழ்வில் ருசி இருக்கும்"

ஆம் மனிதன் எவ்வளவு தான் பட்டங்களைப் பெற்றாலும் அவன் வாழ்வின் ஒவ்வொரு நுணுக்கங்களையும், நுண்மைகளையும் இறக்கும் வரை தேடிக்கொண்டே தான் இருக்கின்றான். பாடசாலைக் கல்வி, பல்கலைக்கழகக் கல்வி பின்னர் தொழிற்கல்வி என்று விரிவாக்கப்படும் எமது கல்வியானது ஒரு வரையறையின் கீழ் சொல்லிக் கொடுப்பது அன்று தேடப்படுவதே, என்னும் நியதியின் கீழ் கொண்டு உருவாக்கப்படுகின்றது. இத்தேடல் என்பது இங்கு நாமாகவே நாம் பெற்றுக்கொள்ளும் ஞானமாகின்றது. அதனை நாம் முற்று முழுதாக வாசிப்பு மூலமாகவே பெற்றுக் கொள்ளலாம். வாசிப்பதனால் மனிதன் மேலும் மேலும் தனது அறிவைத் தேடுகின்றான். அறிவை அவன் மேலும் மேலும் பெறுகின்ற போது அவன் ஒரு முழுமையான மனிதன் ஆகின்றான். எனவே வாசிப்பு என்பது வயதுக் கட்டுப்பாடோ அல்லது நேரக்கட்டுப்பாடோ இல்லாதது. நேரம் இருக்கும் போதெல்லாம் நல்லவற்றை வாசிக்க வேண்டும். குறிப்பாக இன்று ஆங்கிலம் பேசத்தெரிந்தவர்கள் எண்ணிக்கை குறைந்து கொண்டே போகின்றது. காரணம் வாசிப்பின்மையே ஆனால் ஆங்கிலம் அவர்களுக்கு பேசத்தெரியாது என்று சொல்ல முடியாது. ஆங்கிலத்தை இவர்கள் பாட ரீதியான ஏட்டுவழியாகப் பெற்றுக் கொண்டவர்கள் தான் அவர்கள் அதனை விருத்தியாக்குவதற்கு வேண்டிய அறிவை வாசிப்புப் பழக்கத்தினால் மட்டுமே பெற்றுக் கொள்ள முடியும். இதனைப் பெறத் தவறும் பட்சத்தில் தான் இத்தகைய பிரச்சனைகள் தலை தூக்குகின்றது.

வாசிப்பானது மனிதனை பூரணமாக்குகின்றது. எனவே வாசிப்பினை மனிதன் மேன் மேலும் வளர்த்துக் கொள்ள வேண்டும். இதனால் பல பயன்களை மனிதன் பெறுகின்றான். பத்திரிகையை வாசிப்பதனால் உள்நாட்டு செய்திகள், வெளிநாட்டு செய்திகள் தொலைநாட்டுச் செய்திகள், விளையாட்டுச் செய்திகள், சமயல் குறிப்புக்கள், மாணவர்களுக்கான பொது அறிவுகள் என்பவற்றை வாசிப்பதனால் பலபலன்களை பெற்றுக்கொள்ள முடியும். புத்தகங்கள் வாசிப்பதனால் பல அறிவுகளையும், உயர்ச்சிகளையும் கொடுக்கிறது வாசிப்பதாகும். இன்றும் எமது கல்விக்கு துணையாக இருப்பது வாசிப்பாகும். வாசிப்பானது எல்லோருக்கும் ஓர் உறுதுணையாக இருக்கின்றது. வாசிப்பு என்ற அறிவு இருந்தால் கல்வியை மேன்மேலும் உயர்த்திக் கொள்ளமுடியும். எந்நேரமும் கட்டுப்பாடின்றியும் வாசிப்பதனால் பல அறிவுகளையும் பெற்றுக் கொள்ளலாம். மூளை வளர்ச்சிக்கு பெரும் பங்கு வகிப்பது வாசிப்பாகும். வாசிப்பு அறிவு இல்லாததால் பலபேருக்கு பல பிரச்சனைகளை எதிர்கொள்ள வேண்டிய நிலமை உண்டாகும். எனவே வாசிப்பு இருந்தால் தான் பல பிரச்சனைகளுக்கு தீர்வு காண முடியும். இது எல்லோருக்குமே முக்கியமானதாக காணப்படுகின்றது. இதற்கு வரையறையே இல்லை. இவ்வாறு இருப்பதனால்

கல்வியை உயர்த்திக் கொண்டே போக முடியும். வாசிப்பு என்ற அறிவு இருக்குமானால் கல்விக்கு உறுதுணையாக இருக்கும். அரசனுக்கு அந்நாட்டில் தான் சிறப்பு ஆனால் கல்வி கற்றவனுக்கு சென்ற இடமெல்லாம் மதிப்புண்டு. வாசிப்பை பல வழிகளில் பயன்படுத்திக் கொள்ளலாம். மனிதனுக்கு பூரண அறிவு இருக்க வேண்டும். எனவே இவ்வாறு இருந்தால் ஓர் மனிதன் பூரணமடைகின்றான். மனிதனுக்குத் தேவையானது அறிவுதான். விலங்குகளில் இருந்து ஓர் படி உயர்ந்ததால் அதாவது பகுத்தறிவு என்ற அறிவு உள்ளதால் மனிதன் விலங்குகளிலிருந்து பிரிகின்றான். மனிதனுக்கு வாசிப்பு இருந்தால் கல்வியை மேன்மேலும் உயர்த்த முடியும். மனிதன் பூரணமடைவான். ஆனால் அதற்கு தேவையானது வாசிப்பாகும். எனவே வாசிப்பை மனிதனானவன் வளர்த்துக் கொள்ள வேண்டும். வாசிப்பு இருக்கும் மனிதன் முழுமையானவன் ஆகின்றான்.

நன்றி

*அ. நிருஜா*
*தரம் – 9*

**நீர்வேலிக் கிராமத்திலே**
**நீங்காத கல்விப் பணியில்**
**நூற்றாண்டுகட்கு மேலாகத்**
**தடம்பதித்துத் தலைநிமிர்ந்து**
**நிற்கும்**
**றோ. க. த. க. பாடசாலை**
**மேன்மேலும் கல்விப்பணியில்**
**உயர்ந்து விளங்க மனமகிழ்வுடன்**
**வாழ்த்துகின்றோம்.**

**ஸ்ரீ கணேசா அறநெறிப் பாடசாலை**
**நீர்வேலி.** **சமூகத்தினர்.**

# நீர்வேலியின் சிறப்பு

நீர்வளமும் நிலவளமும் நிறைந்திடும் இவ்வூரில்
நிலையான செல்வம் தரும் பழமரங்கள் பலஉண்டு
கைத்தொழிற் சாலைகள் பற்பல உண்டு
கம்மாலை வேலைக்கும் பேர் போனதிவ்வூர்

எத்தனையோ சனசமூக நிலையங்கள் உண்டு
எல்லாமே நமக்கு அறிவுதனை ஊட்டும்
பற்பல பள்ளிகளும் ஆங்காங்கே உண்டு
பகர்ந்திடுவேன் இதன் பெருமை சற்று நீரும் கேட்பீர்

அத்தியார், R. C, C. C, சைவப்பிரகாசா, M. M.
அனைத்து நிலையங்களும் கல்விதனைப் புகட்டும்
இத்தனை நிலையங்களும் இருந்தும் எம்சிறார்கள்
ஏனோ அங்கலாய்க்கிறார்கள் வேறிடம்நாடி

காமாட்சியம்மனுடன் மீனாட்சியம்மனும்
கதிர்காம ஆலயமும் கந்தன் ஆலயமும்
பிள்ளையாருடன் முருகன், வைரவர் ஆலயங்கள்
புகழ்பெற

வளமான மாதர்சங்கங்கள் உண்டு
வாழ்க்கைக்கு வழிகாட்டும் மரத்தொழிற்சாலையுண்டு
சிறார்களுக்கான முன்பள்ளிகளுண்டு
சிறப்பாகச் சொல்லிவிட இனிப்புத் தொழிற்சாலையுண்டு

இனியபழ மரங்களான மா, பலா, வாழை
இதமாக வளர்கிறதே இனிமையான ஊரில்
நீர்வையூரின் சிறப்பிதனை நினைவிலே கொள்வீர்
நிம்மதிபெற வேண்டில் நம்மூர் வாரும்

*கு. மயூரதி*
*தரம் –09*


## கடமையால் உயர்ந்த
## அதிபர் திலகங்களின் புகைப்படங்களில்
## எமது கைக்கு எட்டியவை




அதிபர் திலகம்
திரு. மு. வைத்திலிங்கம் அவர்கள்
20.04.1978 முதல் 24.04.1985 வரை



அதிபர் திலகம்
திரு. த. மயில்வாகனம் அவர்கள்
25.04.1985 முதல் 24.04.1990 வரை



அதிபர் திலகம்
திரு. பொ. த. இராசா அவர்கள்
24.04.1990 முதல் 14.05.2001 வரை



அதிபர் திலகம்
திரு. க. அருமைத்துரை அவர்கள்
15.05.2001 முதல் 07.08.2004 வரை

## சிறுவயதிலேயே கணனிக்கல்வி எதிர்காலத்துக்கு அத்தியாவசியம்!

குழந்தைகளுக்கு உகந்த வயதுகளில் சரியான விடயங்களைக் கற்றுத்தருவது பெற்றோர்களின் கடமை. கம்பியூட்டர் தொழில் நுட்பத்தினை எப்போது, எப்படிக் கற்றுக் கொடுப்பது என்று இன்றைய பெற்றோர்கள் குழப்பமடைகிறார்கள்.

இன்றைய உலகில் கம்பியூட்டர் தொழில் நுட்பமானது சகல துறைகளையும் பாரிய வளர்ச்சிக்கு உட்படுத்தியிருக்கின்றது. கல்வித் துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. ஆரம்ப காலங்களில் மாணவர்களின் மேற்படிப்புகளிலேயே கம்பியூட்டரானது பாவிக்கப்பட்டது.

ஆனால் தற்போது குறிப்பாக இன்டர்நெட்டின் அறிமுகத்தின் பின் குழந்தைப் பருவங்களிலேயே கம்பியூட்டர் பாவனை அறிமுகப்படுத்தப்படுகின்றது. இதனால் சிறு வயதுகளில் கம்பியூட்டரை பாவிப்பதற்கு குழந்தைகளுக்கு பெற்றோர் உதவி செய்ய வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது.

எந்தெந்த வயதுகளில் எவ்வகையான பாவனை முறைகளை குழந்தைகளுக்கு கற்றுக் கொடுக்க வேண்டும். அவை எவ்வகையான நன்மைகளைத் தங்கள் குழந்தைகளுக்கு பெற்றுத்தரும் என்பன போன்ற விபரங்களைப் பெற்றோர் அறிந்து கொள்வது அவசியமாகின்றது.

தங்களுக்கு தேவையான தகவல்களை சேகரித்தல், அவற்றை ஆராய்ந்து முடிவுகளை, தீர்வுகளை மேற்கொள்ளுதல், எதிர்கால வேலை வாய்ப்புக்கான தகமைகளைப் பெற்றுக் கொள்வதற்கான சரியான அடித்தளத்தை இடுதல் போன்ற பல நன்மைகளைக் கம்பியூட்டர் தொழில்நுட்பம் குழந்தைகளுக்கு வழங்குகின்றது.

கற்றலில் உதவி செய்கின்ற ஒரு ஊடகமாகவும் இது விளங்குகின்றது. ஆயினும் இவ்விடயத்தில் ஒன்றைச் சுட்டிக்காட்டுவது பொருத்தமானது. கம்பியூட்டர் தொழில்நுட்பமானது கல்விக்கு உறுதுணையாக அமையுமே தவிர ஒரு சிறந்த மாணவனை, மாணவியை உருவாக்குவதற்கு இது மட்டும் போதாது.

வெளியுலகச் செயற்பாடுகள், நல்ல நண்பர்கள், சிறந்த குடும்பம் சரியான முறையிலான கல்வி போன்ற பல காரணிகள் ஒரு குழந்தையினுடைய ஆரோக்கியமான உள வளர்ச்சியினை தீர்மானிக்கின்றன.

ஆகவே குழந்தையானது அளவாக கம்பியூட்டரை பாவிப்பதுடன் வெளியுலகச் செயற்பாடுகளில் ஈடுபடுவதும் முக்கியமானதாகும்.

குழந்தையினுடைய ஆரோக்கியமான வளர்ச்சியில் முழுக்குடும்ப அங்கத்தவர்களுமே பொறுப்பாக இருப்பதை மறுக்க இயலாது. குழந்தைகளின் நடவடிக்கைகளில் பங்குகொண்டு சரியான முறையில் வழிநடத்தி, அவர்களை

உட்சாகமூட்டும் போதுதான் அவர்கள் தங்கள் அறிவை விரைவாகவும் நல்ல முறையிலும் வளர்த்துக் கொள்கின்றார்கள். ஒரு குழந்தையினுடைய கல்விச் செயற்காடுகளில் பங்கு கொள்வதற்கு கம்பியூட்டர் செயற்பாடுகளில் ஈடுபடும் போது அவர்களுடன் பங்கு கொள்வது சுவாரசியமானதாகும்.

தங்கள் குழந்தைகளுக்கு எந்த வயதில் கம்பியூட்டர் பாவனை முறையை அறிமுகப்படுத்துவது, எவ்வாறான கம்பியூட்டர் செயற்பாடுகள் நல்லவை, இன்டர்நெட்டை எவ்வாறு வயதுக்கேற்ப ஆரோக்கியமான முறையில் உபயோகிப்பது போன்ற பல கேள்விகள் பெற்றோர் மனங்களில் எழுவது இயல்பே.

இவை தொடர்பான முறையான ஆய்வுகள் பெரிதாக மேற்கொள்ளப்படவில்லையாயினும் இத்துறைகளில் நிபுணத்துவம் பெற்றவர்கள் நல்ல ஆலோசனைகளையும் அறிவுறுத்தல்களையும் சிபார்சு செய்கின்றனர். ஆயினும் இந்த ஆலோசனைகளை நடைமுறைப்படுத்த முன் இரண்டு விடயங்களை கவனிக்க வேண்டும்.

1. ஒவ்வொரு குழந்தைகளும் அவர்களது விருத்தியிலும், முதிர்ச்சியிலும் வித்தியாசப் படுகின்றார்கள். ஆகவே பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுடைய உணர்வுகளையும் ஆற்றல்களையும் சரியாக புரிந்து கொண்டு அவற்றிற்கேற்ப கம்பியூட்டர் தொழில் நுட்பத்தை அறிமுகப்படுத்துவது அவசியமாகும்.

2. கம்பியூட்டர் கற்பதை ஒரு மைல்கல்லாக பெற்றோர் எண்ணக்கூடாது. உதாரணமாக ஒரு குழந்தை 15 மாதத்தில் நடக்க ஆரம்பிக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பைப் போல கம்பியூட்டர் கற்றுக் கொள்வதை நோக்குதல் கூடாது.

மேற்கூறிய இரு விடயங்களையும் கருத்தில் கொள்வது மிக அவசியம். எனவே ஒவ்வொரு வயது பிரிவினருக்கும் எவ்வாறான கம்பியூட்டர் விடயங்களை கற்றுக் கொள்ள வேண்டும் என்பதை ஆசிரியர்களும் பெற்றோர்களும் உணர்ந்து அந்தந்த விடயங்களை மாணவர்கள் கற்றுக்கொள்ள வழிப்படுத்த வேண்டும். உதாரணமாக 8 வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகள் தமது கற்றல் செயற்பாட்டை விருத்தி செய்து கொள்ளக் கூடிய வகையில் கம்பியூட்டரையும் இன்டர்நெட்டையும் அதிகளவில் உபயோகிக்கக் கூடியதாக இருக்கும். உதாரணமாக தேவையான படங்களையும் கலைக்களஞ்சியங்களையும் பார்ப்பதற்கு இன்டர்நெட்டினை பயன்படுத்திக் கொள்ளலாம். எனவே இவ்வயதுகளில் சுதந்திரமாக சிந்திக்கவும் செயற்படவும் கூடிய ஆற்றல்களை மாணவர் பெற்றிருப்பர். ஆகவே அவர்களை உன்னிப்பாக அவதானித்து சரியான ஒழுங்கு முறையில் கற்றுக் கொடுக்க வேண்டிய அவசியம் இவ்வயதுகளில் அதிகம் உண்டு.

உலகின் தற்போதய, எதிர்கால வேலைவாய்ப்புக்கள் பெரும்பாலும் கம்பியூட்டரை சார்ந்தே நிர்ணயிக்கப்படுகின்றன. கம்பியூட்டர் தொழில்நுட்பத்தில் தேர்ச்சி பெற்றிருப்பது ஆண், பெண் பால் வேறுபாடின்றி அவசியமாகின்றது.

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு கம்பியூட்டர் பாவனையின் முக்கியத்துவத்தை தெளிவுபடுத்துவதுடன் அவர்களை உற்சாகப்படுத்தலும் அவசியமாகின்றது.

குழந்தைகள் உரிய முறையில் கம்பியூட்டர் தொழில் நுட்பத்தைக் கற்றுக் கொள்வதற்கும் பெற்றோர்களின் பங்கு அவசியமாகின்றது. தங்கள் குழந்தைகளின் ஆற்றல்களை சரியாக இனங்கண்டு அதற்கேற்ப அவர்களுக்குச் சரியான வயதுகளில் உரிய கம்பியூட்டர் பாவனை முறையை அறிமுகப்படுத்தி அவர்களின் எதிர்காலத்திற்கு அத்திபாரமிடுவது அவசியமான கடமையாகும்.

செல்வி. ப. தாரணி

ஆசிரியை

## சொற்புதிர்

| கு | ம் | ப | கோ | ண | ம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |

| | |
|---|---|
| மனதுடன் தொடர்புடையது | 156 |
| வாழ்க்கைக்கு அவசியம் எனக்கருதப்படுவது | 356 |
| மூக்கு மேல் சிலருக்கு வருவது | 432 |
| 12 இராசிகளில் ஒன்று | 1236 |
| மங்களகரமான நிகழ்விற்கு வைப்பது | 1236 |
| கணிதத்தில் பயன்படும் ஒருசொல் | 456 |
| இந்தியாவின் ஒருஇடம் | 123456 |

## பள்ளிக்கூடம்

பள்ளிக்கூடத்தை நாம் ஆங்கிலத்தில் "ஸ்கூல் (SCHOOL)" என்று அழைக்கின்றோம். இந்த ஸ்கூலுக்கு ஆங்கிலத்தில் அழகிய பொருள் உண்டு.

| | |
|---|---|
| S - Sincerity | நேர்மை |
| C - Capacity | திறமை |
| H - Honesty | உண்மை பேசும் குணம் |
| O - Obedience | மரியாதை |
| O - Orderliness | ஒழுக்கம் |
| L - Learning | கல்வி அறிவு |

செ. சிறிகாந்தன்

தரம் 9

# மறதிக்கு மருந்து

நாம் தினமும் எத்தனையோ விடயங்களைப் பார்க்கின்றோம், படிக்கின்றோம், பேசுகின்றோம். ஆனால் அதில் பெருபாலானவற்றை அடுத்த கணமே மறந்து விடுவோர் தான் நம்மில் அதிகம் தேவையற்றதை மறந்து விடுவதால் தீங்கில்லை ஆனால் தேவையானதையும் சேர்த்தல்லவா மறந்து விடுகின்றோம்.

மனித மூளை சிக்கலானதும் சக்திவாய்ததுமாகும். ஒரு அதிபுத்திசாலிகூட தனது மூளையின் 5 வீதத்திலும் குறைவான வல்லமையைத் தான் பயன்படுத்துகின்றான்.

ஞாபகசக்தி எமது மூளையின் ஆற்றல்களில் ஒன்று. குறைவான நினைவாற்றல், நல்ல நினைவாற்றல், பயிற்றப்பட்ட நினைவாற்றல் என்று கூறுவதே பொருத்தமானது என விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள் முயன்றால் எம்மால் பல விடயங்களை இலகுவில் மூளையில் பதிய வைக்க முடியும் பொருட்களை, பெயர்களை, மனித முகங்களை எண்ணங்களை இலகுவில் பதிய வைக்க எளிய முறைகள் இருக்கின்றன.

எனவே மாணவர்களும் இவ்உத்தியைக் கையாள்வது நல்லது ஒரு பின்னத்தில் எது பகுதிஎண் எது தொகுதிஎண் எனக் கேட்டால் பலரால் உடனே பதில் சொல்ல முடிவதில்லை. ஆனால் தொகுதியைத் தொப்பியுடன் தொடர்புபடுத்தி தொப்பி மேலே இருக்கும் என்பதை மனதில் ஆழப்பதிந்து வைத்த மாணவன் மேலே உள்ளது தொகுதிஎண், கீழே உள்ளது பகுதிஎண் என உடனடியாகவே பதிந்து விடுவான்.

இதயத்தின் இடது பக்கமா? அல்லது வலது பக்கமா? இருகூர்வால்வு எனக் கேட்கப்படும் கேள்விக்கு இடது பக்கத்தின் முதல் எழுத்தையும் இருகூர்வால்வின் முதல் எழுத்தையும் ஒன்றென ஞாபகப்படுத்திக் கொண்ட மாணவன் சட்டென இடதுபக்கம் எனப்பதில் தந்து விடுவான்.

வெறுமனே மனைஞ் செய்வதை விட இவ்வாறே ஒன்றுடன் ஒன்று தொடர்பு படுத்துவதன் மூலம் வரும் நினைவாற்றல் சாகாவரம் பெற்றது. இலகுவில் மனதில் பதிந்து விடுகிறது. ஞாபகசக்தி அதிகம் என்று சொல்பவர்கள் பலர். இவ்வாறான முறைகளைப் பின்பற்றித் தான் தம்மையெல்லாம் பிரமிப்பில் ஆழ்த்தி விடுகிறார்கள்.

எனவே மாணவர்களே ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்தும். இதே போன்ற தமக்குச் சாதகமான முறைகளைத் தேடிப்பிடித்துக் கடைப்பிடிப்பதன் மூலம் அதனைச் சாதகமாக்கலாம்.

திருமதி. V. சரவணபவாநந்தன்
ஆசிரியர்

# மாணவர்களின் நன்னடத்தை

மாணவர்கள் நல்ல பழக்க வழக்கங்களை எவ்வாறு கற்றுக்கொள்ள வேண்டும் என்பதை உணர்த்தக்கூடிய கதையொன்று முன்வைக்கின்றேன்.

ஒரு முகாமையாளர் தனது அலுவலகத்தில் தனக்கு உதவியாகப் பணியாற்ற ஒரு குமாஸ்தா தேவை என விளம்பரப்படுத்தியிருந்தார். அந்த வேலைக்குச் சுமார் ஐம்பது இளைஞர்கள் விண்ணப்பம் அனுப்பியிருந்தார்கள். பலரிடம் ஏராளமான சான்றிதழ்களும் பரிந்துரைக் கடிதங்களும் இருந்தன. அந்த முகாமையாளர் பரிந்துரைக் கடிதம் இல்லாமல் வந்த ஒரு நபரை வேலைக்கு அமர்த்திக் கொண்டு மற்றவர்களை அனுப்பி விட்டார். எந்தக் காரணத்தின் அடிப்படையில் அந்த நபரை வேலைக்குத் தேர்ந்தெடுத்தீர்கள்? அந்த நபரிடம் சான்றிதழ் இல்லை பரிந்துரைக் கடிதங்களும் இல்லை என்றார்.

நண்பரே, தாங்கள் தவறாகப் புரிந்து கொண்டீர்கள் அந்த நபரிடம் பரிந்துரைகள் ஏன் இல்லை ஏராளமாக உள்ளன. அறைக்குள் நுழைவதற்கு முன்பாக காலைத் துடைத்துக் கொண்டு வந்தார் உள்ளே வந்ததும் கதவை மூடிவிட்டார். இதிலிருந்து அந்த நபர் தூய்மையையும் ஒழுங்கு முறையையும் கடைப்பிடிப்பவர் எனத் தெரிகிறது.

நான் வேண்டுமென்றே தரையில் போட்டிருந்த புத்தகத்தை எடுத்து மேசையின் மீது வைத்தார். ஆனால் மற்றவர்கள் அதைத் தாண்டி வந்தார்கள். அந்த நபர் தான் அமர்ந்திருந்த இடத்தை ஒருவயதான நொண்டியான நபருக்கு கொடுத்தார். இதன் மூலம் அந்த நபர் பண்பும் மரியாதையும் உடையவர் என்று அறிகிறோம். அவர் துணிகளை நன்கு துவைத்து அணிந்திருக்கின்றார். தலையை ஒழுங்காகச் சீவிக் கொண்டிருக்கிறார். அவரது தோற்றத்தில் தூய்மையும், பண்பும் தெரிகிறது. அவர் தனது முறைவரும் வரை காத்திருந்தார் மற்றவர்கள் ஒருவரை ஒருவர் தள்ளிக்கொண்டு வந்தனர். இது அவரது நல்ல பழக்கங்களைச் சுட்டிக் காட்டுகிறது.

“இவற்றைப் பரிந்துரைகள் எனத் தாங்கள் கருதவில்லையா? நான் அப்படித்தான் கருதுகிறேன் ஆதலால் தான் இந்த இளைஞரை நான் வேலைக்கு அமர்த்தியிருக்கிறேன். இந்த நபரைச் சரியான முறையில் தேர்ந்தெடுத்திருப்பதாக நான் எண்ணுகிறேன். ஏனெனில் அவர் தூய்மையாகவும் நற்பண்புகளுடனும் விளங்கினார் அவர் சீராகவும் ஒழுங்கு முறையுடனும் பண்புடனும் மரியாதையுடனும் நடந்து கொண்டார்.

மாணவர்களே! கதையில் வேலைக்கு அமர்த்திக் கொள்ளப்பட்ட அந்த நபரின் நடத்தையுடன் உங்கள் நடத்தையை ஒப்பிட்டுப் பாருங்கள் ஆழ்ந்து சிந்தியுங்கள் உங்களது தவறுகளையும் பலவீனத்தையும் அறிந்து கொள்ளுங்கள். நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் எனத் தெரிந்து கொண்டு உங்களை நீங்களே திருத்திக் கொள்ள முயற்சி செய்யுங்கள்”

யோ. காசினி

தரம் – 07

# விஞ்ஞானக் கல்வியும் ஆங்கிலமும்

ஆங்கிலமானது தற்காலத்தில் உலக மொழியாக வளர்ந்து வருகிறது. அதேவேளை முன்பு எமது சுயமொழிக் கல்வியானது தூரத்து இலட்சியமாகவும் தேசப்பற்றுள்ள பேச்சின் பிரதிபலிப்பாகவும் இருந்தது. ஆனால் இன்றோ கண்முன்னால் நடந்து கொண்டிருக்கும் கல்வி முறையாக உள்ளது கலைத்துறையில் உயர் கல்வியும் சுயமொழிகளிலேயே போதிக்கப்படுகின்றது. தாய் மொழியில் விஞ்ஞானக் கல்வியும் போதிக்கப்படும் காலமாகவும் தற்காலம் விளங்குகின்றது.

எமது நாட்டுக் கல்வியிலே பொதுவாகவும் விஞ்ஞானக் கல்வியிலே சிறப்பாகவும் ஆங்கிலம் எத்தகைய தானத்தை வகித்தல் வேண்டும் அல்லது வகிக்கப்போகிறது என்பதே கேள்வி இதற்கு விடைகூற முற்படும்போது பொதுவாக எம்மக்கள் பல காரணங்கள் கூறி கடத்துகின்றனர். இன்றைய நிலையில் விஞ்ஞானக் கல்வியை தாய்மொழிமூலம் பெறுவதற்கேற்ற வசதியும் வளமும் தாய் மொழிக்கு இல்லை என்பதாகும். இது கல்வியாளரைச் சம்பந்தப்படுத்தும் ஒரு பிரச்சனை.

அடுத்து விஞ்ஞானத்தைச் சுயமொழியில் படித்து விட்டு பிறநாடுகளுக்குச் சென்று என்ன செய்வது என்ற பிரச்சனை. இது கல்வி சம்பந்தமான பிரச்சனை அன்று இந்நாட்டை நீக்கிப் பிற நாடுகளில் வாழ விரும்புபவர் சம்பந்தமான பிரச்சனை. இவ்விரண்டையும் ஒன்றாகக் கொண்டு மயங்குதல் கூடாது. ஆனால் இவ்விரண்டிற்கும் பொதுவான ஒற்றுமை உள்ளது. தாய் மொழியில் உயர்தர ஆராச்சி செய்யும் மட்டத்தில் விஞ்ஞானப் பயிற்சி பெறுவதற்குப் போதிய மொழிவளம் இன்று இல்லையென்று ஓரளவுக்குக் கூறலாம். ஆனால் அவ்வாறு பேராட்சி செய்வோர் தொகை குறைவு.

அது மட்டுமன்று அந்தப் பக்குவமும் தகுதியும் பெறும் ஒருவர் தவிர்க்கமுடியாதபடி ஆங்கிலத்திலே மட்டும் அன்றி பிறிதொரு ஐரோப்பிய மொழியிலும் பயிற்சி பெற வேண்டிய வராயிருப்பார். அம்மொழி இலக்கியங்களைப் படித்ததின் பின் அம்மொழியில் உள்ள தனது துறைப் பனுவல்களையும் ஆராச்சிக் கட்டுரைகளையும் தெரிந்து கொள்ள அத்தகையோர் தொகை மிகமிகக் குறைவு. அவர்களை வைத்துக் கல்வியின் பொது நிலை பற்றிச் சிந்தித்தல் தகாது.

நாம் இங்கு கருதுவது இந்நாட்டிலே பிறந்து வளர்ந்து இந்நாட்டிலே கல்வி கற்பவர்களைப் பற்றித்தான். உண்மையில் ஆங்கிலம் தான் இன்று கல்வி மொழியாக இருக்க வேண்டும். ஆங்கிலம் இன்றேல் நாமில்லை என்ற கட்டத்தை நமது சமுதாயம் நெருங்கி விட்டது. இன்று விஞ்ஞானக் கல்வியானது பெருமளவில் வளர்ச்சியடைந்து மக்களின் விஞ்ஞான அறிவை மட்டுமல்ல அதன் துணைமொழி ஆங்கில அறிவையும் வளர்த்து வருகிறது.

இன்ற உலகில் எந்தமூலையில் என்ன நடந்தாலும் இருந் இடத்தில் அறியக்கூடிய அளவு தொலைத் தொடர்பு சாதனங்கள் வளர்ச்சியடைந்துள்ளன. அவற்றை இயக்குவதற்கு ஆங்கில கல்வி அவசியமாகும். எனவே ஆங்கிலத்தின் கல்வித்தரம் உயர்ந்துள்ளன. உதாரணமாக ஒரு கணனியை இயக்கவேண்டுமானாலும் அதை இயக்க ஆங்கிலம் தெரிந்தால்தான் இயக்க முடியும்.

எனவே இனிவரும் காலத்தில் ஆங்கிலமும் விஞ்ஞானமும் இன்றி மனிதன் இவ்வுலகில் இவ்வுலகில் வாழமுடியாத நிலை வந்துகொண்டிருக்கின்றது. எதிர்வரும் காலம் விஞ்ஞான ஆங்கில காலமே என்பதில் ஐயமில்லை. எனவே விஞ்ஞானத்தையும், ஆங்கிலத்தையும் திறம்படக் கற்று அதன்படி ஒழுகுதல் அவசியமாகும்.

ஆக்கம் ம. பிரதீப்
பழைய மாணவ

பரிசளிப்பு விழா - 1986-11-30



பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்

# வாசிப்பின் பெருமை

வாசிப்போம் வாரீர் வாசிப்போம் வாரீர்
வையகத்து மாந்தர்களே வாசிப்போம் வாரீர்
வாசிப்பின் பெருமைதனை வானறியச் செய்திடுவோம்
வாசித்தே அறிந்திடுவோம் வாசிப்பின் பெருமைதனை

ஐசாக் நியூட்டன், தோமஸ் அல்வா எடிசன்
பாரதியார் அப்துல்கலாம் என்பவர் போல்
வாசித்தே உயர்ந்தவர்கள் எத்தனை எத்தனைபேர்
வாசிப்பின் பெருமைதனை நாமும் பெற்றிடுவோம்

தாமாகக் கற்பதற்கு வானொலி தொலைக்காட்சி
கம்பியூட்டர் என எத்தனைதான் வந்தாலும் நீர்
வாசிக்க ஒரு நிமிடம் தவறாது எடுத்திடுவீர்
வாசித்தே வளம் பெருக்கிடுவீர்

வாசிப்பின் மாதமாம் ஒக்டோபர் தன்னில்
நாவல்கள் சிறுகதைகள் என நல்ல நல்ல
புத்தகத்தை தேடியே வாசிப்போமென
எடுத்திடுவீர் ஒரு சத்தியத்தை

**ஆக்கம்: ம. பிரதீபா**
**பழைய மாணவி.**

# பெரியோரைப் பேணல்

மாதா, பிதா, பாட்டன், பாட்டி, மாமன், மாமி, தமையன், தமக்கை, ஆசிரியர், குரு முதலாகிய பெரியோர்களை அன்போடு மதித்தல் வேண்டும். அரசன் யாது குற்றம் செய்யினும் அவனோடு சிறிதும் எதிர்க்காது அவனுக்கு அடங்கி நடத்தல் போலவே பிதா, மாதா முதலாயினோருக்கும் அடங்கி நடத்தல் வேண்டும்.

பிதா, மாதா முதலானோர் கஸ்ரப்படாவண்ணம் இயன்ற மட்டும் உணவு, உடை கொடுத்து அவர்களை எந்நாளும் பாதுகாத்தல் வேண்டும். அவர்களுக்கு நோய் ஏற்பட்டால் சிறந்த வைத்தியரைக் கொண்டு வைத்தியம் செய்வித்தல் வேண்டும். அவர்கள் கட்டளை இட்ட செயல்களைச் செய்ய வேண்டும். பிள்ளைகள் தங்கள் கல்விக்கும் நல்லொழுக்கத்திற்கும் இடையூறாகப் பிதா மாதாக்கள் சொல்லும் சொற்களை மறுத்தல் பாவமாகாது. "தந்தை தாய் பேண்" என்ற நீதி மொழியைச் சிந்திக்காது அநேகர் தங்களை மிக வருத்திப் பெற்று வளர்த்த பிதா மாதாக்கள் பசித்திருப்பத் தாமும் தம்முடைய மனைவி பிள்ளைகளும் வயிறு நிறையப் புசித்துக் கொண்டு அஞ்சாது திரிகின்றார்கள் பிதா மாதாக்களையும், சுற்றத்தாரையும் வஞ்சித்து அன்னியர்களுக்கு உதவி செய்கின்றார்கள்.

பிதா, மாதா முதலாயினோர் இறக்கும் பொழுது அவரைப் பிரியாது உடனிருத்தல் வேண்டும். அவர் மனம் கடவுளுடைய திருவடியிலே அழுந்தும்படி அறவொழுக்கமுடையவரைக் கொண்டு அருட்பாடல்களை ஓதுவிக்க வேண்டும். அவர் இறந்த பின்பும் உத்தரக் கிரியைகளைத் தம் பொருளளவுக்கு ஏற்ப விதிப்படி சிரத்தையோடு செய்து முடித்தல் வேண்டும். வருடந்தோறும் அவர் இறந்த திதியிலும் சிராத்தம் தவறாமல் செய்தல் வேண்டும்.

அநேகர் தங்கள் பிதா, மாதாக்கள் வயோதிபராக இருக்கும் பொழுது அவர்களுக்கு அன்ன வஸ்திரம் முதலியவை கொடுத்துப்பேணாது அவர்களுக்கத் துன்பத்தையே விளைவித்து அவர்கள் இறந்த பின்பு உத்தரக் கிரியைகளை உலகத்தார் மெச்சும் பொருட்டு செலவிட்டுச் செய்கின்றார்கள். ஐயையோ! இது எவ்வளவு அறியாமை. இச்செய்கையால் வரும் பயன்யாது? உத்தரக் கிரியைச் சிறிது பொருள் செலவிட்டும் செய்யலாம். அதற்குச் சிரத்தையே முக்கியம். எனவே பிதா, மாதாக்கள் வயோதிபராய் இருக்கும் பொழுது அவர்களை முட்டுப்படா வண்ணம் அன்னம் கொடுத்து பாதுகாப்பது முக்கியம்.

பிதா, மாதா முதலாயினோரை நித்தித்தவர்களும் அவர்களைப் பேணாதுதள்ளி விட்டவர்களும் பெருவியாதியினால் வருந்துவார்கள். பிதா மாதாக்களுக்குச் சிராத்தஞ் செய்யாதவர்களும் வருந்துவார்கள் புலவர்களாயினும், ஞானிகளாயினும், மூடர்களாயினும், பெண்களாயினும், பிரமச்சாரிகளாயினும் இறந்ததினச் சிராத்தத்தைச் செய்யாதொழிந்தால் அவர்கள் பாவிகளாவார்கள்

எவன் தன்னுடைய தாய், தந்தை முதலிய பந்துகள் வறுமையினால் வருந்தும் பொழுது இம்மையிலே புகழின் பொருட்டு அன்னியர்களுக்குத் தானம் கொடுக்கிறானோ அந்தத் தானம் தருமமன்று பார்க்கும் போது புகழ் போலத் தோன்றினாலும் பின்பு நரகத்துன்பமே கிடைக்கும். எனவே நாம் எமக்குக் கிடைத்த வாழ்வுக் காலத்தில் பெரியோரைப் பேணி நடப்போமாக.

திருமதி. சு. சிவானந்தமூர்த்தி
ஆசிரியர்

# இலங்கையின் இசைவளர்ச்சி

இலங்கைத் தமிழ் மக்களின் இசையை உயர்பாரம்பரிய இசை, உபபாரம்பரிய இசை என இரண்டாக வகுக்கலாம். பெருங்கோவில்களையும் வசதி படைத்தோரையும் சார்ந்து உயர்பாரம்பரிய இசை வளர்ச்சியுற்றது. சிறுகோவில்களையும் கிராமமக்களையும் சார்ந்து கோவில்கள் சார்ந்த இசை தவிர வாழ்க்கைநிகழ்ச்சிகள் தொழில்கள் சம்பந்தமான இசை வடிவங்களும் இங்குண்டு. இவ்விசை மரபுகள் அனைத்தும் இணைந்ததே இலங்கைத் தமிழ் மக்களின் இசைப்பாரம் பரியமாகும்.

இராவணன் காலத்திலிருந்தே இலங்கையின் இசைமரபு இருந்ததென்பதற்கு இலக்கிய ஆதாரங்கள் உண்டு. மகாவம்சம் போன்ற புராதன நூல்களும் அக்காலத்தில் இலங்கையில் கையாளப்பட்ட நாகசின்னம் போன்ற இசைக்கருவிகள் பற்றிக் கூறப்படுகின்றது.

இந்தியாவில் காலத்திற்கு காலம் இசைவளர்ச்சியில் ஏற்பட்ட மாற்றங்கள் வளர்ச்சி என்பன இலங்கையிலும் பிரதிபலித்தது எனலாம். இலங்கை சோழராட்சியின் கீழ் இருந்த பொழுது ஆலயங்களில் திருமுறைகள் ஓதும் பாரம்பரியம் ஆரம்பமாகியது. பக்தி மேலீட்டால் மக்கள் ஆனந்தக் கூத்தாடியதைத் தொடர்ந்து கூத்து ஆரம்பமானது.

ஒல்லாந்தர், போர்த்துக்கேயர் காலத்தில் அவர்கள் மதத்தைப் பரப்புவதற்கு ஓசைநயம் மிக்க நாடகப் பாடல்களை தெரிவு செய்தனர். நாடகப்பாடல்களில் கீர்த்தனைகளும் இடம்பெற்றன. சைவசமயத்தைப் பாதுகாக்கவும் பள்ளு போன்ற பிரபந்தங்களும் கீர்த்தனைகளும் இயற்றப்பட்டன.

18ம் நூற்றாண்டில் வாணிபத்தின் பொருட்டு இங்கு வந்த செட்டி வேளாளரால் யாழ்ப்பாணத்தில் பெருங்கோயில்கள் கட்டப்பட்டன. இக்கோயில்களில் மங்களவாத்தியம் இசைக்க இசை வேளாளர் இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்டுக் குடியமர்த்தப்பட்டனர். இவர்களே இன்றைய உயர்பாரம்பரிய இசைக்கு முன்னோடிகளாவர்.

19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மட்டக்களப்பு நகரில் தோன்றிய விபுலானந்த அடிகள் 20ம் நூற்றாண்டில் யாத்தயாழ்நூல் இலங்கையின் இசைவளர்ச்சியில் முக்கிய இடத்தை வகிக்கின்றது. 14 ஆண்டுகள் செய்த இசை ஆராய்ச்சின் பயனாக பாயிரவியல், யாழுறுப்பியல், இசை நரம்பியல் பாலைத்திரிபியல், பண்ணியல், தேவாரவியல், ஒலியியல் என ஏழு இயல்களின் கீழ் கோவைப்படுத்தி யாழ்நூலை இயற்றினார். தமிழில் சிலப்பதிகாரம் வகித்த இடத்தை இசையில் யாழ்நூல் வகிக்கின்றது. இந்தியத் தமிழ்உலகம் வியக்க யாழிசை ஆராட்சி செய்த விபுலானந்தரின் இசைத்தொண்டு இலங்கைக்கு பெருமைதேடித் தந்துள்ளது.

கர்நாடக சங்கீதத்தின் உயிர்த்துடிப்பு நாதஸ்வரத்திலேயே தங்கியுள்ளது. இலங்கையில் நாதஸ்வரம் தவில் இரண்டும் உன்னத நிலையில் உள்ளன. தவில் இலங்கைத் தமிழருக்குரிய வாத்தியமாக தென்னிந்திய மக்களால் கணிப்பிடப்படுகின்றது. இலங்கையின் தவில்மேதை தட்சணாமூர்த்தியின் பங்களிப்பினை நாம் இவ்விடத்தில் அறிந்து கொள்வது பொருத்தமாகும். இவரது அடியொற்றி இன்னும் பல தவில் நாதஸ்வரக் கலைஞர்கள் ஈழத்தில் புகழுடன் விளங்குகின்றனர்.

வடஇலங்கையில் இசைக்கலை வளர்ச்சியைப் பேணும் நோக்குடன் 1931ம் ஆண்டு வடஇலங்கை சங்கீதசபை தோற்றுவிக்கப்பட்டு இசைவளர்ச்சியில் ஒரு திருப்பம் ஏற்படுத்தப்பட்டது. இசை வகுப்புக்களை ஊக்குவித்தும், இசைப்பரீட்சைகள் வைத்தும் இசை விழாக்கள் நிகழ்த்தியும் மக்களிடையே இசையில் விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

1960ஆம் ஆண்டளவில் இசை பாடசாலைகளில் பாடவிதானத்திற் சேர்த்துக் கொள்ளப்பட்டது. 1972ஆம் ஆண்டில் கட்டாய பாடமாக அழகியற்கல்வியில் கர்நாடக சங்கீதமும் சேர்க்கப்பட்டது. பாடசாலைக்கல்வி மூலம் பெரிய இசைவிற்பன்னரை உருவாக்க முடியாவிட்டாலும் அடிப்படைக் கல்வியைக் கொடுப்பதுடன் பெருமளவு ரசிகர்களையும் ஆக்கமுடிந்தது. க.பொ.த.(உ.த) வகுப்பிலும் சங்கீதம் ஒரு பாடமாகச் சேர்க்கப்பட்டு பின்பு பல்கலைக்கழகம் வரை சென்று இசை கற்க தற்காலத்தில் வாய்ப்புண்டு.

20ம் நூற்றாண்டில் நடுப்பகுதியில் சுன்னாகம் இராமநாதன் கல்லூரியின் ஒரு பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட இராமநாதன் அக்கடமியின் இந்தியஇசை விற்பன்னர்களினால் இசை போதிக்கப்பட்டு "சங்கீத ரத்தினம்" என்ற பட்டமும் வழங்கப்பட்டது. 1974ம் ஆண்டு இந்நிறுவனத்தை பல்கலைக்கழகத்துடன் இணைத்து "இசைக்கலைமானி" (சங்கீத டிப்ளோமா) என்ற பட்டத்தை வழங்கினர். 1998ம் ஆண்டிலிருந்து "இசைமாணி" (B.Music) பட்டம் வழங்கப்பட்டு வருகிறது.

இசை வளர்ச்சியில் இசைமன்றங்களின் செயற்பாடு குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் யாழ் ரசிக ரஞ்சனா சபை, அண்ணாமலை இசைத்தமிழ் மன்றம், பாரதிகானசபா, இளங்கலைஞர்மன்றம், அளவெட்டி இசைக்கலாமன்றம், தென்மராட்சி இசை நடனக்கலைமன்றம், திருமறைக்கலாமன்றம், கொழும்பு சங்கீத சபை, கண்டி நுண்கலைமன்றம் என்பவை இலங்கையில் கர்நாடக இசைவளர்ச்சிக்கு பெரிதும் துணைபுரிவன.

தற்காலத்தில் இலங்கை இசைக்கலைஞர்களான திரு. A. K. கருணாகரன், திருமதி தனதேவி, மித்திரதேவா, திரு.பொ.சுந்தரலிங்கம், திரு. S. பத்மலிங்கம், திருமதி சரஸ்வதி பாக்கிராஜா, திரு.சு. ராதகிருஸ்ணன் போன்ற இன்னும் பலர் வெளிநாடுகளில் பலஇசைக்கச்சேரிகளை நிகழ்த்தி இலங்கைக்கு பெருமை தேடித்தந்துள்ளனர்.

மெல்லிசையும் துள்ளிசையும் இலங்கையில் நன்கு வளர்ச்சி பெற்றுள்ளது. அரச வானொலியும், சூரியன் சக்தி வானொலிகளும் மெல்லிசைப் பாடல்களை பெரிதும் ஒலிபரப்புகின்றன. கர்நாடக இசைக் கச்சேரிகளும் இடம்பெறுகின்றன.

இசை மன்றங்களும், சபாக்களும் வடஇலங்கை சங்கீத சபையும் இசைப்பரீட்சைகளையும் இசைப்போட்டிகளையும் இசைவிழாக்களையும் நடத்தி வருகின்றன. யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப்பீடத்தில் ஆண்டுதோறும் பட்டப்படிப்பினை மேற்கொள்வோர் தொகை அதிகரித்தவண்ணமுள்ளது.

சுருங்கக் கூறின் இலங்கையைப் பொறுத்தவரையில் இசைக்கலையின் பொற்காலமாகத் திகழ்கிறது எனலாம். இலங்கைக் கலைஞர்கள் பலர் இன்று உலகநாடுகள் பலவற்றிற்கும் சென்று இசைக்கச்சேரிகள் செய்கின்றனர். இதன் மூலம் இலங்கையின் இசைவளம் உலகெலாம் பேசப்படும் உன்னத நிலை உருவாகியுள்ளது.

**திருமதி. H. கணேசலிங்கம்**
**ஆசிரியர்**

## முதியோர் தினம்

முத்தோர் தம்மை போற்றிடுவோம் - அவர்
முதுபெருங் கலைகளைப் பேணிடுவோம்
அன்பே அவர்கள் பிறப்பிடமாம்
அறிவுரை தருவது அவர் கடனாம்

நன்றே வாழ உதவிடுவார்
நற்பணி பலவும் புரிந்திடுவார்
இன்றே அவர்தம் பாதம் போற்றி
இங்கிதமாக வாழ்ந்திடுவீர்

ஒழுக்கம் பேணல் அவர் உறுதி
ஒற்றுமை என்றும் அவர் காப்பு
விழுப்பம் பெறவே நீவீர்தான்
விரும்பிக் காப்பீர் ஒழுக்கத்தை

என்றும் அவர்எம் சுமையல்ல
எதிலும் வெற்றி நாம் பெறவே
அல்லும் பகலும் எங்களுக்காய்
அயராதுழைத்து காத்திடுவார்

சிறுவர் என்றோ முதியவராய்
சிறத்தல் உலக நியதியன்றோ
மூத்தோர் தம்மை பரிகசித்தல்
முற்றுமுழுதாய் மடமையன்றோ

காவோலை விழ குருத்தோலை சிரித்திடல்
காசினி யெங்கும் நியதியன்றோ
குருத்தோலை ஓர்நாள் காவோலையாவது
குவலயம் அறிந்த உண்மையன்றோ

பிள்ளை தம்மை பெற்றெடுத்தே - தினம்
பத்தியம் பலவும் அவர் காத்தே
நோன்புகள் பற்பல அவர் நோற்றே
நெந்திடுவார் பிள்ளை பாசத்தில்

வைத்திய அறிவு நூலறிவு விஞ்ஞானமும் கலைஞம்
பைத்தியம் வந்திடாது அவர் காத்து
பார் முழுதும் சிறந்திட அவர் உழைத்தார்
பாலர் எமக்கு புகட்டிட்டார்

எத்தனை பெரியது அவர் சேவை
எத்தனை விதத்தில் நல்கியதை
இத்தனை இழிவாய் அவர் நிலையை
இகழ்ந்து தள்ளுதல் முறையன்று

வெளிநாட்டு சுகபோக வாழ்வுக்காய்
வெளியேறத் துடிக்கும் அவர் மக்காள்
முதியோர் இல்லங்களில் சேர்த்து
முறை கேடாய் நடத்தல் முறையன்றோ


என்றும் அவர் எம் சுமையல்ல
எப்போதும் அவர் தம் துணைவேண்டும்
நன்றே செய்வார் ஆதலினால்
நல்வாழ்வுண்டு அவனியினிலே

முதியோர் தம்மை பேணி நிதம்
முன்னேற்றம் காண்போம் வாழ்வினிலே

**யோ. தீபா**
**தரம் – 09**



2001 ஆசிரியர் தினம்



இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் 2005

# - நீர்வீழ்ச்சி -

இயற்கை அன்னை உலகமக்களாகிய எமக்குப் பல சௌந்தரியங்களை அள்ளி வழங்கியுள்ளாள். மனிதன் மற்றும் ஏனைய உயிரினங்கள் நதி, நீரோடை, குளம், சமுத்திரம், காடுகள், நீர்வீழ்ச்சிகள் என்பன அவற்றில் முக்கியமானவை. இயற்கை விஞ்ஞானத்தில் மேலான இடத்தைப் பெற்ற நீர் வீழ்ச்சியானது இலங்கையின் இயற்கை அழகுக்கு மெருகூட்டுவதில் முன்னனி இடத்தை வகிக்கின்றது. இலங்கையின் பரப்பளவுடன் ஒப்பிடும் போது இந்நாட்டில் பரந்து பட்டுக் காணப்படுகின்ற நீர் வீழ்ச்சிகளின் தொகை மிக அதிகமாகும். இலங்கையில் 382 நீர் வீழ்ச்சிகள் கண்டுபிடிக்கப்பட்டன. இன்னும் மனிதனின் கண்களுக்குப் புலப்படாத காடுகளினுள் மேலும் பல நீர்வீழ்சி காணப்படலாம் என நம்பப்படுகின்றது.

நீர் வீழ்ச்சியின் பின்னால் மறைந்துள்ள அழகிய வனப்புகளை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. காடுகளால் சூழப்பட்ட மலைச் சரிவுகளில் பாய்ந்து ஓடி விழும் நீர் வீழ்ச்சிகளின் அபூர்வக் காட்சியையும் இயற்கை அழகினையும் மனிதனை விட அச்சூழலில் வாழும் மிருகங்களும் பறவைகளுமே அதிகம் இரசிக்கின்றன. நீர் வீழ்ச்சிகள் எமக்கு மனமகிழ்ச்சியையும் அழகை இரசிக்கும் மனப்பாங்கையும் அளிக்கின்றன. அது மத்திரமல்லாது இதனை இயற்கை வளமாகவும் பொருளாதார வளமாகவும் நாம் இனங் காணலாம். நீர் வீழ்ச்சியை அடிப்படையாக வைத்து வரலாற்றுப் புகழ் நிறைந்த சம்பவங்களும் வாழ்மொழிக் கதைகளும் நிறையவே உள்ளன.

## நீர்வீழ்ச்சி உருவாகுதல்

பீடபூமி அல்லது உயர்ந்த மலைப் பிரதேசத்தின் விளிம்பில் இருந்து கீழே பள்ளத்தை நோக்கி விழும் நீர்த்தாரையே நீர் வீழ்ச்சி என்ற பெயரில் அழைக்கப்படுகின்றது.

பொங்கி வரும் ஆறு பாரிய குவிவான சரிவைக் கடக்கும் பொழுது அதிவேகமாகக் கீழே பாயும். அதாவது ஆற்றின் போக்குக்கேற்பவே நீர் வீழ்ச்சி உருவாகிறது எனலாம். நதியின் அடிப்பாகம் (கீழ்ப்பரப்பு) மிகுந்த இறுக்கமான அதாவது உறுதியான பாறைகளால் உருவாக்கப்பட்டிருப்பது நீர் வீழ்ச்சி பிரவாகிப்பதற்கு மிக அத்தியவசியமானதாகும். எப்பொழுதும் நீர் வீழ்ச்சியானது உறுதியான பாறைத் தொடரின் மீதிருந்தே பாயும். அப்படி இல்லாவிட்டால் ஆற்றின் அடிப்பாகம் அரிப்புள்ளாகி நீர் வீழ்ச்சி பின்னோக்கி தள்ளப்படும். இந்நிலை நீடித்தால் காலப்போக்கில் நீர் வீழ்ச்சி முற்றாக வற்றிப்போகும் சாத்தியம் உண்டு.

உயரமான ஓரிடத்திலிருந்து கீழே பாயும் நீர் வீழ்ச்சி விலாசமானது என்றால் "அகல வீழ்ச்சி" என்ற பெயரிலும் குறுக்கியதென்றால் "ஒடுங்கிய வீழ்ச்சி" என்ற பெயரிலும் அழைப்பர். சரிவின் விலாசம் அதிகரிக்கும் பொழுது நீர் வீழ்ச்சியின் வேகம் அதிகரிக்கும். நீரேந்து பிரதேசத்தில் (ஆறு ஆரம்பிக்கும் இடம்) மழை பெய்தால் நீர் வீழ்ச்சி அதிக நீரால் நிரம்பி வழியும்.

நீர் வீழ்ச்சிகள் அதிகமாக வியாபித்திருக்கும் இலங்கையின் மத்திய மலைநாட்டுக்கு உட்பட ஈரவலயப் பிரதேசத்திலாகும். அதனால் நீர் வீழ்ச்சி அமைந்திருப்பது வெப்பவலயத்திற்குட்பட்ட (உலர் வலயம்) மலைக் காடுகளுடன் கூடிய பிரதேசத்திலாகும். இப்பிரதேசம் மிகச் செழிப்பான பல்வேறு தாவரங்களைக் கொண்டது. அதனால் நீர் வீழ்ச்சிகளுடன் காட்சியளிக்கின்றன.

எங்கள் நாட்டில் 382 நீர் வீழ்ச்சிகள் இதுவரை கண்டு பிடிக்கப்பட்டுள்ளன என்பது எதிர்காலத்தில் இத்தொகை அதிகரிக்க வாய்ப்புண்டு.

### பம்பர கந்த நீர் வீழ்ச்சி

இந் நீர்வீழ்ச்சி "பம்பரக்கலை நீர்வீழ்ச்சி" என்றும் அழைக்கப்படும். 863 அடி உயரமான இந்நீர்வீழ்ச்சி இலங்கையிலேயே மிக உயரமான நீர்வீழ்ச்சியாகும். பம்பர கந்த நீர்வீழ்ச்சியானது 1470m உயரமான நீர்வீழ்ச்சியாகும். பம்பரகலை மற்றும் 1375m உயரமான வெலிஹேனை ஆகிய மலைகளுக்கிடையில் உருவாகியது. ஒரு பேசினைப் போன்று தோற்றமுடைய இந்நீர்வீழ்ச்சியானது அடர்ந்த காடுகளால் சூழப்பட்டுள்ளதொரு உயர்ந்த பாறைகளுக்கிடையில் ஓடிப் பாய்ந்து விழுகின்றது பலாங்கொடையில் இருந்து களுபஹன நகரம் மற்றும் வீரக்கோனகம ஆகிய இடங்களைக் கடந்து இவ்விடத்தை அடைய முடியும்.

### தியலும நீர் வீழ்ச்சி

722 அடி உயரமான இந்நீர்வீழ்ச்சியானது இலங்கையின் இரண்டாவது உயரமான நீர் வீழ்ச்சியாகும். பூனாகல ஓய ஆற்றில் உருவாக்கம் பெறும் தியலும நீர் வீழ்ச்சியின் நீர் குடாஓய வழியாகக் கிரிந்தி கங்கையுடன் கலக்கின்றது. பின்னர் திஸ்ஸமகாராமவிற்கருகில் அந்நீர் கடலில் சங்கமமாகின்றது. பலாங்கொட வெள்ளவாய பிரதான பாதைக்கு அருகில் இந்நீர்வீழ்ச்சியைக் காணலாம். தியலும நீர் வீழ்ச்சி உருவாகியமை பற்றி பல்வேறு வாய்மொழிக் கதைகள் கூறப்படுகின்றன. இன்றும் கிராமவாசிகளால் கூறப்படும் அத்தகைய வாய்மொழிக் கதைகளில் ஒன்றை நோக்குவோம்.

கோத்திரத் தலைவனொருவன் கீழ்ச்சாதிப் (சாதியில் குறைந்த) பெண்ணொருத்தியை மணப்பதற்குத் தீர்மானித்தான். அதனால் அதனை எதிர்த்த குழுவினரால் அவன் நாட்டிலிருந்து விரட்டி அடிக்கப்பட்டான். கோத்திரத் தலைவன் அப்பெண்ணுடன் மலையகப் பகுதியை நோக்கிச் செல்லும் பொழுது இந்நீர்வீழ்ச்சி உருவாகியுள்ள பாறையின் மேல் ஏற ஒரு பாரிய கொடியைப் பற்றிப் பிடித்தான். எனினும் அக்கொடி கற்களின் நடுவே குறுகியதால் அந்தப் பெண் அதில் சிக்கி இறந்து போய்விட்டார். இந்தச் சம்பவத்தைப் பார்த்த இறைவன் தியலும நீர்வீழ்ச்சியை உருவாக்கினார். என்பதே என்பதே அக்கிராமவாசிகளின் நம்பிக்கை ஆகும்.

### மாபனான நீர்வீழ்ச்சி

மாபனான் நீர்வீழ்ச்சி மாபனானத் தேயிலைத் தோட்டத்தின் மத்தியில் அமைந்து உள்ளது. சமனலகட காட்டின் தெற்கே 1868m உயர சமனல மலைச்சரிவில் ஆரம்பம் ஆகும். எளிஓய எனும் கிளை ஆறு மாபனான நீர்வீழ்ச்சியை உருவாக்குகின்றது. பின்னர் அந்த நீர் களுகங்கையில்

ஒன்றிணைக்கின்றது. இரத்தின புரியில் இருந்து கிலிமலை வீதியில் 16km செல்லும் போது வரும் ஸ்ரீ பலாபத்வலை எனும் ஊரினைக் கடந்து மேலும் 4km தூரம் சென்றால் இந்த நீர்வீழ்ச்சியைக் காணலாம். இந்தக் காட்டில் கடவுளின் அருள் நிறைந்துள்ளது எனக் கிராமவாசிகள் நம்புகின்றார்கள். இது அதிசயம் நிறைந்த பிரதேசம் எனவும் யாராவது தவறு செய்தால் அதற்கு உரிய தண்டனை நீர்வீழ்ச்சிக்கருகிலே கிடைக்குமென மற்றொரு நம்பிக்கையும் நிலவுகின்றது.

### லக்ஷபான நீர்வீழ்ச்சி

423 அடி உயரமான லக்ஷபான நீர் வீழ்ச்சியானது சிவனொலி பாதமலையில் ஆரம்பமாகும் மஸ்கெலி ஓயாவில் இருந்து பாய்கின்றது. மீன்களின் துள்ளல் விளையாட்டுக் காரணமாக இதற்குக் மஸ்கெலி ஓயா எனும் பெயர் வந்ததாக வாய்மொழிக் கதைகள் கூறுகின்றன. நோட்டன் பிறிட்ஜ் நகரிலிருந்து 2km தூரத்தில் கொத்தலானை என்று பெயர்களால் அழைக்கப்படும் ஊரில் இது அமைந்துள்ளது. இங்கிருந்து நீர் லக்ஷபான நீர் மின் உற்பத்தி நிலையத்திற்கு விநியோகிக்கப்படுகின்றது. இது சம்பந்தமாகவும் பல வாழ்மொழிக் கதைகள் நிலவுகின்றன. இதன்படி இப்பகுதிக்கு வேட்டைக்குச் சென்ற வேடுவத் தலைவரொருவராலேயே இந்த நீர்வீழ்ச்சி முதன்முதலாக கண்டுபிடிக்கப்பட்டது எனவும், அதனால் இதற்கு வேடனின் நீர்வீழ்ச்சி எனும் கருத்தைத் தொனிக்கும் வெத்தாகே எல்ல என்ற பெயரும் காணப்படுவதாக அவ்வாய்மொழிக் கதைகள் கூறுகின்றன. மற்றொரு வாய்மொழிக் கதையின் படி சீதாவாக்கையை ஆண்ட முதலாம் இராஜசிங்கன் களனி கங்கை வழியாக இந்த நீர்வீழ்ச்சியைக் கண்டுகளிக்க வந்து நீர் வீழ்ச்சிக்கருகில் இளைப்பாறியதாகவும் இதனால் வெடசிட்டி / வெடிசிட்டி (பெரியோர்களின்) நீர்வீழ்ச்சி என்றும் அழைக்கப் படுவதாகவும் கூறப்படுகின்றது.

### ஓலு நீர்வீழ்ச்சி

ஓலு நீர்வீழ்ச்சி இலங்கையின் நான்காவது உயரமான நீர்வீழ்ச்சி ஆகும். இது போபத்தாலவ மலைத் தொடரில் உருவாகின்றது. பின் நீர்வீழ்ச்சியின் நீர் வே ஓயா ஊடாகக் களனி கங்கையில் இணைகின்றது. இதன் உயரம் 656 அடியாகும். எட்டியாந்தோட்டையில் இருந்து மவல்பொல வரை சென்று புனுகலை வழியாக மனாவலைக்குச் சென்றால் ஓலுநீர் வீழ்ச்சியைக் காணலாம்.


| நீர்வீழ்ச்சிகள் | அமைந்துள்ள இடம் | உயரம் அடி |
|---|---|---|
| 01. பம்பர கந்த | பெலிஹில் ஓய | 867 |
| 02. தியலும | கொஸ்லந்தை | 722 |
| 03. குருந்து ஓய | நுவரெலியா | 676 |
| 04. ஓலு | அமனாலை | 656 |
| 05. மாப்பனான | இரத்தினபுரி | 486 |
| 06. லக்ஷபான | நோர்ட்டன் பிரிட்ஜ் | 423 |
| 07. மகந்துர | ஹங்குரன் கெத்த | 383 |

| | | |
|---|---|---|
| 08. கிரிந்தி | இரத்தினபுரி | 382 |
| 09. இரம்பொடை | புசல்லாவை | 358 |
| 10. நவரத்தின | ஹசலக்க | 358 |
| 11. பூண்டுலோயா | புஸ்லாவை | 328 |
| 12. அபர்தீன் | நோர்ட்டன் பிரிட்ஜ் | 322 |
| 13. டெவன் | தலைவாக்கலை | 318 |
| 14. சென்ட்கிளயார் | தலைவாக்கலை | 263 |
| 15. துன்கிந்த | பதுளை | 207 |
| 16. ஹுந்தபான | இறக்குவானை | 200 |
| 17. கீதாகொட்டுவ | குருளுபொத | 200 |
| 18. யக்காஎண்டு எல்ல | மஸ்கெலியா | 200 |
| 19. நானுஓய | நானுஓய | 197 |
| 20. அலகொல | உடபுகல்லாவை | 197 |
| 21. ஹீன்னஸ் | கண்டி | 197 |
| 22. மன்னகெத்தி | கித்துல்கலை | 197 |
| 23. அலுபொல | இரத்தினபுரி | 197 |
| 24. பெரவத்தை | இரத்தினபுரி | 164 |
| 25. பேருவெல்ல | எல்ல | 164 |

மாணவி
ச. கஜேந்தினி




தரம் 9 மாணவன் ந. கிருஸ்ணராஜ் பாடசாலைக்கு
பேச்சு மேடை ஒன்றை அன்பளிப்புச் செய்தபோது - 2005



அமரர் அருளம்பலம் அருளானந்தஸ்ரீ ஞாபகார்த்த
நூலகம் மாணவர்களின் பயன்பாட்டின்போது - 2005

# தமிழின் சிறப்பு

பண்டைய காலத்தில் மனிதன் மொழி தெரியாது தத்தளித்தான். அவன் சமிக்ஞைகள், சைகைகள் மூலம் தமது பிரச்சனைகளுக்கு தீர்வு காணத் தொடங்கினான். இச்சைகைகள், சமிக்ஞைகளே காலப் போக்கில் சொற்களாக்கி பல்வேறு மொழிகள் பிறப்பதற்கு வழி வகுத்தன. இம் மொழிகளுக்கேற்ப நாகரீகங்களும் உருவாகின. நாகரீக மேம்பாட்டின் அடிப்படை மொழிப் பயன்பாடு என்பது யாவரும் அறிந்த உண்மையாகும். ஒரு இனத்தின் முன்னேற்றத்திற்கும் அதன் தனித்துவத்திற்கும் மொழியே காரணமாக அமைவது போன்று திராவிட இனத்தின் முன்னேற்றத்திற்கும் தமிழ் மொழி ஊன்று கோலாக விளங்கியது.

அந்த வகையில் உலகில் பல மொழிகள் தோன்றி வழங்கி மறைந்தொழிந்தன. ஒரு சில மொழிகள் மட்டும் இன்னும் அழியாமல் நிலை பெற்றுள்ளன. அவ்வாறு நிலைத்துள்ள மொழிகளிலும் சில பேச்சு வழக்கிழந்து இலக்கிய மொழியாக மட்டும் உள்ளன. இவ்வாறு தோன்றி வளர்ந்து மாயும் மொழிகளுக்கிடையே மிகப் பழங்காலத்திலேயே தோன்றி, செல்வாக்குடன் வளர்ந்து இன்றளவும் வாழ்ந்து விளங்கும் மொழிகளுள் தமிழும் ஒன்று.

பழமைக்கும் பழமையாய் இலக்கிய வளம் உடையதாய் நிற்பதோடு புதுமைக்கும் புதுமையாய்க் கருத்துச் செல்வம் நிறைந்ததாய் என்றும் இளமைப் பொலிவுடன் விளங்குவது தமிழ் மொழியாகும். இதனை கி.மு. 3000ம் ஆண்டுகளுக்கு முற்பட்ட மொஹஞ்சதாரோ, ஹரப்பா நகர அகழ்வாராச்சியின் போது கண்டெடுக்கப்பட்ட பானைகளிலும், முத்திரைகளிலும் காணப்படும் சித்திரவடிவ எழுத்துக்களைக் கூட ஸ்பெயின் நாட்டவரான பிதா எச் ஹீராஸ் என்பவர் பழந்திராவிடமே(தமிழ்) எனவும் இஸ்கண்டினேவிய ஆசியக் கல்விக் கழகத்தினால் கணனி மூலம் நடாத்தப்பட்ட ஆய்வின் மூலமும் அது தமிழ்மொழி எனக் கூறப்படுவதாலும் தமிழ் மொழியின் பழமை துலங்குகிறது.

தமிழ் மொழியில் 247 எழுத்துக்கள் உண்டு. இவற்றில் 12 உயிர் எழுத்துக்களும் 18 மெய் எழுத்துக்களும் தமிழ் மொழியின் முதல் எழுத்துக்கள் என்பர். அவை ஒரு மனிதனின் உடல் இயக்கத்திற்கு உயிரும் உடலும் எத்துணை அவசியமோ அவ்வாறு இருந்து மொழியை இயக்குகின்றன. இங்கு கூறப்பட்ட "தமிழ்" என்ற சொல் அழகு என்ற பொருளைத் தருவதால் அது சைவமக்களால் போற்றப்படும் அழகுத் தெய்வமான முருகனைக் குறிப்பதாயும் அவனது பன்னிரு கரங்களும் தமிழ் மொழியின் 12 உயிர்களையும் குறிப்பதாகவும் அமைவதனாலும் நாம் தமிழ் மொழியின் சிறப்பை உணர முடிகின்றது.

மேலும் ஒருமொழிச் சிறப்பினை அம்மொழியின் இசைக் கோலங்களிலிருந்தே அறியலாம். அந்த வகையில் தமிழ் மொழி போல் இனிமையையும், மென்மையையும் வேறெவ் மொழிகளிலும் காணமுடியாது. மேலைத்தேய மொழிகளில் இல்லாத ஓர் அமைதியான அற்புதமான நிறைவை தமிழ்ச் செய்யுட்களால் அறியலாம். தமிழ் மொழியின் எழுத்துக்களில் 'ழ', 'ள', 'ல' ஆகிய வேறுபாடுகள் இசையொலியில் இனிமை பரப்புவன. இவற்றின் காரணமாகவே அன்று பாரதிதாசனும்

"தமிழுக்கு அமிழ்தென்று பேர் - இன்பத்தமிழ்
எங்கள் உயிருக்கு நேர்.

என இசை முழங்கினார். பண்டு மொழிகளான ஆரியம் தமிழ் ஆகியவற்றிலிருந்து வேறு பல மொழிகள் பிறந்துள்ளன. இதனால் இவை தாய்மைச் சிறப்புடை மொழிகளான

"கன்னடமும் களி தெலுங்கும் கவின் மலையாளமும் துளுவும் தமிழின் பிள்ளைகளாய் தோன்றின" என்ற கூற்றின் மூலம் தமிழ்மொழி பல குழந்தைகளுடன் இன்றும் கொஞ்சிக் குலாவி வருவதைக் காண முடிகிறது.

தமிழ் மொழியில் ஓசைக்கும், ஒலிக்குமிடையே நுணுக்கமான வேறுபாடு உண்டு. தமிழுக்கு மட்டுமே உரியதாய் சிறப்பொலிகளும், சிறப்பெழுத்துக்களும் காணப்படுகின்றன. இதனால் தான் சந்தம் மிகுந்த பல ஒலியோவியங்கள் செந்தமிழில் காணப்படுகின்றன. இதனைக் கம்பராமாயண காட்சிகளிலும் திருப்புகழிலும் உணரலாம். இதனாலேயே மகாகவி சுப்பிரமணியப் பாரதியாரும்

"யாமறிந்த மொழிகளுள்ளே தமிழ் மொழி போல்
இனிதாவது எங்கும் காணோம்"

என்று குறிப்பிட்டுள்ளார். தோற்றம் பொலிவிலும் தமிழ் மொழி மிகச் சிறப்புடையதாக விளங்குகிறது. இதனை

சில மொழிகள் சற்றே மிகையாய் நாண
ஆங்கிலம் நாணமற்ற நங்கையர் போலிருக்க
தமிழ் தானே அளவோடு நாணும்"

என்ற ஓர் கவிஞனது கூற்றினால் அறிய முடிகிறது. தமிழ் மொழியில் எண்ணற்ற காப்பியங்கள் எழுந்துள்ளன. அவற்றுள்ளும் ஐம்பெரும் காப்பியங்கள் தமிழை மேலும் அழகுபடுத்துவனவாயுள்ளன. அதற்கு மேலும் பொய்யாமொழித் தேவரால் ஆக்கப்பட்ட திருக்குறளானது பல்மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டமையும் பாரதியாரின் பழகுதமிழ்க் கவிதைகளும் தமிழின் பெருமை தன்னைப் பறைசாற்றி நிற்கின்றன. இவற்றைவிட இவ் இலக்கியங்களுக்கெல்லாம் வரம்பாக நிற்கும் இலக்கண நூல்களான தொல்காப்பியம், நிகண்டு என்பன பொருள் பொதிந்த பொக்கிசங்களாகத் திகழ்கின்றன.

"கல்தோன்றி மண் தோன்றாக் காலத்திற்கு முன் தோன்றிய மூத்தமொழி தமிழ். குமரி முதல் இமயம் வரை தவழ்ந்தது முத்தமிழ் தன்னிகரற்ற காவியங்கள் பலவற்றை அணிகலனாக பூண்ட தண்டமிழ்". எனவே இத்தனை சிறப்புடைய தமிழ் மொழியை மேலைத்தேய மோகத்தில் அமிழவிடாது முச்சங்கம் வைத்து முத்தமிழ் வளர்த்த சங்ககால மன்னர்கள் போன்று நாமும் கட்டிக் காக்க வேண்டியது எமது தலையாய கடமையாகும்.

ஆசிரியர்
செல்வி. ச. சீவரஞ்னேஸ்வரி

# விஞ்ஞான விளக்கங்கள்

1.அரிசி மூடை ஒன்றை தலைமீது சுமந்து செல்வதை விட முதுகில் சுமந்து செல்வது இலகுவானதாகும்.

அரிசி மூடையை தலையில் வைத்து சுமக்கும் போது தலையின் பரப்பளவு குறைவாக இருப்பதனால் அமுக்கம் அதிகரிக்கப்படும். ஆனால் முதுகில் அரிசி மூடையை வைத்து சுமக்கும் போது பரப்பு அதிகரிப்பதனால் அமுக்கம் குறைக்கப்படுகின்றது. எனவே தலையில் சுமப்பதை விட முதுகில் சுமப்பது இலகுவானதாகும்.

2. தோடம்பழச்சாற்று பானம் தயாரிக்கப்படுகையில் சீனி சேர்க்க முன்னர் குவளையின் அடியில் காணப்படும் சில தோடம்பழவித்துக்கள் சீனி கலக்கப்பட்ட பின்னர் மிதக்கின்றன.

சீனியை கரைக்கும் போது கரைசலின் அடர்த்தி அதிகரிக்கப்படும் பொருட்கள் அமிழ்தல் அல்லது மித்ததில் அவற்றின் அடர்த்தியில் தங்கியுள்ளது. எனவே அடர்த்தி அதிகரிக்க தோடம்பழ வித்துக்கள் மிதக்கின்றன.

3. பகல் வேளைகளில் கிணற்றில் பாசி மிதக்கின்றது.

கிணற்றில் உள்ள பாசி ஒளித்தொகுப்பின் போது வெளியிடும் ஒட்சிசன் அதில் ஒட்டியிருக்கும் இதனால் பாசி மிதக்கின்றது.

4. நாய்கள் ஓடும்போது நாக்கை வெளியே தொங்கவிடுவதைக் காணலாம்.

நாய்க்கு வியர்வை நாவினாலேயே வெளியேற்றப்படுகின்றது. இதனால் நாய்கள் வியர்வையை வெளியேற்றுவதாக நாவை தொங்கவிட்டு ஓடுகின்றன.

5. மழை நாட்களில் மனிதனின் உடலில் இருந்து வெளியேற்றப்படும் சிறுநீரின் அளவு கூடுதலாக இருக்கும்.

மழை நாட்களில் சூழலின் வெப்பநிலை குறைவாகக் காணப்படுவதால் வியர்வை மூலம் அகற்றப்படும் நீரின் அளவு குறைக்கப்படுவதனால் அந்நீர் சிறுநீராக கழிக்கப்படுகின்றது.

6. பூமியில் ஒரு மீற்றர் பாயக்கூடியவர் சந்திரனில் ஆறு மீற்றர் பாயக்கூடியதாக இருத்தல்.

புவியின் ஈர்ப்பு சக்தியைவிட சந்திரனின் ஈர்ப்புசக்தி ஆறில் ஒரு பங்காக இருப்பதனால் பூமியில் பாய்வதை விட 6 மடங்கு துர்ததை சந்திரனில் பாயக்கூடியதாக இருக்கின்றது.

7. கட்டிடங்கள் அமைக்க அத்திவாரங்கள் ஆழமாக அமைவதை விட அகலமாக அமைவது அனுகூலமாகும்

அகலமாக அமைக்கும் போது பரப்பு அதிகரிக்கப்படுகின்றது பரப்பு அதிகரிக்கும் போது அமுக்கம் குறைக்கப்படுகின்றது அமுக்கம் குறைக்கப்படும் போது கட்டிடங்கள் அனுகூலமாகின்றன.

8. தென்னை பனை மரங்களிலிருந்து பதநீர் எடுக்கும்போது பதனீர் சேகரிக்கும் பாத்திரத்தினுள் சுண்ணாம்பு பூசுதல்

பதனீரில் வளியிலுள்ள மதுலக்கலங்கள் சேர்வதால் பதனீரின் வெல்லச் செறிவு குறைந்துவிடும் அதாவது பதனீர் அற்ககோலாக மாறிவிடும் மதுலக்கலங்களின் விருத்தியை குறைப்பதற்காக காரத்தன்மையை அதிகரித்தல். மதுலக்கலங்களின் வளர்ச்சியை கட்டுப்படுத்தலாம்.

9. கடலும் வானமும் நீலநிறமாக இருத்தல்

சூரியனின் ஒளிக்கதிர்கள் காற்றுள் ஊடுருவிச் செல்லும் போது காற்றிலுள்ள மூலக்கூறுகளாகப் பிரித்துச் சிதறுகின்றன. இவ்வாறு சிதறும் போது சூரிய ஒளியிலுள்ள மற்றைய நிறக் கதிர்களை விட நீல நிறக் கதிர்களே அதிகஅளவில் சிதறுகின்றன. எனவே வானம் நீலநிறமாகத் தோன்றுகின்றது. இவ்வாறே சூரிய ஒளிக்கதிர்கள் கடல்நீரில் புகுந்து செல்லும் போது நீர்மூலக்கூறுகளால் சிதறும் நீலக்கதிர்கள் கடல்நீரை நீலநிறமாக்குகின்றது.

10. குளவி குற்றிய இடத்திற்கு மேலே சிறிதளவு சுண்ணாம்பு தடவுதல்

குளவி குற்றிய இடத்தில் உண்டாவது ஒருவகை அமிலமாகும் சுண்ணாம்பு ஒரு காரமாகும் ஆகவே அங்கு நடுநிலையாக்கம் ஏற்படுகின்றது.


11. முற்றிய காய்களை சாக்கினுள் சுற்றி வைத்தால் அவை விரைவாகப் பழுக்கின்றன.

நன்கு முற்றிய காய்கள் சுவாசித்தலின் போது சக்தியை வெளியிடுகின்றன. சாக்கு வைக்கோல் போன்றன வெப்பத்தை அரிதிற் கடத்தக் கூடியதாகையால் வெப்பநிலை அதிகரிக்கின்றது. இதனால் நொதியத்தின் தாக்கம் அதிகரிக்கப்பட்டு காய்கள் விரைவாகப் பழுக்கின்றன.


12. சவுக்கு மரத்தின் இலைகள் கூர்மையாக அமைந்துள்ளன.

சவுக்கு மரம் வறண்ட பிரதேசத்திற்குரிய ஒரு தாவரமாகும். அது ஆவியுயிர்ப்பைக் குறைப்பதற்காக இலைகள் பரப்புக் குறைவாகக் காணப்படுவதால் கூர்மையாக அமைந்துள்ளன.

**திருமதி. V. சரவணபவானந்தன்**
**ஆசிரியர்**



அமரர் அருளானந்தம் அருளானந்தஸ்ரீ ஞாபகார்த்த
நூலக திறப்பு விழாவுக்கான மங்கள விளக்கேற்றல் - 2005



அமரர் அருளானந்தம் அருளானந்தஸ்ரீ ஞாபகார்த்த நூலகத்தை
அமரரின் தந்தையார் திறந்து வைக்கிறார் - 2005

# ஐந்து

**பஞ்சகௌவியங்கள்**

பால்
தயிர்
நெய்
கோசலம்
கோமயம்

**ஐம்புலன்கள்**

ஒளி
நாற்றம்
ஓசை
சுவை
ஊறு

**பஞ்சபூதங்கள்**

நீர்
வாயு
தீ
ஆகாயம்
நிலம்

**ஐவகை நிலங்கள்**

முல்லை:- காடும் காடு சார்ந்த இடமும்
குறிஞ்சி:- மலையும் மலை சார்ந்த இடமும்
மருதம்:- வயலும் வயல் சார்ந்த இடமும்
நெய்தல்:- கடலும் கடல் சார்ந்த இடமும்
பாலை:- மணலும் மணல் சார்ந்த இடமும்

**ஐந்தொழில்கள்**

படைத்தல்
காத்தல்
அழித்தல்
மறைதல்
அருளல்

**பஞ்சமாபாதங்கள்**

கள்ளாமை
மாமிசம் உண்ணுதல்
கொல்லுதல்
பொய் கூறுதல்
மதுபானம் அருந்துதல்

**ஐம்பொறிகள்**

கண்
மூக்கு
வாய்
செவி
மெய்

**பஞ்சபாண்டவர்கள்**

தருமன்
வீமன்
அருச்சுணன்
சகாதேவன்
நகுலன்

**பஞ்சபுராணங்கள்**

தேவாரம்
திருவாசகம்
திருவிசைப்பா
திருப்பல்லாண்டு
பெரியபுராணம்

**காற்றின் குணம் ஐந்து**

போக்கு
வரவு
நோய்
கும்பித்தல்
பரிசம்

**ஆற்றுப்படை ஐந்து**

திருமுருகாற்றுப்படை
பொருநராற்றுப்படை
பெரும்பாணாற்றுப்படை
சிறுபாணாற்றுப்படை
தணிகையாற்றுப்படை

**இலக்கணம் ஐந்து**

எழுத்து
யாப்பு
சொல்
பொருள்
அணி

**ஐம்பெருங்குரவர்**

அரசன்
ஆதசிகன்
குரு
தந்தை
மூத்தோன்

**ஐவகைத் தந்தையர்**

பிறப்பித்தோன்
கற்பித்தோன்
மணமுடித்தோன்
அன்னம் தந்தோன்
ஆபத்துக்குதவினோன்

**ஐம்பெருங்குழு**

அரசர்
ஒற்றர்
அமைச்சர்
புரோகிதர்
தூதுவர்

**ஐவகைத் தாயார்**

பாராட்டுத்தாய்
கைத்தாய்
ஊட்டுந்தாய்
முலைத்தாய்
செவிலித்தாய்

**ஐம்பெருங்காப்பியங்கள்**

சிவகசிந்தாமணி
குண்டலகேசி
சிலப்பதிகாரம்
மணிமேகலை
வளையாபதி

**மற்றும்**

அரசன் தேவி
குருவின் மனைவி
அண்ணன் மனைவி
தேவியை ஈன்றாள்
தன்னை ஈன்றாள்

**பாவகை ஐந்து**

வெண்பா
வஞ்சிப்பா
ஆசிரியப்பா
மருட்பா
குவிப்பா

**ச. பிரசங்கா**
**தரம் - 8**

# கேடில் விழுச் செல்வம்

மனித வாழ்க்கைக்குப் பலவகையான செல்வங்கள் தேவைப்படுகின்றன. அவற்றுள் ஒன்று அருட்செல்வம். இதனை வள்ளுவர் தனது குறட்பாவில்

"அருட்செல்வம் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள"

எனக் குறிப்பிட்டுள்ளார். அருட்செல்வம் உயர்ந்தவர்களிடம் மட்டும் தான் இருக்கும் பொருட்செல்வமோ இழிந்தவர்களிடமும் இருப்பதால் அருட்செல்வமே செல்வத்துட் செல்வம் எனக் குறிப்பிட்டுள்ளார். எனவே மனித வாழ்க்கைக்கு பொருட்செல்வமும் தேவையானதே என்பதைக் கூறவந்த வள்ளுவர்.

"அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு"

எனக் குறிப்பிட்டதன் மூலம் வலியுறுத்தியுள்ளார். மக்கட் செல்வம் இன்றியமையாதது எனக் குறிப்பிட்ட வள்ளுவர்

"பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த
மக்கட்பேறல்ல பிற"

எனக் குறிப்பிட்டுள்ளார். எனவே மேற்கூறிய செல்வங்கள் எல்லாம் மனித வாழ்க்கைக்கு இன்றியமையாதவை எனக் குறிப்பிட்டதோடு, இவை எல்லாவற்றுக்கும் மேலான செல்வமாக கல்விச் செல்வமே மதிக்கப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளமை குறிப்பிடப்பட்டதாகும். இதனையே

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றையவை"

எனக் குறிப்பிட்டுள்ளார். எனவே இவையனைத்திலும் மேலான செல்வமாக மதிக்கப்படுவது கல்விச் செல்வமே என்று கூறுவது சாலவும் பொருந்தும்.

கல்விச் செல்வம் கைவரப் பெற்ற ஒருவனுக்கு மேலே சொல்லப்பட்ட பல்வகைச் செல்வங்களும் வந்தடைந்து அவன் பால் நிலையாக நிற்குமென்பது திண்ணம்.

செல்வத்துட்செல்வம் என வர்ணிக்கப்படுகின்ற அருட்செல்வம் கூட ஒரு கல்விச் செல்வம் உள்ளவனிடம் தான் இருக்கும் என்பது உண்மை என்பதை வள்ளுவரே கல்விச் செல்வம் உள்ளவர்தான் உயர்ந்தவர்கள் என்பதை ஏற்றுக் கொண்டார்.

பொருட்செல்வத்தைக் கூடப் பேணிப்பாதுகாப்பதற்கு கல்வியறிவு முக்கியம். கல்விச் செல்வம் இல்லாதவன் தனக்குக் கிடைக்கும் பொருட்செல்வத்தையெல்லாம் தீயவழிகளிலும், வீண்வழிகளிலும் செலவு செய்து அழித்துவிடுவான். எனவே பொருட்செல்வத்தைப் பேணிப்பாதுகாக்க கல்விச்செல்வமே இன்றியமையதாகின்றது.

அருட்செல்வத்தின் பெருமதியை அறிந்து கொள்வதற்கு கல்விச்செல்வமே வழிவகுக்கின்றதென்றால் மிகையாகாது. அதே போலவே மக்கட்செல்வத்தின் அருமை, பெருமைகளை உணரவும் மக்கட்செல்வத்தைப் பேணிப்பாதுகாத்து அவர்களை ஒழுக்க சீலர்களாகவும், வல்லவர்களாகவும், நல்லவர்களாகவும் வளர்ப்பதற்கு, வழிகாட்டுவதற்குப் பெற்றோர்களுக்கு கல்விச்செல்வம் இன்றியமையாததாக அமைகின்றது. என்பது யாவரும் அறிந்த உண்மையாகும்.

இதனாலேதான் நாலடியார் பாடலில்

"குஞ்சியழகும் கொடுத்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து
நல்லம் யாம் என்னும் நடுவுநிலமையால்
கல்வி யழகே அழகு"

எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அனைவராலும் கவனிக்கப்பட வேண்டியதொன்றாகும். மேலும் வள்ளுவர் பார்வையிலிருந்து பார்க்கும் போது

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்கு"

என்னும் குறள் வாயிலாக எண்ணும் எழுத்தும் மக்களுக்கு இருகண்களுக்கு ஒப்பானவை உனக் குறிப்பிட்டுள்ளார். அப்படியே கூறிய வள்ளுவர் அடுத்த குறட்பா மூலம்

"கண்ணுடையவர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையார் கல்லாதவர்"

எனக் கற்றவர்களுக்கும் கல்லாதவர்களுக்கும் உள்ளவித்தியாசத்தை ஒப்பீட்டுக் கூறியுள்ளார். செவிச்செல்வம் செல்வத்துட்செல்வம் எனக்கூறிய வள்ளுவர் வாக்கும் கல்விச் செல்வம் உள்ளவனுக்கு செவிச்செல்வம் வாய்கப்பெறும் என்பதை உணர்த்துகின்றது.

கல்வியின் முக்கியத்துவத்தை எடுத்தியம்பிய ஔவையார்

"கவையாகிக் கொம்பாகி காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள் - சபை நடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டாதவன் நன்மரம்"

என கல்வியறிவு இல்லாதவனை மரத்திற்கு ஒப்பிட்டு கூறியுள்ளார். எனவே மனித வாழ்க்கைக்கு கல்விச்செல்வம் இன்றியமையாததென்பதற்கு மேலும் விளக்கம் வேண்டியதில்லை. கல்விச் செல்வம் கைவரப் பெற்றவருக்கு சென்ற இடமெல்லாம் நன்மதிப்பு காத்திருக்கும். அனைவரும் அவரை வரவேற்று உபசரித்து அணைப்பார்.

இதனாலே தான்

"கற்றோருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு
அரசர்க்கு தன்னாட்டில் மட்டும் சிறப்பு"

என்று ஆன்றோர் கூறினார். கல்வியின் பெருமையை பார்க்கும் பொழுது

"ஒருமைக் கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு
ஏழுமையும் ஏமாப்புடைத்து"

என வள்ளுவர் வாக்கிலிருந்து அறியக்கிடக்கின்றது. அள்ள அள்ள குறையாத செல்வம் இந்தக் கல்விச்செல்வம். இதனையே

"தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்கு
கற்றனைத்தூறும் அறிவு"

என்று கூறினார்கள் எனவே இத்தனை சிறப்புக்கள் மிக்கதான கல்வியே "கேடில் விழுச்செல்வம்" என்பது நன்கு புலனாகின்றதல்லவா! இப்படியான கல்விச் செல்வத்தை கசடறக் கற்று நாட்டின் நல்ல பிரசைகள் உருவாகவேண்டுமென இவ்நூற்றாண்டு விழா சிறப்பு மலரில் கட்டுரை மூலம் தெரிவிப்பதில் பெருமையடைகின்றேன்.

*மிதிலா,*
*நீர்வேலி வடக்கு.*

*திரு. ப. தர்மசங்கரன்*
*பழைய மாணவன்*

# பொது அறிவு

1) இலங்கையின் புகையிரத சந்திப்புக்கள் எவை?
மகோ, பொல்காவலை

2) குறுகிய காலம் வாழ்ந்த இந்தியாவின் கணித மேதை யார்?
ராமானுயன்

3) பொற்கதவு நகரம் எது?
சுமேரிக்கா

4) வெள்ளையரின் கடற்கரை எது?
கினிகட்ற் கரை

5) இலங்கையின் முதலாவது பணக்காரன் யார்?
உப்பாலி விஜயவர்த்தனன்

6) உலகின் கூரை எது?
திபெத்

7) ஐரோப்பாவின் விளையாட்டு மைதானம் எது?
சுவிற்சாந்து

8) சீனாவின் துயரம் எது?
குவாங்கோநதி

9) பொன்வாயில் நகரம் எது?
சான் விரான் சிங்கோ

10) தெற்கே உள்ள பிரித்தானியாவின் நாடு எது?
நியூஸ்லாந்து

11) துருக்கியின் தேசிய விளையாட்டு?
மல்யுத்தம்

12) யப்பானின் தேசிய விளையாட்டு?
கராத்தே

13) கனடாவின் தேசிய விளையாட்டு?
பனிஹொக்தி

14) ஸ்பெயின் தேசிய விளையாட்டு?
ஜல்லிக்கட்டு

15) கிறீஸ்லாந்தின் நீளம் யாது?
2175,600 சதுர கிலோமீற்றர்

16) போர்ணியோவின் பரப்பளவு யாது?
751,100 சதுர கிலோமீற்றர்

17) மடகாஸ்ரின் பரப்பளவு யாது?
587,041 சதுர கிலோமீற்றர்

18) பாபின் தீவின் பரப்பளவு யாது?
507,451 சதுர கிலோமீற்றர்

19) சுமத்திரா தீவின் பரப்பளவு யாது?
473, 605 சதுர கிலோமீற்றர்

20) ஹொன் பரப்பளவு யாது?
230, 455 சதுர கிலோமீற்றர்

21) பெரிய பிரித்தானியாவின் பரப்பளவு யாது?
229, 870 சதுர கிலோமீற்றர்

22) விக்டோரியா தீவின் பரப்பளவு யாது?
217, 291 சதுர கிலோமீற்றர்

23) எவஸ்பிய தீவின் பரப்பளவு யாது?
196, 296 சதுர கிலோமீற்றர்

24) நியூகினியாவின் பரப்பளவு யாது?
808, 510 சதுர கிலோமீற்றர்

25) தென்சீனர்டெலின் பரப்பளவு யாது?
2,974,600 சதுர கிலோமீற்றர்

26) பாவேந்தர் என அழைக்கப்படுபவர் யார்?
பாரதி தாசன்

27) பரசூட்டைக்கண்டு பிடித்தவர் யார்?
ஏ.ஜே.கனேரியன்

28) 1957ம் ஆண்டு விண்வெளிக்கு சென்ற முதலாவது உயிரினம் யாது?
லைகா

29) விண்வெளிக்கு முதன்முதலாக சென்ற பெண்மணி யார்?
வலன்டீனா தெரங்கோவா

30) விண்வெளியை முதன்முதலாக வலம் வந்தவர்?
யூரிசுகாரியன்

31) மழைகாலத்தில் மாமிசத்தையும் கோடை காலத்தில் தாவர உண்ணியையும் உண்ணும் மிருகம் யாது?
கரடி

32) ஒரு துளி இரத்தத்தில் உள்ள சிவப்பு அணுக்களின் எண்ணிக்கை யாது?
30கோடி சிவப்பு அணுக்கள்

33) திருக்குறல் உலகம் முழுவதும் எத்தனை மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது?
82 மொழிகளில்

***சு. பரிசாந்***
***தரம் – 9***

## குருவி

குருவி சிறகை விரிக்குது
உச்சி வானில் பறக்குது
மரத்தின் மேலே நிற்குது
எட்டி எட்டிப் பார்க்குது
இனிய பழத்தைக் காணுது
கொத்திக் கொத்தித் தின்னுது
சின்னச் சொண்டைத் திறக்குது
தீன் தன்னைத் தின்னுது
அருமைக் குஞ்சை அணைக்குது
கண்ணை மூடித் தூங்குது
மீண்டும் கண்ணைத் திறக்குது
கூட்டை விட்டுப் பறக்குது.

**ர. அனுசாந்**

**தரம் - 2**

கண்ணின் மணியாய்
அம்மா அப்பா ஆனவரே
அன்புத் தெய்வம் போன்றவரே
என்னைப் பெற்று வளர்த்தவரே
எல்லாம் தந்து காத்தவரே
சின்னக் கண்ணன் சொல்லுவதை
சற்றே நின்று கேளுங்களேன்
படித்து நானும் ஆளாகி
வளர்ந்து நல்ல தொழிலாற்ற
கண்ணின் மணியாய் உங்களையே
என்றும் வைத்துக் காப்போமே.

**ச. கஸ்தூரி**

**தரம் - 2**

# விஞ்ஞானத்தின் வளர்ச்சியின் பயன்கள்

கல்லையும் கல்லையும் உரசி தீயை கண்டு பிடித்ததிலிருந்தே மனிதனின் கண்டு பிடிப்புக்கள் ஆரம்பித்தன. அன்றிலிருந்து இன்றுவரை விஞ்ஞானம் வானளாவி வளர்ந்து விண்ணிற்கும் மண்ணிற்கும் இடையே பலவித்தைகள் செய்து கொண்டிருக்கிறது.

விஞ்ஞானத்தின் வளர்ச்சியால் இன்று எமக்கு எவ்வளவு நன்மைகள் ஏற்பட்டுள்ளன. மனிதன் கருவிலே தோன்றிய காலத்தில் இருந்து அவனது ஆயுள் முடிந்த பின்பும் விஞ்ஞானத்தின் பணி தொடர்வதைக் காணவாம்.

மருத்துவத்துறையில் நோய்களைக் கண்டு பிடிப்பதற்கும், கண்டுபிடித்தபின் அவற்றைக் குணப்படுத்துவதற்கும் விஞ்ஞான உபகரணங்கள் பெரிதும் உதவுகின்றன. இதனால் இன்று இறப்புக்கள் குறைந்து மக்களது வாழ்க்கைத்தரம் உயர்கின்றது. இதற்கும் விஞ்ஞான தொழில்நுட்பக் கண்டு பிடிப்புகளும், மருத்துவ ஆராட்சி முடிவுகளும் உதவுகின்றன.

கல்வித் துறையில் இன்று விஞ்ஞானத்தின் பங்களிப்பு அளப்பரியது. தொலைக்காட்சி வானொலி, மட்டுமன்றி கணனியின் உபயோகம் தல்விக்கான ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் நவீன கற்பித்தல் முறைகள் யாவும் விஞ்ஞானத்தின் விளைவுகளாகும். போக்குவரத்துத் துறையின் முன்னேற்றத்திற்கு விஞ்ஞானம் ஆற்றிவரும் சேவைகள் குறிப்பிடக்கூடியவை. பரந்த உலகம் இன்று போக்குவரத்தில் ஏற்பட்ட வளர்ச்சிகளேயாகும். உலகின் எப்பாகத்திலிருந்தும் நினைத்தவுடன் நினைத்தவிடத்திற்குச் செல்லக் கூடியதாக இருப்பது விரைவான போக்குவரத்து வசதியாகும். விண்வெளிப் பயணங்களும் கோள்கள் வானமண்டலங்கள் பற்றிய ஆராட்சிகளும் விஞ்ஞானத்தின் விருத்தியினாலேயாகும்.

விவசாயத்துறையில் நவீனமுறைகள் புகுத்தப்பட்டு விளைச்சல் பெருகியிருக்கிறது. இயற்கை அழிவுகள் முன்கூட்டியே அறியப்பட்டு தவிர்க்கப்படுகின்றன, பாதுகாக்கப்படுகின்றன. விளை பொருட்கள் விளைந்தபின் நவீன முறைகளில் அறுவடை செய்யப்படுவதுடன், நீண்டகாலத்துக்குக் கெட்டுப் போகாமல் நவீன முறைகளில் பாதுகாக்கப்படுகின்றன.

சமையலிலும் இன்று அடுப்புக்கள், மின்சாரத்தினால் இயங்கும், இடிக்கும் அரைக்கும் கருவிகள், குளிர்சாதனப் பெட்டிகள் போன்ற உபகரணங்கள் பயன்படுத்தப்படுகிறது.

விளையாட்டுத்துறையிலும், பொழுதுபோக்குத் துறையிலும் இன்று நவீனமயம் புகுந்துள்ளது. மக்களது பொருளாதார நடவடிக்கைகள் யாவும் இன்று பெருமளவிற்கு விஞ்ஞானத்தின் உதவியால் விரைவாகவும் இலகுவாகவும் செய்து முடிக்கப்படுவதுடன் பொருட்களின் உற்பத்தியும், தரமும் உயர்ந்து காணப்படுகின்றன.

இவ்வாறு பல்வேறு துறைகளாலும் நன்மை புரிந்து வரும் விஞ்ஞான வளர்ச்சியே சிலசந்தர்ப்பங்களில் மனிதனின் அழிவிற்கும் காரணமாகின்றது. போர் ஆயுதங்கள், அணு ஆயுதங்கள், யுத்தவிமானங்கள், யுத்தக் கப்பல்கள், துப்பாக்கிகள், ஏவுகணைகள் என மனிதகுலத்தின் பேரழிவுக்கு வழிவகுக்கும் இவையும் விஞ்ஞானத்தின் கண்டுபிடிப்புக்களே. இவை இன்று உலகில் பல்வேறு பகுதிகளிலும் விபத்துக்களை விளைவித்து வருவதனை வேதனையுடன் கண்டு வருகிறோம். தீயவற்றை விடுத்து நல்லனவற்றைப் பகுத்தறிந்து அன்னப்பறவை நீரைத் திவிர்த்துப் பாலை அருந்துவது போல் நாமும் விஞ்ஞானம் தரும் நன்மைகளைப் பயன்படுத்தி நன்மைபெற வேண்டுமே ஒழிய தீயனவற்றிற்கு இடம் தரக்கூடாது. விஞ்ஞானத்தின் வளர்ச்சி மனிதகுலத்தின் நல்வாழ்விற்கு பயன்பட வேண்டும். எனவே விஞ்ஞானத்தின் வளர்ச்சி நல்லவழியில்ப் பயன்படுத்தப்படவேண்டும்.

**ச. பிரசங்கா**

**தரம் – 9**

# எமது கிராமம் நீர்வேலி

இலங்கையின் வடபகுதியிலுள்ள யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை செல்லும் வீதியில் 7வது மைலில் நீர்வேலி அமைந்துள்ளது.

எனது கிராமத்திற்கு நீர்வேலி எனப்பெயர் வருவதற்கு காரணம் வலிகிழக்குப் பகுதியில் பலபாகங்களிலிருந்து பாய்ந்து வருகின்ற மழைநீரைக் தன்னுள்ளடக்கி அதனை தனக்கு நீர் நிலையான வேலியாக்கி தன் தன் கிழக்கெல்லையாக்கிக் கொண்டதே காரணமாகும்.

மேலும் இக்கிராமத்தின் எல்லையாக வடக்கே வண்ணாத்துரவும், தும்பதுறையும், மருதங்குளம் பாறைவன் கேணியும் குறிப்பிடத்தக்கது. மேற்கெல்லையாக பூதவராயக் கேணியும், வேலியங்குளமும் குறிப்பிடத்தக்கது. தெற்கெல்லையாக பூதர்மடம் கேணி, கிராஞ்சிக்குளம் என்பன குறிப்பிடத்தக்கதாகும்.


மேலும் கிராமத்தை நிலப்பகுப்பிற்கு ஏற்ப பிரித்துள்ளனர். யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதி கிழக்குப் பகுதி மருதநிலப்பகுதியாகும். நீர்வேலி புன்னாலைக்கட்டுவன் வீதிக்கு வடக்கே 1/4மைல் தூத்தில் சிறுப்பிட்டி கிராமம் தரிசு நிலமாகவும் இராசபாதைக்கு கிழக்கால் அமைந்த பகுதி மணலும், களியும் சேர்ந்த இருவாட்டி நிலமாகவும் இராசபாதையின் மேற்குப் பகுதி செம்மண்ணும் செம்மண் களியும் சேர்ந்த நிலப்பகுதியாகவும் காணப்பட்டது. நீர்வேலியின் ஈசானபகுதி நீர்நிலையும், வயலும் தோட்டமும் கொண்டதாகவும், கரந்தன் பகுதி காட்டுப் பகுதியாகவும் பிரிந்து நோக்கியுள்ளவர்.

ஸ்ரீவஸ்ரீ சிவசங்கரபண்டிதர் என்னும் சைவப்பெரியார் இக்கிராமத்தில் வாழ்ந்து சைவப்பணி, தமிழ்ப்பணியாற்றியதோடு திண்ணைப் பள்ளிக்கூடமமைத்து சமஸ்கிருத தமிழ் இலக்கண வகுப்புக்கள் நடாத்தி வந்தமையும் நீர்வேலியின் புகழுக்கு ஒரு காரணமாகும் கல்வியறிவு புகட்டும் கல்விச்சாலைகளில் ஊருணியாக அமைந்துள்ள ஒரு கல்லூரியும் ஆங்காங்கே அமைந்துள்ள நான்கு வித்தியாசாலைகளும், மேலும் பாலர் முன்பள்ளிகளும் பாலர் பகல்விடுதியும் அமைந்து கல்விப்பணியாற்றுகின்றன. இவைகளும் கிராமத்தின் புகழிற்கு இன்றியமையாதன.

கலைவளர்க்கும் கலைநிலையங்களும், வாசிகசாலைகளும், இந்துமதவளர்ச்சித் தொண்டு செய்யும் சமய அபிவிருத்தி மன்றங்களும், விளையாட்டுக் கழகங்களும் ஆங்காங்கே அமைந்து செயலாற்றுகின்றன.

மேலும் கத்தோலிக்க மதவளர்ச்சிக்கு கத்தோலிக்க தேவாலயமும் பாடசாலைகளும் அமைந்து நிற்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

நீர்வேலிக் கிராமத்தின் எல்லைகள் நாலாபக்கங்களும் ஆலயங்கள் அமைந்து காவல் தெய்வங்களாக விளங்கும் சிறப்பு மேலும் கிராமத்தின் சிறப்பிற்கும் புகழும் ஒரு படிக்கல்லாகும்.



அமரர் அருளானந்தஸ்ரீ ஞாபகார்த்த
நூலக திறப்புவிழா – 2005




அமரர் அருளானந்தஸ்ரீ ஞாபகார்த்த
நூலக திறப்புவிழா – 2005

ஏரும் இரண்டுள தாய் இல்லத்தே வித்துளதாய் நீரருகே சேர்ந்த நிலமுமாய் - ஊருக்கும் சென்று வரவணித்தாய் செய்வாரும் சொற்கேட்டல் என்றும் உழவே இனிது.

ஈசானத்திலே - சப்தகன்னிகள் கோயிலும் அதைச்சூழ அண்ணமார் கோவில் வைரவர் கோயில் என்பனவும்.

கிழக்கில் - முழக்கம்பிட்டி நாச்சிமார் கோயிலும்

தென்கிழக்கில் - நீர்வேலியையும் கோப்பாயையும் பிரிக்கும் எல்லையில் நாச்சிமார் கோயிலும் இலுப்பையடி பிள்ளையார் கோயிலும்.

தெற்கே - ஊரெல்லைக் கண்மையாக வெள்ளந்தள்ளி அம்மன் ஆலயமும் வைரவர் கோயிலும் துர்க்கையம்மன் கோயிலும்.

தென்மேற்கே - கோப்பாய், நீர்வேலி, உரும்பிராய் ஆகிய கிராமங்களைப் பிரிக்கும் எல்லையில் கிவபூதவராயர் கோயிலும்.

மேற்கே - மாலைவைரவர் கோயிலும்.

வடமேற்கே - வைரவர் கோயிலும்.

வடக்கே - மாசுவன்வைரவர் கோயில் மனோன்மணி அம்மன் கோயில், நாச்சிமார் கோயில் என்பனவும்.

வடஎல்லைக்கண்மையாக - மீனாட்சியம்மன் கோயில் காமாட்சி அம்மன் கோயில் என்பனவும் அமைந்து சிறப்பிக்கின்றன.

யாழ்ப்பாணம் பறங்கியராட்சிக்குட்பட்ட காலத்தில் சங்கிலியன் இறந்தபின் பரநிருபசிங்கமும் பின்னர் அவர்மகன் பரராசசிங்க முதலியும் இறந்தபின் பறங்கிக்காரர் சைவ ஆலயங்களை இடிப்பித்தனர் என்றும் அக்காலத்தில் இருந்த சிவப்பிராமணர்களாகிய கெங்காதரஐயர் வம்சத்தினர் ஆலய விக்கிரங்களையும் தட்டு முட்டுக்களையும் கிணறுகளிற் போட்டுவிட்டு நீர்வேலியிலும், வடமராட்சிலும் குடியேறியிருந்தனர் என்றும் யாழ்ப்பாண வைபவமாலையில் முதலியார் குலசபாநாதன் குறிப்பிட்டுள்ளார். எனவே இக்கிராமம் தொன்றுதொட்டு இந்துசமய பாரம்பரியங்களுக்கும் வளர்ச்சிக்கும் நிலைக்களனாக அமைந்துள்ளதென்பது புலனாகின்றது. இதுவும் கிராமத்தின் புகழிற்கு ஓர் அம்சமாகும்.

மேலும் இக்கிராமத்தவர்கள் தொண்டுதொட்டு வள்ளுவர் கூறியவழியில் நின்று விருந்தோம்பலில் சிறந்து விளங்கியுள்ளார்களென்பதும் அப்பண்பு இக்கிராம மக்களுக்குப் பாரம்பரியமானதென்பதும் யாவராலும் போற்றப்படும் உயர்ந்த பண்பாகும். இவ்வுயர்ந்த பண்பும் கிராமத்தின் புகலில் இடம் பெறும் ஓர் அம்சமாகும்.


மேலும் "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பதை நிலைநாட்ட நோய்களைக் குணமாக்க சித்தவைத்திய முறையில் வைத்தியசாலைகளும், மேலைநாட்டு வைத்தியசாலைகளும், சுகாதாரப் பராமரிப்பு நிலையங்களும் அமைந்து சேவையாற்றிவருகின்றமையும் ஓரம்சமாகும். இன்னும் கிராமத்தின் மேற்கு ஊர்களிலிருந்து பாய்ந்துவரும் மழைநீர் கிழக்குநோக்கிப் பாயும் ஆறு போன்ற பெரும் வெள்ள வாய்க்கால்கள் நன்கு அமைந்துள்ளமை இக்கிராமத்துக்குப் பெரிதும் பெருமைதருவதாக அமைந்துள்ளமையும் கிராமத்தின் புகழுக்கு ஒரு அச்சமாகும்.

மேலும் கிராமத்தின் ஊராட்சியின் வளர்ச்சியும் அமைவும் இக்கிராமத்தின் புகழில் இடம் பெறும் அங்கங்களாகும்.

கிராமத்தின் எல்லைகளிலே கிழக்கே நீர்நிலைக்கு அண்மித்ததாக "சிவியாக்காடு, பன்னாலை, தந்திராய்" ஆகிய மூன்று காடுகளும் வடக்கே ஊரெல்லையில் "காளயன் மொண்டி" என்னும் சுடுகாடும் அமைந்துள்ளதையும் கிராம அமைப்பின் சிறப்பிற் குறிப்பிடப்பட வேண்டியனவாகும்.

எனவே பலவகைச் சிறப்புக்களும் கொண்டதே இந்தப் "புகழ்பூத்த நீர்வேலி" என்பது வெளிபடையாகின்றது.

ப. மோகனவிழி
தரம் - 9



சுவிஸ் வாழ் பழைய மாணவர் திரு. K. யுவனேசன்
மேந்தலை எறியி (OHP) அன்பளிப்பு செய்தபோது - 2005



2005ல் இல்ல மெய்வல்லுனர் போட்டிக்கான
பாடசாலைக் கொடி ஏற்றப்பட்டபோது

# சமூக அசைவில் விளையாட்டின் பங்கு

சமூகம் என்பது தனிமனிதன், குடும்பம் என்பனவற்றின் ஒன்றிணைந்த செயற்பாடே சமூகம் ஆகும். இங்கு சமூக அசைவு என்னும் போது தனிநபர் அல்லது குடும்பம் தனது குறிப்பிட்ட நிலையிலிருந்து முன்னோக்கியோ அல்லது பின்நோக்கியோ நகர்வதே சமூக அசைவு எனப்படுகிறது. இவ்வாறான சமூக அசைவு நடைபெறுவதற்கு ஒருகாரணியாக விளையாட்டு காணப்படுகிறது.

ஒரு குறிப்பிட்ட நபர் ஒருகுறிப்பிட்ட விளையாட்டில் பங்குபற்றுகின்ற போது ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடித்து ஒழுக்கமாக விளையாடப் பழகிக் கொள்கின்றார். இவ்வாறு விளையாடுகின்ற போது விதிகளை அவன் மீறிநடக்கின்ற போது அவனுக்கு தண்டனைகள் வழங்கப்படுகின்றது. இவ்வாறு அவன் விளையாட்டில் ஒழுங்குமுறைகளைக் கைக்கொண்டு விளையாடப் பழகின்றானோ அதே போல் அவன் குறிப்பிட்ட சமூகத்தின் ஒழுக்க விதிகளை கடைப்பிடித்தவனாக சமூகத்தில் திகழ்வான். இவ்வாறு ஒவ்வொருவரும் விளையாட்டுகளில் பங்குகொள்வதன் மூலம் சிறந்த ஒரு சமூகத்தை உருவாக்கிக் கொள்ள முடியும்.

மேலும் விளையாட்டில் ஈடுபடுவதன்மூலம் விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு, ஒருவருக்கு கட்டுப்படுதல், பெரியோரை மதித்து நடத்தல் போன்ற பண்புகள் உருவாகும் இப்பண்புகள் ஒரு சிறந்த சமூகம் உருவாகுவதற்கு வழிவகுக்கின்றன. சமூகத்திலும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்தல், மற்றவர்களை மதித்து நடத்தல் போன்ற பண்புகள் உருவாதல் சமூகம் ஒரு உயர்ந்த நிலைக்கு வருவதற்கு வழிவகுக்கும்.

இவ்விளையாட்டுச் செயற்பாடானது பலசமூகங்களை இணைத்து பெரிய ஒரு சமூகத்தை உருவாக்கக் கூடியது. அதாவது விளையாட்டுப் போட்டிகளும் எல்லா சமூகங்களுக்கிடையேயும் நடைபெறுகின்ற இவ்வாறு சமூகங்களுக்கிடையில் போட்டி நடைபெறுவதால் அக்குறிப்பிட்ட சமூகங்களுக்கிடையில் புரிந்துணர்வு, விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கு என்பன உருவாகி சமூகங்களுக்கிடையிலான தொடர்புகள் அதிகரிக்கின்றன.

அடுத்து சமூகத்தினரிடையே உயர்சமூகம், மத்தியசமூகம், தாழ்ந்தசமூகம் என வேறுபாடுகள் காணப்படுகின்றன. இவ்வாறான வேறுபாடுகள் விளையாட்டில் ஓரளவு நிவர்த்தி செய்யப்படுவதைக் காணலாம். உதாரணம் ஆரம்பகாலங்களில் அமெரிக்காவில் கறுப்பின மக்கள் தாழ் சமூகத்தினர் என ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தனர். ஆனால் விளையாட்டு துறையானது இன்று வளர்ச்சியடைந்ததனால் அமெரிக்காவின் மெய்வல்லுனர் போட்டிகளில் அதிகளவில் கறுப்பினத்தவர்களே அதிகளவில் பங்கு பற்றுகின்றனர். அவர்கள் பங்குபற்றினாலும் அவர்களை ஒதுக்கி வைக்காமல் உயர்ந்த சமூகம் என கருதப்பட்ட வெள்ளை இனத்தவரும், தாழ்ந்த சமூகத்தினரான கறுப்பு இனத்தவர்களும் ஒன்று சேர்ந்து நின்று நாட்டுக்காக பாடுபடுவதை நாம் காணலாம். இவ்வாறு சமூகங்களுக்கிடையேயான பிரிவுகளை அகற்றி சமூக முன்னேற்றத்திற்கு விளையாட்டுத்துறை மிகவும் உதவுகிறது.

ஒரு வீரன் போட்டிகளில் பங்கு பற்றி தோல்வியடைகின்ற போது அதனை ஏற்கப் பழகிக் கொள்ள வேண்டும். அதற்கேற்ப தன்னை மாற்றிக் கொள்கிறான். இவ்வாறு அவன் பழகிக் கொள்வதனால் வாழ்க்கையில் ஏற்படுகின்ற இழப்புக்கள், தோல்விகள் என்பவற்றை தாங்கிக் கொள்கிறான். இவ்வாறுஇவன் விளையாட்டின் மூலம் இவற்றைப் பெற்றுக் கொள்ளாது இருந்திருந்தால் அவன் தோல்விகள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் மனக்குழப்பத்திற்கு உள்ளாவான். இதனால் சமூகம் பின் தள்ளப்பட்டுவிடும். இவற்றை விளையாட்டுக்கள் நிவர்த்தி செய்து சமூகத்தை முன்நோக்கி நகர்த்துகின்றன.

விளையாட்டுக்களில் ஈடுபடுவதன் மூலம் சிறந்த தலைமைத்துவம், ஆளுமை என்பவற்றைப் பெற்றுக்கொள்ளலாம். குறிப்பிட்ட விளையாட்டுக் குழுவிற்கு தலைமை தாங்குகின்ற போது அவன் அந்தக் குழுவை எவ்வாறு செயற்படுத்துவது என்ன நடவடிக்கைகளை மேற்கொள்வது போன்றவற்றை பழகிக் கொள்கின்றான். இதன் மூலம் சமூகத்தில் சிறந்த தலைமைத்துவத்தை பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும். இதன் மூலம் சமூகசெயற்பாடுகள் சிறப்பாக அமைய வழிவகுக்கின்றன.

இவ்வாறாக விளையாட்டானது ஒருசிறந்த சமூகத்தை உருவாக்குவதற்கும், அது உயர்நிலை அடைவதற்கும், சமூகங்களுக்கிடையிலான தொடர்புகளை ஏற்படுத்தவும் சமூகப் பாகுபாடுகளைக் களையவும் சமூக தலைமைத்துவத்தினை ஏற்கவும் உறுதுணை புரிகின்றது. இவ்வாறு சமூக அமைப்பில் விளையாட்டானது செல்வாக்குச் செலுத்துவதை அவதானிக்க முடிகிறது.

**செல்வி ம. வசந்தா**
**ஆசிரியை**



# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

நாவலர் பெருமான் சைநெறி தழைத்தோங்கவும், தமிழ் மொழி செழித்து வளரவும் பெரும் பணிகள் ஆற்றியவர் ஆவார். அவர் யாழ்ப்பாணத்து நல்லூரிலே கந்தப்பிள்ளை சிவகாமியம்மையார் என்போருக்கு மகனாக 1822 ஆம் ஆண்டில் பிறந்தார். இலங்கையும் இந்தியாவும் அந்நியர் ஆட்சியின் கீழ் அப்போது இருந்தது. சைவமும் தமிழும் பெரும் ஆபத்துக்களை எதிர்நோக்கிய காலப்பகுதியிலே தோன்றியவர் தான் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர். அவருக்கு பெற்றோர் இட்ட பெயர் ஆறுமுகம். அவரின் கல்விப் புலமையையும், நாவன்மையையும் சைவத் தமிழ்ப்பணிகளையும் பாராட்டித் திருவாவடுதுறை ஆதீனம் அவருக்கு "நாவலர்" என்ற பட்டத்தை வழங்கியது. சைவம் காத்த நாவலர் பெருமானைச் சைவமக்கள் "ஐந்தாம் குரவர்" எனப்போற்றுகின்றனர். தமது இளமையிலே நல்லூர் சுப்பிரமணிய உபாத்தியாயர், இருபாலை சேனாதிராய முதலியார், நல்லூர் சரவணமுத்துப்புலவர் என்போரிடம் குருகுல முறைப்படி இலக்கிய இலக்கணங்களையும், சைவசமய சாஸ்திரங்களையும் பயின்றார். வடமொழியையும் கற்றார். யாழ்ப்பாணம் வெஸ்லியன் மெதடிஸ்த மிஷன் மத்திய கல்லூரியில் ஆங்கிலக் கல்வியைக் கற்றார். அக்கல்லூரியில் சிலகாலம் ஆசிரியராகவும் விளங்கினார்.

நாவலர் பெருமான் தமிழையும் சைவத்தையும் இரு கண்கள் எனக்கொண்டு வாழ்ந்தார். பிரசங்க வன்மை வாக்குச் சாமர்த்தியர், நல்லொழுக்கம், சிவபக்தி, சிவனடியார் பக்தி என்பன இளமைக் காலந்தொட்டு அவரிடம் காணப்பட்டன. சைவத்தையும் அழியவிடாது பாதுகாக்க நாவலர் எடுத்த முயற்சிகள் பல. புறச்சமயம் புகாது. மக்களை சைவசமயத்தில் நிலைத்து நிற்கச்செய்ய அரும்பாடுபட்டார். சைவசமயத்தவர் ஒரு சிலரிடம் காணப்பட்ட தவறான பழக்கவழக்கங்கள், செயல்கள் என்பனவற்றை நீக்க முயன்றார். சைவப்பாடசாலைகளை நிறுவினார். அவர் நிறுவிய முதலாவது பாடசாலை வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலையாகும். அது 1848ஆம் ஆண்டில் நிறுவப்பெற்றது. தமிழ்நாடு சிதம்பரத்திலும் சைவப்பிரகாச வித்தியாசாலை என்னும் பெயரில் பாடசாலை ஒன்றை நிறுவினார். அவ்வித்திசாலைகளில் போசிப்பதற்குச் சைவசமய நூல்களைப் பிரசுரித்தார். அதற்காகச் சென்னையிலும், யாழ்ப்பாணத்திலும் அச்சுக் கூடங்களை நிறுவினார். சைவவினாவிடை, பாலர்பாடம், பெரியபுராண வசனம், கந்தபுராண வசனம், திருவிளையாடற் புராண வசனம் முதலிய பல நூல்களை எழுதி அச்சிட்டு வெளியிட்டார்.

ஏடுகளில் எழுதப்பட்டுள்ள பல பழந்தமிழ் நூல்களைப் பரிசோதித்து அச்சில் பதிப்பித்தவரும், அத்துறையில் ஏனையோருக்கு வழிகாட்டியாக விளங்கியவரும் நாவலர் பெருமானே ஆவர்.

சைவத் தமிழ்ப்பணிகளை இடையூறின்றிச் செய்வதற்குத் தமக்குக் கிடைக்கும் உத்தியோகங்களையும் தியாகஞ் செய்தவர் நாவலர் பெருமான். தமது வாழ்நாள் முழுவதும் பிரமச்சாரியாகவே வாழ்ந்தவர்.

சிவாலயங்களிலும் மடாலயங்களிலும் சைவசமய உண்மைகளை எடுத்துக்கூறி பிரசங்கம் செய்தல், புராணபடனம் செய்தல் என்பவற்றினால் சைவப் பிரசாரம் செய்தார் நாவலர். அத்துடன் துண்டுப்பிரசுங்களை வெளியிட்டு சைவமக்களிடையே புகுந்துள்ள மாசுகளை நீக்கிப் புறச்சமயத்தவரின் தீவிர பிரசுரத்தைத் தடுக்க முற்பட்டார்.

நாவலர் வெள்ளிக்கிழமைகள் தோறும் சைவப்பிரசங்கம் செய்து வந்தார். அதனால் சைவமக்கள் மதம் மாறாது தடுக்கப்பட்டனர். அந்நியர் ஆதிக்கத்தினால் மங்கிவந்த சைவம் மீண்டும் தழைத்தோங்கியது. சைவமக்கள் திருநீறு முதலிய சிவசின்னங்களை அணியவும், தேவாரம், திருவாசகம் முதலிய திருமுறைகளை ஓதவும், ஆலயங்களில் சைவாகம முறைப்படி பூசை வழிபாடுகள் நடைபெறவும் வழிவகுத்தவர் நாவலர் பெருமானே ஆவார்.

திருக்கேதீஸ்வரம் கீரிமலைச் சிவன் கோவில் என்பனவற்றின் தொன்மைச் சிறப்புக்களை மக்களுக்கு எடுத்துக் கூறினார் நாவலர் பெருமான். 1879ஆம் ஆண்டு காத்திகை மாதம் மக நட்சத்திரத்தில் இறைபதம் அடைந்தார்.

ந. தர்சிகா

தரம் – 9

# கல்வி

கல்வி
கல்வி என்பது அருமருந்து
கற்றிட வேண்டும் உடனிருந்து
கல்லாதவன் கண் புண்ணென்று
கற்றறிந்தவர் கண்ணே கண்ணென்று
நீதி நூலாம் திருக்குறளும் இயம்பியதே தன் குறட்பாவில்
நீ தெரிந்திருவாய் அதன் கருத்தனை
கல்வி என்றும் தொடர்ந்து வரும்
கருத்துடனே இதைச் செவி மடுப்பாய்
பற்பல கலைகள் நீ படிப்பாய் நீ
பாரினிலே என்றும் சிறந்து நிற்பாய்
பட்டங்கள் பலவும் நீ பெற்றால்
பாரிலுள்ளோர் உன்னைப் போற்றி நின்றால்
இட்ட தெய்வங்கள் துணை புரிந்தால் - நீ
என்றும் உயர்ந்தவன் ஆகிடுவாய் - ஆகையால்
கல்வியை என்றும் கற்றிடுவாய்

லோ. தர்மினா

தரம் – 09

## அறிந்து கொள்ளுங்கள்

1. வேகமாக நீந்தும் மீன் எது?
   சுறா

2. வேகமாக ஓடும் விலங்கு எது?
   சிறுத்தை

3. நாக்கு இல்லாத பிராணி எது?
   முதலை

4. சிறிய இதயம் கொண்ட மிருகம்?
   சிங்கம்

5. நினைவாற்றல் கூடிய விலங்கு எது?
   யானை

6. சத்தம் போடாத விலங்கு எது?
   ஒட்டகச்சிவிங்கி

7. விண்வெளியில் சென்று உயிருடன் மீண்ட முதல் உயிரினம் எது?
   ஈனோஸ் (குரங்கு)

8. விண்வெளிக்குச் சென்ற முதல் உயிரினம்?
   லைக்கா (நாய்)

**செல்வி.கு.காயத்திரி**
**தரம் - 03**

## சிந்தனைத் துளிகள்

| | | |
|---|---|---|
| 01. வணங்கத் தக்கவர்கள் | :- | தாய், தந்தை |
| 02. வந்தால் போகாதது | :- | புகழ், பழி |
| 03. போனால் வராதது | :- | மானம், உயிர் |
| 04. அடக்க முடியாதது | :- | ஆசை, துக்கம் |
| 05. பிரிக்க முடியாதது | :- | பந்தம், பாசம் |
| 06. அழிவைத் தருவது | :- | பொறாமை, கோபம் |
| 07. கடைத்தேற வழி | :- | உண்மை, உழைப்பு |
| 08. வருவதும் போவதும் | :- | இன்பம், துன்பம் |
| 09. மிகமிக நல்ல நாள் | :- | இன்று |
| 10. மிகப் பெரிய வெகுமதி | :- | மன்னிப்பு |
| 11. மிகவும் வேண்டாதது | :- | வெறுப்பு |
| 12. மிகக் கொடிய நோய் | :- | பேராசை |
| 13. மிகவும் சுலபமானது | :- | குற்றம் காணல் |
| 14. விலக்க வேண்டியது | :- | விவாதம் |
| 15. நம்ப முடியாதது | :- | வதந்தி |

**செல்வன். சௌ. நிலக்சன்**
**தரம் - 03**

## பாட்டி

பாட்டி நல்ல பாட்டி
பாட்டி எங்கள் பாட்டி
பல்லு இல்லாப் பாட்டி
கட்டு உடலும் வற்றி
ஒட்டிப் போன பாட்டி
தலை மயிரும் வெள்ளை
